கவியுலகப் பூஞ்சோலையின்

# கவிச்சாரல் 2019

## ஐந்திணை கவியரங்கம்

ஏற்காடு - தமிழ்நாடு


## தமிழ்நெஞ்சம்

TAMILNENJAM

59, rue des Entrechats , 95800 Cergy - France

கவியுலகப் பூஞ்சோலையின்

# கவிச்சாரல் 2019

## ஐந்திணை கவியரங்கம்
ஏற்காடு - தமிழ்நாடு

குறிஞ்சி
முல்லை
மருதம்
நெய்தல்
பாலை

கவியுலகப் பூஞ்சோலையின்...
கவிச்சாரல் 2019
ஐந்திணை கவியரங்கம்
கவிதைத் தொகுப்பு

தொகுப்பாசிரியர் : ஒரத்தநாடு நெப்போலியன்

வெளியீடு : கவியுலகப் பூஞ்சோலை, தமிழ்நாடு, இந்தியா

நூல் வடிவமைப்பு : தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு
email : editor@tamilnenjam.com

முதல் பதிப்பு : ஜூன் 2019
பக்கங்கள் : 116
அளவு : டெம்மி 1 / 8
விலை : 100 ₹ (INR)

# கவிச்சாரல் 2019

தடாகம் பூத்த தாமரை மலராய்
கவியுலகப் பூஞ்சோலையின்
கவிச்சாரல் 2019
தொகுத்து பதிப்பிக்க
தந்தனர் அன்புக்குறியோர்
பணித்தனர் அன்பால் !

ஐந்திணை அமர்வில்
அமுதமாய்க் கவிகள்
அழகாய்த் தந்தனர்
அருமை பெருமை
அனைத்தும் தனித்தனி சிறப்பு !

தலைமை, சிறப்புசேர்த்து
தனித்துநின்று அணிக்குப்
பெருமை காத்தனர்.

திறமைகள் முழுதும்
அன்பாய்க் காட்டினர்
அன்பையும் பண்பால்
அமுதென ஊட்டினர்
அழகுற தந்தனர் கவிகள் !

வாழ்த்துகிறேன் நானும்
வள்ளலாய்ப் போற்றி !

அன்புடன்

**தமிழ்நெஞ்சம் அமின்**

ஆசிரியர் ‘தமிழ்நெஞ்சம்’ இதழ்
பிரான்சு

# ஐந்திணை வாழ்த்து

### குறிஞ்சி

மலைநிலம்; எம்மூதாதை
மணங்கொண்டு கொள்ளையின்பம்
குலவிட வாழ்ந்து குன்றக்
குகைகளில் தங்கிப்பின்னாள்
தலைமுறை வளர்ந்ததாகச்
சாற்றலாம்,அருவி வேங்கை
புலிமதயானை பொன்மான்
பொலிந்த அக்குறிஞ்சி வாழ்க

### முல்லை

அடர்காடு; முல்லை சூடி
ஆநிரை மேய்க்கும் ஆயர்
விடை கழுத்தினில் கட்டும்
விரிமணியோசை பால் நெய்
தடையின்றி வளை குலுங்கத்
தயிர்கடை மத்தின் ஓசை
இடையிடை மாயக்கண்ணன்
இசைக்கும் வேய்ங்குழலின்பாட்டு

### மருதம்

எருதுகள் பூட்டிப்பொன்னேர்
இயக்கிடும் வேளாண் வாழ்க்கை
மருதமென்றழைத்தார் ஆகா
மணம்நிறை செந்நெல் வெண்ணெல்
குருகுகள் நாரை கூடிக்
குலவிடும் இல்லத்துள்ளோ
மருகிடும் ஊடல் இன்பம்
மருவிடும் செழித்த செல்வம்

### நெய்தல்

புயல்வரும்போக்கறிந்து புறப்படும் நாவாய்
மீன்கள் அயற்புலமெங்கும் காயும்
அழகிய உப்பளங்கள்
மயிலியல் நுளைச்சியர்கள்
மழலை வண்டானம் ஓச்ச
வியப்புறும் நெய்தல் வாழ்க்கை
விரிகடல் சார்ந்ததன்றே

**பாலை**

மலைநிலம் அடர்ந்தகாடு
வயல் வெளி நெல்லுச்சோறு
அலைபுரள் நெய்தலென்றே
அமைந்தது நானிலந்தான்
தலைமக்கள் வேனிற்காலம்
தடையின்றி பொருளீட்டற்குச்
செலுகின்ற பிரிதல் பாலைத்
திணையென வகுத்தாரன்றே

ஐந்திணை நெறியளாவி
அழகியல் வாழ்க்கை ப்பாதை
மைந்தர்கள் வீரம் ஆங்கே
வாழ்கின்ற பல்லுயிர்கள்
சிந்திய தேன் போல் சங்கச்
செந்தமிழ் செப்புகின்ற
ஐந்திணை பேசுகின்றீர்
அன்பரீர் வாழ்க வாழ்க
இப்படியோர் வகைமை
எம்மொழிக்குள்ளும் இல்லை
செப்பிய குறிஞ்சி முல்லை
திகழ்பாலை மருதம் நெய்தல்
ஒப்பிய கடவுளர்கள்
உவந்தநல் உரிப்பொருள்கள்
கைப்பிடிக்குள்ளே காட்டும்
கண்ணாடி யன்றோ வாழ்க்கை
வாழிய மேடையேறும்
மாண்பினர் வாழ்க வாழ்க
வாழிய முகநூல் அன்பர்
வரவரச்செப்பம் கொள்க
வாழிய சங்கப்பாடல்
வகைதேடும் முயற்சி இன்னும்
வாழியவென்றே வாழ்த்தி
மனநிறைவெய்துகின்றேன்

## கவிமுகில் தங்க அன்பு வல்லி

பட்டுக்கோட்டை

# வாழ்க ! வாழ்க!!

உலகத்தில் நிலங்களினை
நான்காக பிரித்தார்!
உயர்வாழ்வு வாழ்தமிழர்
ஐந்தாகப் பிரித்தார்!

நலமான குறிஞ்சியொடு
மருதம் நெய்தல்
நல்முல்லை பாலையெனப்
பகுத்திட்டார் அந்த
நிலங்களது தன்மைகளும்
அங்கேவாழ் கின்றோர்
நிகரில்லா பண்புகளும்
வாழ்முறையும் தொழிலும்

உலக மக்கள் அறிந்திடவே
நன்முறையில் சொன்னார்!
உண்மையில்நாம் தமிழரெனப்
பெருமிதமே கொள்வோம்!

கவிஎழுதல் என்பதென்ன?
உரைநடையை சுருக்கிக்
கருத்துடனே தெளிவாக
புரியவைத்தல் தானே !

கவிஎழுதல் மிகஎளிமை.
கருத்துடனே ஆய்ந்தால்
கணக்குத்தான் போடுதல்போல்
வழிமுறைகள் அறிந்தே

கவிஎழுதும் திறனுள்ளோர்
பாராட்டுப் பெறுவர்
கணக்கற்றோர் கவிஎழுதிப்
பெரும்புகழைப் பெற்றார்!

கவிஎழுதும் அனைவருமே
சிறப்புக்கே உரியர்
கவிநூல்கள் வெளியிட்டோர்
வணக்கத்திற் குரியோர்!

கவியுலகப் பூஞ்சோலை
முகநூல்நற் குழுவே
கவிஞர்கள் மிகவிரும்பும்
நல்லதொரு குழுவே

கவியுலகப் பூஞ்சோலை
செயல்பாட்டை அறிந்த
கவிஞரெல்லாம் மிகமகிழ்ச்சி
நிச்சயமாய்க் கொள்வர்.

கவியுலகப் பூஞ்சோலைக்
கவிஎழுதும் வாய்ப்பை
கவிஞருக்குப் பலவாறு
வழங்குகிறக் குழுவே!

கவியுலகப் பூஞ்சோலை
குழுச்செயல்கள் வாழ்க!
கலந்துகொளும் கவிஞரெல்லாம்
சிறப்புடனே வாழ்க!

தமிழ்ச்செம்மல் கவிமாமணி
**சேலம்பாலன்**
நிறுவனர், தலைவர் - ஈரோடு தமிழ்ச் சங்கப் பேரவை
ஈரோடு - 638004

# குறிஞ்சி

முன்னுரையும் வாழ்த்துரையும்..

உச்சி மலையில ஒத்த மரமடி
ஒத்த மரத்துல உச்சாங் கிளையாடி
உச்சாங் கிளையில ரெட்டக் குருவிங்க
ரெட்டக் குருவிங்க முத்தம் கொஞ்சுதாம்!

உருக்கு வெள்ளியா அருவி தண்ணிதான்
அருவி தண்ணியில் மருந்து மூலிகை
மருந்து மூலிகை கலந்த அருவியில்
நனைஞ்சிக் குளிக்கலாம் நெருங்கி அணைக்கலாம்!

கறுத்த மேககங்க உரசிப் போகுங்க
உரசிப் போகுற ஊசி முகடுங்க
ஊசி முகடுங்க பாசிப் பச்சைங்க
பாசிப் பச்சையில் குறிஞ்சி அழகுங்க!

வானு ஒசரமா வளர்ந்த மலையிது
வளர்ந்த மலையிலே தேனு கூடுங்க
தேனு கூடுங்க தேடிப் போகலாம்
தேடும் தேனுல கோடி சொகமுங்க!

**கவியுலகப் பூஞ்சோலை காலமெல்லாம் வாழியவே!**

தொல்லுலகில் மூத்தகுடி தொட்டெழுதும் வரலாற்றில்
வெல்தமிழர் வாழ்வன்றோ வடித்திருக்கும் தனிப்பெருமை!
அகமென்றும் புறமென்றும் அணிபிரித்தார் தம்வாழ்வை
புகழ்வளர்த்தும் அறம்வளர்த்தும் பொற்றமிழர் தனித்திருந்தார்!
காலமதைச் சிறுபொழுது பெரும்பொழுதாய் பகுத்திருந்தார்
நூலதிகம் படைத்ததுடன் நுட்பமிகு வாழ்வுற்றார்!

வாழ்நிலத்தை மலைக்குறிஞ்சி வனமுல்லை வயல்மருதம்
ஆழ்கடலில் ஓரத்தில் அமைந்திருக்கும் நெய்தலுடன்
பாலையென ஐநிலமாய் விடுத்திருந்தார் பழந்தமிழர்!
கோலமிகு பண்பாட்டுக் கோபுரம்போல் உயர்ந்திருந்தார்!
உரிப்பொருளும் கருப்பொருளும் உய்த்தவரும் கண்டிருந்தார்

ஐந்நிலமும் தனித்தனியே ஆள்வதற்கு தெய்வமுண்டு
செய்ந்நலத்து மாந்தருக்கு சீர்மிகுந்த பெயருமுண்டு
விலங்குண்டு பறவையுடன் பொழுதுமுண்டு இப்படித்தான்
நிலம்பிரித்த வகைமையதும் நீள்புவியில் யாங்குண்டு
மொழியினுக்கு மட்டுமின்றி மண்ணுக்கும் இலக்கணத்தை
வழிமொழிந்த மாத்தமிழர் வாழ்முறையைப் போற்றுதற்கு
கவியுலகப் பூஞ்சோலைக் குழுமத்தார் ஏற்காட்டில்
"கவிச்சாரல்" காண்கின்றார் கவிஞருக்கு ஐந்நிலமும்
பாடுபொருள் ஆக்கிவைத்து பாங்குறவே அழைக்கின்றார்
தேடுபுகழ் தவிஞரெலாம் திசையெட்டும் வருகின்றார்
திருவோங்கு தோழரவவர் நெப்போலி யன்தாமும்
விருதோடு விருந்தளித்து புதுச்சரிதம் படைக்கின்றார்
புவிமீதில் நிலைபெற்று பொழுதெல்லாம் கவிவளர்த்து
கவியுலகப் பூஞ்சோலை காலமெல்லாம் வாழியவே

திருக்குவளை கவிமாமணி
**வெற்றிப்பேரொளி**

## **தென்றல் கவி** (தமிழ்ச்சிட்டு)

பட்டுக்கோட்டை.

இம்மண்ணிலே முந்திப்பிறந்த நிலம்
கல், கரடு, பொற்றை, குன்று, குருகல்,
மலை, அடுக்கம், வெற்பு, ஓங்கல் என்ற பெயர்பலவே
குறிஞ்சியென்ற ஒருபெயரில் அறியப்பெற்ற நிலச்செறிவு

காடடர்ந்து மழை செறிந்து புழு, பூச்சி,
பறவை, விலங்கு மாந்தன் என
பல்கிப் பெருகிய பல்லுயிர் மண்டலம்.

குரங்காயிருந்த முதல் மனிதன்
மேவி இருந்ததும் தாவி இருந்ததும்
நெருஞ்சிப்படர்ந்த குறிஞ்சியில்தானே

அவன் குறுக்கெலும்பு நிமிர்ந்து
மேனிமயிர் உதிர்ந்து முறுக்கிய
உடம்பு திமிர்ந்தெழுந்ததும் குறிஞ்சியில்தானே

குகையில் கிடந்து மரத்தில் படர்ந்து
ஆயுதம் செய்து விலங்கினம் கவர்ந்து
உண்ணத்தொடங்கிய போதில்
நாகரிகம் கண்டு நடைபழகியது குறுஞ்சியில்தானே

எமது மூதாதையராகிய அன்னையும் தந்தையும்
கூடலும் கூடல் நிமித்தமுமாக நள்ளிரவெல்லாம்
கொள்ளை இன்பமாய்க்குலவி இருந்ததும்
வேட்டைச்சமூகமாய் விளையாடிக்கிடந்ததும்
மலையும் மலைசார்ந்த குறிஞ்சியல்லவா.!!!

கருங்காலியும், செம்மரமும், தேக்கும், பாக்கும்
கொன்றையும், ஞாழலும், குங்குமமும், மூங்கிலும்,
செருந்தியும், கடம்பும், ஏழிலைப்பாலையும்,
கோங்கும், வேங்கையும், செண்பகமும், சந்தனமும்
காடெனும் பெரும்பேறாகி விளைந்தது குறிஞ்சியில்தானே.

மொழுமொழுவென்ற மொட்டை மலைகள்
எதற்காகுமென்று இருந்தேன் சிறுவயதில் - ஆஹா
வீட்டில் கட்டுமானம், பளபளத்த தரைகள்
மலைதிருடி வந்தது என்றதும் மலைத்தேன் மலைத்தேனே!!

மரம் தந்தது; மருந்து தந்தது;
மழை தந்தது; தேன் தந்தது;
எல்லைக்காத்தது; வான் நிமிர்ந்தது;
தெய்வமானது; வையம் காத்தது;

குன்றுதோறும் ஆடுவான் குமரன் என்றது;
பல்லுயிர் செறிந்தது; பசுமை நிறைந்தது;

ஆறுகளுக்குத் தாய்மடியாகி
அருவிகளுக்குத் தோழியுமாகி
சமவெளி இறங்கத்தான் துணை ஆனது.

பூக்களின் பட்டியலிட நான்
குறிஞ்சி பாடிய கபிலன் அல்லவே
மலைக்கள்ளர்கள் மல்கிய நாளிது
மலைவளம் காப்போம்! மனிதம் காப்போம் !!!

## சங்கர் நீதிமாணிக்கம்

பாரினிலே செம்மொழியாம்
          சங்கத்தமிழ்ச் சிறப்போடு
ஐந்நிலங்கள் ஐந்திணையாய்
          அழகாக்கித் தந்ததுவே..
வானுயர்ந்த மலை
          பார்த்து மலைக்காமல்
குறிஞ்சியென்றே பெயர்தந்து
          பகுத்துத் சொன்னதுவே..

மழைபொழிந்து காடுயர
          மேனிசெழிக்கும் குறிஞ்சியன்றோ
உச்சிநின்று வான்நோக்க
          மனம்மயங்கும் மாட்சியன்றோ
மேடமர்ந்து கீழ்நோக்க
          உளம்வியக்கும் காட்சியன்றோ..
சிறுபொழுதோ பெரும்பொழுதோ
          எல்லாமே நற்பொழுதே

வண்ணங்கள் வானிலுண்டு
          வளைந்திட்ட வானவில்லாய்
வர்ணங்கள் பேதங்கள்
          கண்டிடாத வாழ்வன்று..
அகத்தோடு புறம்கொண்டு
          அன்பொழுக கூடியது
கட்சியின்றி காதலுற்று
          கற்புசொன்ன காலமது..

கிழங்கெடுத்து தேனெடுத்து
          தினைப்புலத்தை காத்தெடுத்து
சுனைநீரில் தினைச்சோறு
          பொங்கித் வைத்து..
பறையடித்து பண்ணிசைத்து
          பறவையோடு கூட்டிசைத்து
ஒன்றுகூடி சேயோன்போன்றி
          வாழ்ந்ததுவே குறிஞ்சியது..

குறிஞ்சித்தினை படிக்கின்றோம்
குறிஞ்சிகாக்க மறந்திட்டோம்..
மலையழித்து எழில்சிதைத்து
மொட்டையாக்கி நாமும்
காடழித்து முல்லைநிலம்
முடக்கிப்போட்டு நீரின்றி
மருதநிலம் வாய்வெடித்து
மூச்சை விட

வாழும்நிலம் பாலையாக்கி
வாழ்கின்றோம் பாவிகளாய்..
நானிலமும் அழிந்துவிட
நெய்தல்மட்டும் செழித்திடுமோ..?
உப்புநீரில் கண்ணீரும்
கலந்திடவே தேடுகிறோம்
வறண்டுபோன காலமெனும்
நதியினிலே நம்வாழ்வை..

# கு. கமலசரஸ்வதி

மானோடு மயிலாட மஞ்சுடனே நின்றாடத்
தேனோடும் சுவைநீரைத் தெவிட்டாமல் பருகிடவே,
தானென்ற உணர்வற்றுத் தவித்தாடும் மந்தியுடன்
தான்சேர ஆடுங்கவி தனித்தியங்கும் குறிஞ்சியே !

தேன்விளைந்த தேறலதை மாந்திய மணிக்குறவர்
சேர்ந்திடத் தன்னிணையுடனே திளைத்தனர் புணர்க்களிப்பில்,
யாழோடு தொண்டகமும் முழங்கிட வொருகூத்து
ஆடிடுவோ ஆட்டிடுவர் அரங்கதனை வெறியாய் !

மூங்கிலோடு புகுங்காற்று மூச்சடைத்துப் பாடும்
ஆங்காங்கு ஆடும்மயில் தத்தைமொழி கேட்கும்
பாங்கோடு குறத்திமகன் சேயோனை வணங்க
பச்சையகில் மணத்தோடு சந்தனமும் சேரும் !

வளைக்கரங்கள் குலுங்கிடவே இடித்த தினைமாவும்
வண்டார்ந்த மலர்சேர்த்த வாகான மதுவும்
அகழ்ந்தெடுத்த கிழங்குடனே அன்றாட உணவாய்
ஆழக்கீழ் வீழருவி ஆடல் களைகட்டும் !

முகிலினங்கள் முகடுரசி மும்மாரிப் பொழியச்
சிறுகுடியின் வயலெங்கும் மலைநெல்லே விளையும்
தினைவிளையும் காடெங்கும் சிறுகுருவி ஓட்டம்
பறையடித்துக் கவணடிப்பர் பைங்கிளியாய்ப் பெண்கள் !

குறிஞ்சிமலர் சூடிய கருங்கொண்டை யுடனங்கே
கூத்தாடும் துணங்கையுடன் கூடியங்கு ஆடப்
பந்தாடப் பெண்களவர் வெண்ணிலவைப் பறிப்பர்
பாங்குடனே பலகுடிகள் வாழும் குறிஞ்சியாமே !

முருகனோடு வள்ளியுமே வாழ்ந்த நிலமாகும்
முகிலோடு பலமரங்கள் ரகசியங்கள் பேசும்
கூதிரதின் கூதலிலே வாடும் இளம்மாந்தர்
கூடிடவே காத்திருப்பர் யாமந்தனை நோக்கி !

மனிதமன ஆசைகளில் மரித்திடும் மலையாவும்
புனிதஇன மக்களையே புதைகுழியில் தள்ளும்
இதுகதிதான் இனியென்றால் இனித்திடுமா உலகம்
இணையம்வழி காட்டிடும் நிலமாயது திகழும் !

# சோ. சுந்தரேசுவரி

கூடிக் குலவிடும் கூதற் பொழுதுகளில்
ஆடிக் களித்திடும் அழகான மயிலதுவும்
ஆர்ப்பரிக்கும் அருவிக்கரையில் ஆர்த்து வரும்
மேகம் கண்டு ஆனந்த மயிலதுவும்

மலை மலையாய் உயர்ந்து நிற்கும்
மலையான கனவுகளோடு மலைக்காத வாழ்வினில்
முகிழ்த்திடும் கனவுகளில் மூழ்கித் திளைத்து
மகிழ்வுடன் உலவுகையில் மனமும் மகிழ

சொந்தங்கள் சூழ சொகுசான வாழ்வுடனே
பந்தங்கள் பாராட்ட பாசமழை பெய்துகொட்ட
சந்தன மலர்களுடன் சந்தமிடும் தென்றலும்
சுந்தர வாழ்வுதனை சுகமாய் நினைத்தேதான்

பொன்னான வாழ்வை பொன்மயிலும் நினைத்திருக்க
விண்மீனாய் வருங்காலம் மின்னியே ஒளிர்ந்திருக்க
கண்ணான மயிலும் கனிவுடனே காத்திருக்க
கண்ணான கணவனும் கைப்பிடித்துச் சென்றானே

மகிழ்வான வாழ்க்கையும் மலர்ச்சியுடன் செல்கையிலே
மலைப்பாம்பாய்ச் சந்தேகம் சுற்றி வளைத்திடவே
காலொடித்து ஆடக்கூறும் கயவரைக் கணநேரம்
கடிந்தொதுக்கி மயிலும் களமிறங்கி ஆட

தாங்கும் கைகளில் தளிராய்த் தவழாமல்
ஏங்கும் இதயத்தை எளிதில் ஒதுக்கி
வாங்கிய நம்பிக்கையை வளர்த்தெடுத்து வார்த்து
வேங்கையென எழுந்ததே வேலவன்கை மயிலே

மயிலல்ல ஃபீனிக்சென மயிலும் ஆட
தன்னிலை மாறா தன்மான மயிலென
தரணிக்கு உணர்த்தி தலை நிமிர்ந்து
தொடர்ந்ததே மயிலும் ஆனந்த நடனமதை!

## கவிஞர் R. M. சாகிதா

கூடலூர்.

கொள்ளை கொள்ளும் மலையழகே!
குறிஞ்சி நிலத்தின் முகவரியோ!
வெள்ளைப்பனியின் துளியழகில்,
கிள்ளையாய் மனம் துள்ளிடுமே!

சிற்றாறும் மலையருவியும் சில்லென்ற காற்றுடனே
சிறுகுடியும் பாக்கமுமே, வாழ்விடமாய் அமைந்த நிலம்!
புலி கரடி யானையென, பெருங்காட்டில் வசித்திடுமே!
கிளிக்கூட்டம் மயிலாட்டம் மானினத்தின் அழகுடனே.....

ஐவகையாம் நிலங்களிலே
முதல்நிலமாம் குறிஞ்சி நிலம்.
செங்காந்தள் சிறுபூக்கள்,
அகிலுடனே சந்தனமும்
மிகையுடனே மணம்பரப்பும்!

ஆறிரண்டு வருடங்கள்
ஒருமுறைதான் பூத்திடுமே
அழகன் முருகனவன் வாழ்விடமே
குறிஞ்சிப்பூ வனத்துடனே!!

தேனடையும் தினையுணவும்,
தெள்ளமுதாய் இனித்திடுமே!
மான் உண்டு எஞ்சியநீரை,
மங்கை கொண்ட நிலமதுவே!

தலைவன் தலைவி கூடிக்களித்து,
ஊசலாடி களித்த நிலம்,
கூடலுக்கு ஏற்ற நிலம்
புலவன் கபிலர் சொன்னதுவே!!

# கவிஞர் வீக பொன்னையா

புதுக்கோட்டை.

குலுங்குகின்ற பாக்குமரம் கொடையானாய்த் தேக்குமரம்
துலங்குகின்ற வாழைமரம் சுவைமிகுந்த பலாமரமும்
தாமமிகு சந்தனமும் சண்பகப்பூப் பந்திகளும்
மாமரத்தில் சோலையுண்டு மலைவாழுங் குறிஞ்சிநிலம்

சாந்தெடுத்துத் தரைமெழுகி சந்தனத்தால் கோலமிட்டு
மாந்தளிரின் பசுமையெங்கும் வாழ்ந்திருக்கும் மலையோரம்
காலையிலே வேங்கைப்பூ கண்கவர்ந்த கோங்கிலமும்
மாலையிலே சோலையெங்கும் மாசில்லாத் தென்றலாலே

தினைவிளைந்து செழித்திருக்கும் தேன்நிறைந்த மலர்சிரிக்கும்
தினையறுத்த கிளிகளெல்லாம் தெளிந்ததனாய்த் தினம்பறக்க
பகற்பொழுதில் தினைகாக்க பாவையவள் கனிந்துநிற்க
அகங்குளிர்ந்த தோழியாலே ஆனந்தம் வந்ததிங்கே

பகற்குறியில் பழம்பறிக்க பக்குவமாய்த் தேனேடுத்து
அகம்மகிழ அவ்விடத்தில் அழகுமலர் பறித்தெடுத்து
மலைநாட்டு மக்களிங்கு மனங்கனிந்து இருப்பதனால்
கலைநயத்தில் விளையாடும் களவொழுக்கம் விலகலானார்

களவினிலே ஈடுபட்டு காயத்தால் மெலிந்துபோக
களத்தினிலே ஆடுகின்ற கவர்ந்துநிற்கும் குறமகளே
காதலராய்க் களித்திருந்த கன்னியவள் மனம்நோக
தீதுள்ள காமநோயால் செவிலியிடம் அறமென்றாள்

இரவினிலே வந்திருந்தும் இன்பத்தைப் பெற்றிருந்தும்
பரந்தவெளி உறங்கியதால் பகைவரிங்கு இல்லையென்றாள்
ஒத்தமனம் உடையவர்கள் உணர்வுகளால் இணைந்தவர்கள்
நித்திரையும் இல்லாமல் நினைவுகளால் வாழ்ந்திடுவார்

உள்ளத்தை நிலைநிறுத்த உவகையான திருமணமே
கள்ளமில்லாக் கனிந்தமலர் கானகத்தில் நிறைந்தனபோல்
கானவரும் அறிந்திட்டு களவெல்லாம் வெளிப்படுமுன்
கானகத்தில் உற்றதோழிக் கன்னியினை வரைந்திடென்றாள்

## கவிஞர் க. தமிழழகன்

மேட்டூர்.

குறிஞ்சிநிலப் புல்வெளியில் குலுங்குகின்ற மலர்க்கூட்டம்
அறிஞர்கள் மனம்போல அங்குமிங்கும் அணியழகு
வெள்ளிமலை உருகிவர வேதனைகள் மறைந்துவிட
துள்ளிவருந் தென்றலிங்கே தூதுசொல்லி வாழுதிங்கே

குலவுகின்ற கூந்தலாலே கொஞ்சுகின்ற பேரழகி
நிலவெளியில் அவன்வரவு நெஞ்சமெலாம் நிறையுதென்றாள்
இரவினிலே பகலினிலே இதயத்தைப் பறிகொடுத்து
உரிமைகளை மீட்டெடுக்கும் உணர்வுகளைத் தோழிசொன்னாள்

இளமையிலே களவொழுக்கம் ஈடில்லா இன்பந்தான்
வளமையெலாம் போனபின்னே வாழ்தலிலே துன்பந்தான்
தீங்கனிகள் விளைந்திருக்க தேனருவி கலந்திருக்கப்
பூங்கொடியாள் மணம்முடித்துப் புன்னகையைச் சிந்தவாரீர்

அலைமோதும் கரைமேலே அமுதமென மழைபொழிய
நிலைமறந்த அலையெல்லாம் நினைவிழந்து தினம்அழிய
மழைத்துளியில் நனைந்துவிட்ட மலரிதழ்கள் நோகுதிங்கே
அழைக்கின்ற என்நெஞ்சே ஆணையிட்டு வாழவாராய்

கார்காலங் கண்டதுமே கண்விழிக்கும் கொன்றைமலர்
ஊர்கூடிப் பழிப்பதற்குள் உறவுகளால் கைகோர்ப்போம்
கண்ணுறங்காப் பொழுதெல்லாம் காத்திருந்து வாடுகிறேன்
பெண்மனதை நீயறிந்து பேருவகை கொள்ளவாராய்

கானகத்தில் கதிர்விளைந்து காவலுக்குச் செல்லவில்லை
தானஞ்செய் மேகத்தின் தாயன்பும் குறையவில்லை
தினைவிளைந்து முடிந்தபின்னே சேர்ந்துபேச நேரமில்லை
நினைவுகளால் பெருமைகொண்டு நீங்கிடாத தோழிசொன்னாள்

காயத்தை ஆற்றுகின்ற கடமைகளைக் கொண்டவரே
தாயன்பு நோகிடாமல் தரந்தாழ்ந்து போகாமல்
காலமெலாம் மாறிவிடும் களவொழுக்கம் வாடிவிடும்
பாலரசப் புன்னகையில் பால்நிலவாய் வந்திடுவீர்

# மாலதி திரு

தலைவன்தலைவி காதலைத் தலைமுறைகளும் போற்றும்
மலைகளின் அரசிக்கு மணிமகுடம் சூட்டும்
விலைமிகு பொருட்களும் விளைந்திடும் பாக்கம்
கலைகளின் உறைவிடமாகிய கலைஞர்களின் ஆக்கம்

சிலையாக நிற்கும் சித்தர்களின் பிறப்பிடம்
உலைவைக்கும் பெண்களின் உல்லாச உறைவிடம்
வலைகளில் வாழுமுயிரினமும் வனப்புடன் வசிக்கும்
இலைகளும் சிரித்து இன்முகத்தைக் காட்டும்

சோலைகள் மிகுந்து சோகத்தை தவிர்க்கும்
ஆலைகளோ கடல் அலைகளோயின்றி அமைதியாயிருக்கும்
மாலையிலே மணம்வீசும் மலர்கள் மலர்ந்திருக்கும்
காலை காட்சியோ கண்கொள்ளா பேரழகாயிருக்கும்

முருகப்பெருமானின் முத்தாரமும் முருகியல் அழகும்
விருப்பம் கொள்ளும் வியன்மிகு எழிலும்
திருப்பம் கொடுக்கும் தெவிட்டாத திணையும்
அருவியில் குளிக்கும் ஆனந்த மகிழ்வும்

குறவனும் குறத்தியும் குதூகலிக்கும் நிகழ்வும்
அறத்தைப் போற்றும் ஆனந்த வெறியாட்டும்
பிறப்பின் பேரின்பமும் பீடையற்ற வாழ்வும்
இறப்பே வந்தாலும் இன்முகமும் இந்நிலத்திலே.. !

தேன்சிந்தும் இடமாம் தெய்வலோக பூங்காவாம்
வான்வியக்கும் மலையாம் வண்ணப்பூக்களின் சொர்க்கமாம்
மான்களும் துள்ளியோடி மகிழ்வுடன் இருக்கும்
கான்நதி பாய்ந்துவர கார்மேக களிப்பிருக்கும்

முக்கனியைக் கொடுக்கும் முத்தார நிலமாம்
அக்கார வடிசலின் அருஞ்சுவை இன்பமாம்
சத்தியம் பேசுகின்ற சாணக்கியரின் குறிஞ்சிக்கு
இத்தரைமீதில் வேறெங்கும் இணையில்லாததை  அறிந்திடுவோம்.

## பா. பொன்பாண்டி,

மதுரை.

அருவிபல ஒலியெழுப்பும் அழகான திருமன்றம்
சரம்சரமாய் கொடிமலர்கள் சங்கமித்த மலைகுன்றம்!
குன்றாத முல்லைவாசம் குன்றென நிமிர்ந்துபேசும்
நன்றென அருவிநேசம் நடைப்போட்டு விளையாடும்!

கல்லைக் குடைந்து காட்டாறு எழும்
சொல்லுக் கடங்கா சுழல் அருவி விழும்!
அசையா எழிலிருக்கும் அகத்தின் கதவைத்திறக்கும்
இசைந்தருவி சிரிக்கும் இனிமைத்தடம் பதிக்கும்!

நீரோடை நிமிர்ந்து நிற்கும் நிறையழகு தலை தூக்கும்
பஞ்சென மடல் விரிக்கும் பார்ப்போர் மனம் சிறகடிக்கும்!
கருங்கல் சறுக்கும் கண்டமனம் கிறுகிறுக்கும்
கருங்குயில் இசைபடிக்கும் கனிகொடி படர்ந்திருக்கும்!

கோடை மழையில் குடையாக நிற்கும்
தோகை மயில் போல் தோற்றங்கள் விரிக்கும்!
வாகை சூடி வலம்வரும் வளர்தென்றல் களம்புகும்
மயில் தோகை விரித்து மனதை மயக்கும்
இயற்கை அழகே இறைவனாக இருக்கும்!

## கவிச்சிகரம் அ. முத்துவிஜயன்

வானுயர்ந்த மலையும் வடிந்துவரும் அருவியும்
வளமான பசுமையும் வட்டமிடும் பறவைகளுக்
சார்ந்திருக்கும் நிலங்களும் சரிந்திருக்கும் கதிர்களும்
வாழ்த்திருக்கும் மலையகமும் சேர்ந்ததே குறிஞ்சியாம்

இன்று குறிஞ்சி உறிஞ்சப்படுகிறது நாமறியாமலே
வனங்களை அழித்து தேயிலை தோட்டமாக்கினர்
வளம்தரும் மழையை வெகுவாகக்குறைத்தனர்

நீர்தேக்கங்களின் ஓரம் விடுதிகள் கட்டினர்
நீர்தேக்கும் அணைகள் உயர்த்திற்கு சமாதிகட்டினர்
மலைகளில் எல்லாம் சாலைகள் போட்டனர்
மந்தி முதல் யானை வரை தெருவில் இறங்கின

தந்தத்துக்காக தங்கும் ஆனைகளக் கொன்றனர்
தம் வசதிக்காக சந்தன மரம் வெட்டினர்
வான் வழியே சில இடங்களில் விடம் தூவினர்
விலங்குகளும் மனிதனும் வாழவிடாதே செய்தனர்

இயற்கை அழகை சிதைத்து செயற்கையாக்கினர்
நெகிழிப்பைகளை ஆங்காங்கே போட்டனர்
மட்காதகுப்பைகளை போட்டுச்சென்றனர்
அதைத்தின்று பல உயிரினங்கள் மடிந்துவிட்டன

குறிஞ்சியி மரங்களையெல்லாம் வெட்டிச்சாய்த்தனர்
கும்மாளமிடும் ஆசிரமம் அதில் அமைத்தனர்
ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி மகிழ்ந்தனர்
ஆனால் குறிஞ்சியின் ஆன்மாவை சாகடித்தனர்.......

## மு.மணிமேகலை

ஓசூர்

மலையும் மலையைச் சார்ந்த நிலமும்
மண்ணில் ஐவகை நிலங்களில் குறிஞ்சி!
மலைநெல் மூங்கில் அரிசி உணவாம் !
மலராம் குறிஞ்சி காந்தள் வேங்கை!
அருவி சுனையென நீர்வளம் கண்டார்!
அழகு யாழென இசையிலும் தேர்ந்தார் !
உருகும் கூதிர் முன்பனிப் பொழுதும்
உணர்வார் யாமம் சிறுபொழு தென்று !
சேயோன் முருகன் தெய்வம் அவர்க்கு !
செழிப்பாய்த் திணைநெல் பயிரும் செய்தார் !
கோயில் மணியின் வடிவம் கொண்ட
குறிஞ்சிப்பூ குமரனின்  சிறப்பு மலராம் !
பனிரெண் டாண்டுக் கொருமுறை பூக்கும்
புகழுக்கு அரசு வெளியிட்டதே அஞ்சல்தலையும்!
இனிய மலைத்தேன் வள்ளிக் கிழங்கு
இசைவாய் உண்பர் குன்றக் குறவர் !
குறவர் வெற்பன் சிலம்பன் என்ற
மறவர் வாழ்ந்த மலைதான் குறிஞ்சி !
குரங்கு கரடி புலிபன் றியென
குறிஞ்சி நிலத்தின் விலங்குகள் அறிவீர்!
குறிஞ்சிப்பாட்டு தொல்காப்பியம் குறுந்தொகையென
குறிஞ்சிப் புகழை இலக்கியம் பாடும்!
கற்க வேண்டும் தலைமுறை தெளிவாய்!
நற்றமிழின் பெரும் புகழ் இனிதாய்!
உண்ணும் உணவு நிலங்கள் தருமே!
கண்ணாய்ப் போற்றிச் செழித்திடச் செய்வோம்
மண்ணைக் காப்போம்! மலையைக் காப்போம்!
பண்டைய தமிழர் மரபினைக் காப்போம் !

**தே. சந்தோஷ்குமார்** (ஆசிரியர்)
கூஅக்ராகரம், கூத்தப்பாடி

சின்னஞ்சிறு கிளியே உனக்கு கதையை சொல்லவா
குறிஞ்சி மலைத்தென்றல் பூவே நீயும் அல்லவா
ஐவகை நிலமும் உன்னாலே நானிலமாவதை அறியாயோ
முல்லை மருதம் நெய்தலுமே பாலையாவதை உணர்வாயோ

தேடிச்சென்று தென்படும் விதைகளை தூவிச்செல்லாயோ
தூவானம் துளிமழை தந்திட துளிர்த்தே வெல்வாயோ
காடும் மரமும்நீ தருவாய் கனியும் காயும்நீ தருவாய்
தேடும் நிழலதைநீ தருவாய் தேனும் தினையும்நீ தருவாய்

பாடிச்செல்லும் பறவைகள் வாழ புகலிடம் தானதைநீ தருவாய்
நாடிச்செல்லும் விலங்குகள் வாழ நன்னில மதையேநீ தருவாய்
வாசம்செய்து சுவாசம் தரவே உயிர்வளியை நீயே தந்திடுவாய்
வாழிய வாழிய வாழியவென்று வாழ்த்தியே நீயே வென்றிடுவாய்

உண்ணும் உணவினைநீ தருவாய் உறையும் இடமதைநீ தருவாய்
உரமும் மண்ணுக்குநீ தருவாய் உயிர்பல வாழவும் வழித்தருவாய்
மரமும் செடியும் கொடியிமிங்கே மலர்களைத் தந்தே வாழ்ந்திருக்கும்
புழுவும் பூச்சியும் புல்லினம் தேடி மதுதனை உண்டே மகிழ்ந்திருக்கும்

வாழும் நாளதை வளமாய் கழித்தே
மீண்டும் உரமாய் புதைவோமே
வாய்ப்பினை வழங்கிய தாய்த்திரு பூமியில்
குறிஞ்சி நிலமதில் பிறப்போமே

## கு.மலர் செல்வி,

திருநகர், மதுரை.

வெண்பனி போர்த்திய வெள்ளை முகடுகள்
வெம்பனிக் காலத்தில் விண்ணைத் தொட்டிட
சந்தனம் அகில் வாசனை பரப்பிட
நெடிதுயர்ந்த மரங்கள் சோலைகளாய் வானளாவியே

பச்சைப் போர்வையாய் விரிந்தே பரவிகிடக்க
வெள்ளிக் கம்பியாய் மலைவீழ் அருவி
வெண்சாரல் மழையாய் அடிவாரம் வீழ்ந்திட
மேனி  சிலிர்க்க வாடைக்காற்றும் வீசிட

குறிஞ்சியின் மலைவளம் மனதை கவருமே.
யானைகள் பன்றிகள் கூட்டமாய் அலைந்திட
கார்மேகம் கண்டு மயில்கள் ஆடிட
புலிகள் குரங்குகள் மறைவிடம் தேடிட

பசுங்கிளிகள் பறந்தே பாசமொழிகள் பேசிட
குறிஞ்சியின் உயிர்கள் இன்பம் காணுமே.
குறிஞ்சித் தேனாய் தலைவி இனித்திட
மதுகொள்ளும் வண்டாய் தலைவன் விரும்பியே

குறவனும் குறத்தியும் கூடிக் களித்திட
குறிஞ்சியாழும் பண்ணும் இசைத்தே மகிழ்ந்திட
வெறியாட்டுப் பறையும் தொண்டகப் பறையும்
மலைக்குடி யெங்கும் அதிர்ந்து பரவிட

தேனும் கிழங்கும் அலைந்து தேடிட
தேனும் திணைமாவும் திகட்டா உணவாகிட
தலைவியின் கரம்பிடித்தே குறத்தியும் குறிசொல்லிட
அறத்தொடு நிற்றலும் வரைவு கடாதலும்
குறிஞ்சியின் நல்சிறப்பே ஆயின.

# கு.ஜெயக்குமாரி - ஜெய்

விண்ணைத் தொடும் மலைச்சிகரங்கள்
முற்றுகையிடும் கார்கால மேகங்கள்
மலையும் மலைச்சார்ந்த இடமும்
குறிஞ்சியென கூறுகையில் -நாவும் மனமும்

குதூகலத்தில் கும்மியடித்து கூட்டம் சேர்த்து மகிழுதே
''பாக்கத்தில்'' பழுதில்லா வாழ்வினிலே
சேயோனை குலதெய்வமாக்கி
குறவன் குறத்தியென ஒருவனுக்கு ஒருத்தியாக

கற்பில் களங்கமின்றி வாழ்ந்திடும் பூமியிது
வித்திடுவோரின்றி வேரூன்றிய வேங்கையும்,
அகிலும்,சந்தனமும், மூங்கிலும்
முகிலின் முத்தத்தில் முனைப்பாய் வளர்ந்து

சீரழியா செல்வத்தை சிறப்பாக தந்திடுதே
குயிலும் கிளியும் கானமழைப் பொழிய
வண்ணத்தோகைதனை விரித்து மயிலும் ஆட
மந்தியும்,கரடியும்,பன்றியும் மெய்மறந்து காணுதே

வில்லேந்திய வேடனோ தொழிலில் வல்லவனாய்
வேங்கைப் பூ மாலைப் போட்டு
களிற்றின் தந்தத்தை பரிசெனக் கொடுத்து
மங்கையவளோடு மஞ்சம் காண

திருமண வைபோகம் நடந்தேறுதே
பனிரெண்டு ஆண்டுக்கோர் ஒருமுறையென
நீலவண்ண பாவாடை விரிக்கும்
குறிஞ்சி மலர்தனைக் காணவே

நாட்டில் நாகரீக மக்களை கவர்ந்திழுத்து
காதல் வயப்படுத்தும் பூமியிது

## சியாமளாரகுநாதன்

பொதிகை மலைத் தென்றல் காற்றது
மதி மயக்குதடி சகியே நம்
மனம் மகிழுதடி கரு மேகம்
வானமதில் பவனி வருகுதடி அது

இடி மின்னல் மழையாய் மாறி
ஆடி வருகுதடி கோடி யின்பமடி
மலையருவி தாளம் போட உள்ளமது
அலை பாயுதடி சுகம் கூடுதடி

குறிஞ்சியிலே பூக்களது குலுங்கிச் சிரிக்குதடி
ஆறுமுகன் குறிஞ்சியிலே குடியிருக்காண்டி
பறவைகளும் வானத்திலே பறந்து திரியுதடி
ஆறஅமரக் கண்டு ரசிக்க ஆனந்தமடி

குறவர் கூட்டம் குறிஞ்சிப்பண் பாடியாடுமடி
திறன்மிக்க முக்காலம் சொல்லும் கூட்டமடி
மான்களது துள்ளியாடி மனம் மகிழுமடி
தேனும் திணையும் விளையும் நிலமடி

மலையினிலே மரங்களது மனதை மயக்குமடி
கலையழகுக் காட்சியது கண்ணில் விரியுமட
அருவியிலே குளித்திடத் தான் ஆசையடி
பருவம் வந்த பெண்ணைப் போல

வளைந்து நெளியுமடி நாணம் கொள்ளுமடி
சளைக்காது பாடுபடும் பாட்டாளி வர்க்கம்
இயற்கை யெழிலைப் பேணிக் காப்போமடி
பயனளிக்கும் வழிமுறையைப் பின்பற்று வோமடி

# முனைவர் பெ. பாரதி ஆறுமுகம்

பெரம்பலூர்

பழங்கால சந்தனப்பேழையில் பூமி
பாத்திரத்தின் தாள்களைத்தான் அடுக்கி வைத்து
நீர்வளமும் நிலவளமும் இருந்ததாலே
நிம்மதியாய் திணையை உற்பத்தி செய்து

சீர்பெற்று வாழ்ந்த என் சங்கத்தமிழன்
சிந்தித்துச் செலவுசெய்யும் குணந்தான் கொண்டார்!
மலைமேலே ஏர்பூட்டி உழுதுழுது பயிர்கள்செய்து
எதிர்நீச்சல் போட்டுயர்ந்தார்! அவர்கள் தாமே!

கூர்மையாய் கடமையில் கருத்து கொண்டு
தன்னிறைவு எய்திய காரணத்தால்
சூழ்ந்துநின்று எல்லோரும் பணியைச் செய்வார்
சுறுசுறுப்பாய் தேனெடுத்தும் - கிழங்கெடுத்து மகிழ செய்வார்

தாழ்ந்து நின்று தலைவணங்கத் தேவையில்லை
தரணியிலே வாழ்ந்துவந்த தமிழன் கொள்கைநன்று
ஆழ்ந்திருந்து இல்லறத்தால் அமைதி கண்டார்
அன்பாலே ஒற்றுமையாய் இருந்து வந்தார்

குன்றெல்லாம் கோவில்கொண்ட சிவசக்தியின் புதல்வனாம்
கந்தனுக்கு வள்ளியை மணமுடித்து சுற்றத்தாரும்
வேள்சேயோன் வழிபாடும் செய்து வரவே
வேல்தன்னை காணிக்கையாய் முன்னால் நட்டார்கள்

குளிர்காலம் வந்துவிட்டால் செழிக்கும் பூமி
கவினழகில் மலைதானும் காட்சி காட்டும்
பேர்சொல்ல புகழ்சொல்ல வாழ்ந்த வாழ்க்கையால்
பேரின்பம் அடைந்தானே என் வீரத்தமிழன்...

**அ.சதிஸ்குமார்**
விராலிமலை

எனது தூவானம் வீசும் மகரந்த குழலுக்குள்
மயங்கிக் கிடக்கும் மன்மதன்
உன்னை பார்த்தவுடன் விழித்துக் கொள்கிறான்
மரங்கள் நிறைந்த உன்மர்மகாட்டில் எனது சுட்டுவிரல்
உனது அங்கத்தைக் காட்டி அடையாளப்படுத்துகிறது

சில்லிடும் தேன் வண்டின் சிறகோசையும்
சிரித்திடும் குறிஞ்சியின் இதழ் வாசமும்
புற்களில் காமம் கொள்ளும் பனி நீரும்
மேகம் இல்லா மழை நீரும்

பாறையில் தூங்கிடும் சுனை நீரும்
தேகம் சில்லிடும் தேன்சிட்டும்
வீணைகள் தோற்கும் குயிலிசையும்
வித்தைகள் காட்டும் அருவிகளும்

மேகம் தவழும் புல்வெளியும் மின்னலை
வீழ்த்திடும் விருட்சங்களும்
உன் அதிசயத்தின் அழகு கருவறை
உன் தாய்மடி தந்த தாலாட்டில்

குமரனும் குறத்தியும் களவு செய்வதும்
வேங்கடவன் காப்பு கொள்வதுவும்
விரியன் நடனம் புரிவதும் பக்தியின் பரவசநிலை

உன்னின் அழகை உயிரேற்றிக்கொள்ளும் ஆசை எனக்குண்டு
உன்னழகை காவல் செய்யும் கருணை எனக்கில்லை
காத்துக்கொள் மனித நாற்றம் வீசா காவியத்தை

# கா. அனீசா

ஈரோடு

அகிலம் புகழும் குற்றாலப் பொதிகை
ஆனந்தம் பொங்கிடும் கார்முகில் கூட்டம்
இயற்கை அன்னையின் ஈகையாலே
ஈடில்லாப் படைப்பு இந்தியாவிலே..
உன்னைப் பெற்ற உவகையில் நாங்கள்
ஊரின் சிறப்பை உரக்கப் பாடுங்கள்..
எழுத வார்த்தைகள் எங்களுக்கு இல்லை
ஏனோ காலை மந்திகளின் தொல்லை..
ஐந்தருவி அழகு ஆர்ப்பரிக்கும் நீர்வீழ்ச்சி
ஒப்பிலா மூலிகைநீர் நறுமண வாசனை
ஓடிவரும் அழகை பார்த்துவர ஏங்கும்..
ஔவியம் கொள்ளும் அத்தனை காட்சியும்..
அஃதில் தெரியும் குறிஞ்சியின் மாட்சியும்..
மனதை மயக்கும் மந்திகள் ஓட்டம்..
மட்டற்ற மகிழ்ச்சியில் மக்களின் கூட்டம்..
மூலிகை நீரில் மாசுபாடு எதற்கு?
மாசு கலக்க மறித்து மன்றாடு..
மலையைக் கண்டவுடன் மகிழ்ச்சி வந்ததேனோ?
மரங்களைப் பார்த்தவுடன் மலைப்பு வருவதேனோ?
மரங்களின் கிளைகளெல்லாம் குடைபோல் விரிந்ததேனோ?
கிளைகளில் இலைகளெல்லாம் சிறகுபோல் விரிப்பதேனோ?
மேகக்கூட்டங்கள் மெத்தை ஆனதேனோ?
மெத்தைக்குள் சூரியன் மறைந்து கொண்டதேனோ?
வானவில் ஒன்று வண்ணக்குடை கொண்டு..
மலைக்குள் மழை விழாமல் விரித்துப்பிடித்ததேனோ?
மின்னல் கீற்றொன்று விண்ணை பிளந்துகொண்டு
பசுமை அழகுதனை பளிச்சிட செய்ததேனோ?
இயற்கை அழகுக்கு இன்னல் வந்ததேனோ?
மரங்களைக் காக்க மனிதன் மறந்ததேனோ?

# அ. பானுமதி

கோவை

மலைராணியின் அந்திநேரம்
எம்தலைவியின் முகம் வெட்கத்தில்
சிவந்தது போன்ற பொன்னிறத்தில்
கதிரவன் மயங்கிக் கொண்டு இருந்தான்

பட்சிகளும் காதல் கிளிகளும்
காதல் பேச கூட்டில் அடைந்து கொண்டன
எம் தலைவியின் சிரிப்பொலி போன்ற
மெல்லிய ஓடையின் சங்கீதம் ஒலிக்க

எம் தலைவியின் மருண்ட விழிகளைபோல்
ஓடையில் துள்ளும் கயல்கள்
மலைராணியின் நெற்றியிட்ட பொட்டுபோல
முகிலடையே இரவை பறைசாற்றவந்தாள் நிலவுமகள்

குவிந்தமலருக்குள்  மலைத்தேனுன்ட வண்டுகள் கிறங்கிக்கிடந்தன
தேனும் தினைமாவும் உண்டு தினவெடுத்த தோள்களோடே
புலித்தோலுடன் தண்டை அணிந்த கால்கள்
நாவல்பழம் போன்ற முகத்தில் மினுமினுப்பு

மலை முகட்டின் மடியில்  தலைவியின்
வருகைக்காக மல்லாந்து காத்துக் கிடந்தான்.
மயிலை ஒட்டிய வசீகரம் மானையொத்த
மருண்டவிழிகள் சிவந்த கோவைபழ அதரங்கள்
மலைராணியின் அடர்ந்தவனம் போன்ற நீண்ட நெடியகேசம்

இரண்டு உருண்டு திரண்ட மலைகளுக்கிடையே ஓடும்
மெல்லியஅருவி  போன்ற மேலாடை
இடையில் இறுக்கிக்கட்டிய பாவாடை
காலில் வெள்ளித்தண்டை தாமரை முகத்தில் வனப்பு

கைகளில் போட்டி போட்ட வளைகாப்புகள்
தலைவனைக் காண தனிமையில்
தென்றலைத்தூது விட்டு பின்தொடர்ந்தாள் தலைவி!!

சூடியிருந்த செண்பக மலர்களின் சுகந்தம்
தலைவியின் வருகையை தென்றலினூடே அறிந்த
தலைவன் சிறிது நேரம் கண்ணாமூச்சியாடி
தலைவியை கண்டு கொண்டான்

இமைப் பொழுதும் பிரியா பல கதைகள் சொன்னான்
எம் காவிய தலைவிக்கு

# தமிழ்நெஞ்சம் அமின்

பிரான்சு

மயிலாடும் நிலங்களிலே குரங்காடும் மரக்கிளையில்
நானாடும் மனங்களிலே தேன்சுவையும் பாய்ந்திடுமே
செந்தமிழ்க்கு பின்பிறந்த நிலமகளும் போற்றி நிற்கும்
நம்மொழிக்கு இணையுண்டோ அறிஞர்கள் அளவிடுவர் !

தமிழ்மொழி சிறப்பென்றால் நம்நிலமும் சிறப்பாகும்
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென்று
அதன்சிறப்பை சொல்லிவைத்தர் நம் பெரியோர்கள்
நனிசிறப்பாய் நாம்சிறந்தோம் நம்சிறப்பைப் பகிர்ந்தோமே !

நாற்றாங்கால் நட்டுவைத்து  நானிலத்து பாசிபோக்க
நாளெல்லாம் உடலுழைத்து நல்மண்ணை செழிப்புறவே
வளர்த்திட்டோம் நெல்மணிகள் பிறர்புசிக்க வழிவகுத்தோம்
தாவரங்கள் பயிரிட்டு உயிரினங்கள் வாழச்செய்தோம் !

பகல்பொழுதை வாழ்வதற்கும் இராப்பொழுதை இன்பமாக்கி
இனித்திடவே வாழ்ந்துதினம் குறிஞ்சிக்கு புகழ்சேர்த்தோம்
குரங்கிலிருந்து வந்தவராம் நம்மக்கள் குரங்குமனம் மாறாமல்
வாழ்வதையும் காணுகிறோம் அனுதினமும் ரசிக்கின்றோம் !

கற்றவர்சீர் பொன்நிலத்தில் புகழுக்காய் ஏங்காமல்
பெற்றவர்சீர்மனம் சிறப்புறவே சிறப்பாக வாழ்வதற்கு
குறிஞ்சிநிலம் கிடைத்ததுவே போற்றிநாமும் புகழ்பெறுவோம்
பாட்டினிலே ஏட்டினிலே எழுதி சரித்திரம் படைத்திடுவோம் !

கார்கால மேகங்கள் கணக்கின்றி தருகின்ற நம்நீரை
தாரணியில் தேக்கிவைக்க நல்திட்டம் நாமமைத்து
நாட்டின் வளம் சேர்ப்போம். அதற்காக நாம் முனைவோம்
குறிஞ்சியினை நாம்மதித்து நாணிலத்தில் வளம் சேர்ப்போம் !

# முல்லை

முன்னுரையும் வாழ்த்துரையும்..

கவியுலகப் பூஞ்சோலையின் கண்கொள்ளா நிகழ்வான கவிச்சாரல் - 2019 ல் கலந்துகொண்டு நனையும் கவிஞர்பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த வணக்கமும் வாழ்த்தும்.

எழில்கொஞ்சும் ஏற்காட்டில்
எமையீர்க்கும் பூக்காட்டில்
நமையெல்லாம் ஒன்றுசேர்த்து
கவிமழையில் நனையவைக்கும்
கற்கண்டின் கவிஞரான
காலத்தின் நற்கொடையாம்
ஒரத்தநாடு நெப்போலியனுக்கும்
அவருக்கு உற்றதுணையாக
உடனிருந்து பணியாற்றும்
தென்றல்கவிக்கும் எனது நன்றியினை
உரித்தாக்கி மகிழ்கிறேன் .

முல்லையின் பெருமையை
இல்லை எனாது
கல்லைத் தொடர்ந்து
களிப்புடன் செல்ல
முல்லை மலரில்
முகிழ்க்கும் நறுமணம்
எல்லை இன்றியே
எடுத்து வைக்கும் .
காடும் காடுசார்ந்த பகுதியே
முல்லை நிலமென முத்தானப் பெயருண்டு.

மலைக்கும் உலகில் மனிதகுலமோ பிழைக்கத் தோன்றிய இடம் பெரிதாம் மலையே ! இதையே குறிஞ்சி என்று குறிப்பதுண்டு . மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். உயர்ந்த மலையின் உச்சியில் பிறந்த மனிதன், நடக்க முற்பட நறுமணம் கமழும் காடு நன்றாகவே வரவேற்றது. அடுத்து நடந்தான் சமநிலப்பகுதி சாட்சியாய்க் கிடந்தது, அதுவே மனங்கவர் மருதம், வயலும் வயல்சார்ந்த இடம். மீண்டும் நடக்க மீன்களும் சுறாக்களும் மண்டிக்கிடக்கும் ஆழக்கடல்கள் அங்கே இருந்தன. இதுவே நெய்தல் , கடலும் கடல் சார்ந்த இடமாம். முல்லையும்

குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும் - தொல்காப்பியம்.

குறிஞ்சிக்கும் மருதத்திற்கும்
இடையே இருக்கும் எழில்சூழ்
இடமே முல்லை நிலமாம்.

அதனாலேயே அங்கு வாழும் மக்கள் இடையர் இடைச்சியர் ஆவார்கள். முல்லை நில தெய்வம் திருமால், மக்களை வாழவைக்கும் விலங்குகள் ஆடு, மாடு, எருது, யானை, மான், பன்றி, முயல் முதலியன. முல்லைப்பூ பூப்பதால் இந்நிலம் முல்லைநிலம் என்றழைக்கப்பட்டது .

மலர்களின் அடிப்படையிலே ஐவகை நிலங்களும் பிரிக்கப்பட்டன, ஏனெனில் தமிழன் வாழ்க்கையே ஒரு மலர்வாழ்க்கை. மனிதன் பிறந்ததுமுதல் இறப்புவரை ஒவ்வொரு நிகழ்விலேயும் மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன .

" கான்யாறு தழீஇய இகனெடும் புறவு "
" கானம் நந்திய செந்நிலப் பெருவழி "
" முதிர்வாய் வள்ளியங்காடு "

என்ற வரிகள் முல்லை நிலத்தையும்

" எதிர்செல் வெண்மழை பொழியும் திங்கள் " என்ற வரியில் பொழுதும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கன.

முல்லைமலர்க் கவிதைகளை முனைப்போடு பதியவைத்த வல்லாளர் கவிஞர்களைவணங்கியே மகிழ்கின்றேன் .

என்றும் அன்புடன்,

**கவிஞர்மாமணி அ.முத்துசாமி**
எம்.ஏ; எம்.எட்; எம்.பில்;
பேராசிரியர்( பணிநிறைவு ),
தாரமங்கலம் 636502

# செல்லமுத்து பெரியசாமி

பல்லடம்

சுடரொளிக் கதிரோன் கரங்களை மறுக்கும்
அடரிருள் அடவியும் வானுயர் தருக்களும்
தொடர்ந் தொழுகிடும் வெள்ளிய அருவியும்
படர்ந்திடும் பசுமைப் புல்வெளி நிறைந்ததும்

முல்லை யென்றே இலக்கணம் வகுத்தர்
இல்லை இதற்கிணை வேறுநிலமென
தொல்காப்பியம் முதலா இலக்கணச் சான்றோர்தம்
சொல்லுக்குப் பெருமை சேர்ப்பதெம் முல்லை!

பொன்னென மலர்ந்த கொன்றை மணிஎனத்
தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு
நன்னலம் எய்திய நன்னிலம் முல்லை
நின்னையே உறைவிடமாக்கினோம் யாமே!

மூவினம் காத்துப் பெரும்பொருள் ஈட்டலும்
ஆவினம் கவர்ந்த பகைமுடித்ததனை மீட்டலும்
மன்னவன் துணையாய்ப் போர்பறை அறைந்து
தெவ்வரை ஒழித்து வஞ்சியைச் சூடலும்
எம்மினத்துக் கென்றே இயைந்த கடமையாம்

ஆதிமனிதன் தோன்றிய இடமே முல்லை!
ஆயரும் ஆய்ச்சியரும் வதிவதும் முல்லை
அவர்குலம் வணங்கும் அருள்மிகு தெய்வம்
அழகிலும் குறும்பிலும் மிஞ்சிய கண்ணன்

பொருபுகல் நல்லேறு கொள்பவர் தமையே
திருமணம் செய்வர் ஆயர் மகளிர்!
கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மனத்தாலும்
புல்லாள் எம்மினத்தின் ஆயமகளே!
நாட்டின் வளங்களை நலமுறக் காத்திடும்
காட்டின் வளத்தினைக் கவினுறச் சொன்னேன்
காட்டினைக் காத்துக் கவின்பெயல் பெறுவோம்!

# கவி நிறைமதி நீலமேகம்

பஞ்சபூதங்களின் இணையான ஐவகை நிலங்கள்
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலையென
புகழ்கள் பலவுமாக பெற்று தொல்காப்பியம் தந்த
பெருமையின் சிறப்பான நிலத்திணைகள் அறிவோமே.!

முகிலாடும் குறிஞ்சியாக இருளேறும் முல்லையாக
வயலோடு மருதமாக அலைமோதும் நெய்தலாக
அனலான பாலையோடு ஐவகை நிலங்களாக
பொறியோடு பொருந்திட சரியாகப் பிரித்தனரே..!

முல்லை நிலம் கண்ட பெருமையெல்லாம்
காடும் அதுசார்ந்த இடமுமாக மிளிர்ந்திடவே..
செம்மண்நிலத்துச் செம்புலமாய் சாமைவரகு தாணியங்கள்
ஏறுதழுவி களையெடுத்தல் செய்தொழிலாய் அமைந்திருக்க

மாயோன்மேய காடுறையென்று தொல்காப்பியம் புகழ்சூட
முன்பனிக்கு முந்தைய கார்காலப் பெரும்பொழுதும்
மாலைப் பொழுதினிலே சிறுபொழுதாய் இளந்தென்றல்வீச
மானும்முயலும் பசு ஆடு மரையும்சேர்ந்து மகிழ்வாகும்.!

காட்டாற்றின் துணைகொண்டு கானகம் வளம்பெறுமே
காட்டுக்கோழி கருடனுடன் முல்லைவாழ் பறவைகளும்
குரவைக் கூத்தும், குழலும், கொன்றைமரமும், மாடுகள் மேய்த்தலும்,
வஞ்சியும்வருமே முல்லையென நினைவினிலே.!

புறத்திணைப் புகழ்பாடும் பண்டைத்தமிழர் வகைப்பாட்டில்
அகஒழுக்கம் புறஒழுக்கம் அத்தனையும் முல்லையிலே
பாரியாண்ட நிலத்தினிலே முல்லைபூ நிறைந்திருக்க
முல்லைத்திணை அழகினிலே மூழ்கித் திளைப்போமே...!

# கவிஞர் க. பாலகிருஷ்ணன்

மதுரை

கானகத்தைப் பாடிடுவோம்!

கவிதையின் கருப்பொருள் முல்லை!
கண்டுகளிக்கப் பேரானந்தத்தின் எல்லை!
பார்த்தால் எங்கும் பச்சையின் சிரிப்பு
பரவசமாய்ப் பச்சை வண்ண விரிப்பு!

தமிழ்ப்பெரு நிலத்தில் சிறந்ததாம் முல்லை!
தரணியில் இதனினும் பேரழகு வேறில்லை!
காடும் காடுசார்ந்த நிலமே முல்லை – அதனை
அழித்ததால் வந்ததே பெரும்தொல்லை!

மூலிகைத் தாவரங்கள் எனும் அருமருந்து
முன்னோர்கள் நமக்களித்த பெரும் விருந்து – இதனைத்
தன்னகத்தே கொண்டதே முல்லைக் காடு
மண்ணில் அவற்றைக் காத்தால் இல்லை கேடு!

மானுடம் காக்கும் மகரந்தக் காடு
மகிழ்ச்சியை வந்து இதனுள் தேடு
மனித குலத்தின் ஆதி வீடு
மனதில் அமைதிக்கு இதை நாடு!

இலக்கியத்தில் இதன் பெயர் முல்லை!
இதயம் சொல்லும் நாம் இதன் பிள்ளை!
மனதைக் கொள்ளும் இது கொள்ளை
மனிதம் தழைக்கத் தரலாமா இதற்குத் தொல்லை?

கவிதைகளினால் தான் தமிழ் பிழைக்கும்
காடுகளைக் காத்தால் தான் நாடு பிழைக்கும்
உள்ளம் கவர் முல்லை நிலத்தை
உள்ளம் செய்யாமல் காப்பாற்றுவோமா நாம்?

மரம் வெட்டும் மடமையைக் கொளுத்துவோம்
வரமான வனமெனும் உடமையைக் காத்திடுவோம்!
காடுகளை வளர்த்து மழைதனை வரவழைப்போம்!
காவியத்தாயை கானகத்தாயை மகிழ்வாய்ப் பாடுவோம்!

# கவிஞர் கார்த்திகேயன் இராமச்சந்திரன்

மதுரை

தமிழ்ப் பெண்டிர்க்கழகு நால்வகை குணமாம்...
அவர் மண்ணிற்கழகு ஐவகை நிலமாம்...
ஐவகை நிலத்தினில் அடர்ந்த காடும்...
காடுசார் இடங்களும் முல்லைத் திணையாம்...

காண்போர் மயங்கும் செம்மண் நிலமாம்...
மாயோன் ஆளும் காடுறை உலகாம்...
முட்புதர் விலக்கி சற்றே முன்னேற...
மூக்கினைத் துளைக்கும் முல்லைப்பூ வாசமாம்...

புள்ளி மான்கள் துள்ளி விளையாட...
வெள்ளை முயல்கள் முல்லை வனமாட...
கருடனின் குரலது கானமாய் ஒலிக்க...
வருடிடும் அழகினில் இருதயம் மயங்கும்...

ஆயர் அவர்தம் காதல் ஆய்ச்சியர்...
இடையர் அவர்தம் இணையான இடைச்சியர்...
காரெனும் பொழுதினில் கால்நடை வளர்த்தே...
மாலைப் பொழுதினில் மகிழுவர் நன்றே...

திணையொடு சாமை திறம்பட சமைப்பர்...
நெய்யும் பாலும் நேர்த்தியாய்ச் சேர்ப்பர்...
அறுசுவை உணவை அன்புடன் பகிர்வர்...
அகமும் புறமும் அழகுற வாழ்வர்...

வஞ்சித்த பகைவரை வஞ்சிப்பூச் சூடி...
வதைத்திடும் வகையினில் போர்தனைத் தொடுத்து...
அவர்தம் நிலத்தினில் தம்கொடி ஊன்றி...
மகிழ்வதும் முல்லையின் புறப்பொருள் அன்றோ...

போரின் நிமித்தம் பிரிந்த நற்கணவன்...
திரும்பி வரும்வரை இருத்தலைக் கையாண்டு...
முல்லை மலரின் மணமும் தூய்மையும்போல்...
கற்பினைக் காத்தல் அகப்பொருள் ஆகும்...

# இராஜகுரு ரத்தினம்

தேனி

முல்லைநில வளம்:

"விண்ணுலவும் கார்முகிலும் விதைமுளைக்க மழையனுப்பும்.
விண்முகமும் எதிரொளிக்க வயல்வெளிகள் நீர்செழிக்கும்.
வண்டுறையும் குவளைகளும் வரப்பிடையே பூத்திருக்கும்.
நண்டுகளும் வாளைகளும் நாற்புறமும் கூத்தடிக்கும்."

"முற்றாத கதிர்களெல்லாம் முகங்காட்டும், செருக்குடனே
பெற்றிட்டோம்; செல்வமென்று பெருமையுறும் தருக்கர்போலே.
கற்றோர்கள் அவைகளிலே கண்ணியமாய் உளரேபோல்,
முற்றிட்ட கதிர்களுமே முகங்கவிழ்த்தே பாடஞ்சொல்லும்!

தலைவியின் கூற்று :

"கார்நோக்கிக் கசிந்தேகும் கவின்முல்லைப் போதெல்லாம்,
பார்நோக்கும் மதியொளியைத் பற்றிட்டே நிற்றல்போல்,
சீர்நோக்கிச் சென்றோனைச் சேர்ந்திடவே, காமனவன்
தேர்நோக்கிக் கசிந்தேகித் தேறுகின்றேன், காணீரே..!"

"ஆழிபுக்கு நீர்முகந்து, அண்டமதில் உலவிவந்து,
மேழியுழப் பொழிகின்ற மேன்மையுறு கார்போலே,
பாழி*நன்னன் எந்தலைவன் பரிந்தேகி வாரானோ?
ஊழினையே நான்வெல்ல உதவானோ, காதலாலே...?"

தலைவனின் மாண்பு :

"தேன்குடித்த வண்டுகளும் திறம்மறந்து பூவுறையும்.
கான்புக்கு விரைந்தோடும் கலனொலியா மணிபிணைத்து,
தான்சிறந்தான் தாளாளன் ; தவறிழையான் உயிர்களுக்கே.
மாண்புடையான்; எம்தலைவன் மறவாதான், என்னுறவை...!"

"கொன்றைமரம் மலர்தூவி கோடைநீங்கு காரென்று
தென்றலாலே கூறினாலும், எம்தலைவன் வாராமல்
வன்மனத்துக் கார்வராது ; வாடையிங்கு வீசிடாது.
நன்மனத்தோன் பொய்கூறான், நலமெனக்கே விழைவானே..!"

காதலின் பெருமை :

"மனமொத்த காதலாலே மனத்தாலே பிரிவாரில்லை.
தனந்தேடித் தலைவன்செல்ல, தன்மனத்தால் பிரிந்திடாமல்
தினந்துணையின் நினைவாலே திளைக்கின்ற காதல்மனம்
வனப்பாலே பொலிகின்ற வாழ்விதுவே; முல்லையாமே..!"

# கவிஞர் சுந்தர ராஜசாரதி

காத்திருக்கும் முல்லை

நாட்டுப்புறம் வேட்டுப்புறமாக காட்டுப்புறம் கால்பதித்தேன்.
மரக்கூட்டம் சுமக்கும் மலர்கூட்டம் கண்டு வாய்பிளந்தேன்.
ஓட்டைவழிச் சாளரங்களாய் ஒளிவட்டச் சூரியன்...
குமிழிகளாய் தெரிந்தான் குழிவிழுந்துச் சிரித்தான்...

பச்சையிருட்டுக்குள் பகல் தொலைந்து திகைக்கும்.
பந்தயக் குதிரையாய் பவளமல்லி நகைக்கும்...
மிக்கு முனிகாற்று மிசை தேடி முனகும்
திக்கு தெரியாமல் தினுசு தினுசாய் குளிரும்...

யட்சி பிடித்ததோ பட்சிகளை? வெறியாடும் இறக்கைகள்!
நேர்வரிசை மரங்கள் கூர்வரிசையோ?
சீர்வரிசையோ? அடடே... இங்கே மட்டும்...
கொடி சுற்றியும் வளர்ந்தபடியேயிருக்கும் விருட்சங்கள்...

கள்ளினமாகும் புள்ளினமும்... துள்ளினமாகும்
முள்ளினங்களும்..இன்பத்தின் கொள்ளிடம்...
இதயத்தில் மின்னிடும் "சட்"டெனச் சிலையாக்கும் கலையில்
சப்திக்கும் சருகுகள் வியப்பாகவேயிருக்கிறது...

இங்கே... நாய்கள் நரியாவதில்லை...
கழுதைகள் கவரி கேட்பதில்லை...
இவ்விடம் இருந்ததால் தானோ
இதிகாசமானர்கள் ... இராமனும்... தருமனும்...

இப்போது புரிகிறது... புத்தனின் காட்டுப்பாதை...
காட்டியபாதை... மாயோன் மட்டும் விதிவிலக்கா என்ன?
கானகம் பற்றவே முல்லையின் கடவுளானான்.
ஏறுதழுவியே சிவனும் திரிகிறான் சுடலையாய் இங்கே...

முளைவிட்ட மூங்கிலில் துளையிட்டதோ மரங்கொத்தி?
நுழைந்திட்ட தென்றல் நழுவுகிறதோ நீலாம்பரியாய்...?
மனம் தெளிந்துச் சொன்னது... வனமொரு வாலைப்பிறவி!
கணம் குறித்துக் கொண்டது... வனமொரு வாழும் இறைவி!

## கவி.ரௌத்திரன்... (எ) காதர் பாட்சா

அகவித் திரிதலில் அணங்கென நானும்,
கேவிக் கொஞ்சலில் கிளியென நீயும்,
அனுக்கம் விடுத்து உனை அணைய,,
அல்லும் பகலும் துயிலினைத் தொலைத்து,

கட்டுண்டக் காதலில் கனிவுடை அன்பும்,
விரிபீலியென அகண்ட உன் கரமிடையமுந்திய,
தூளியில் துயிலும் துள்ளிடை யழகே,
அன்பினில் அளாவிய பேரின்ப பெட்டகமே,

பண்பினில் நானும் பயனுற எண்ணி,
காதலில் கிடந்தே களிப்புறக் காலமும்,
விளைந்திட விருப்பமாய் வண்ணமாய் வாழ்வில்,
செந்நிலப் பெருவழி செறியிலைக் காயா அஞ்சனமென,

ஆற்றியிருத்தல் எத்தனையோ அத்தனையும் அள்ளிட,
விரிகையுடை தொழுதலில் செவியுணர் விரிச்சிக் கேள்நிலை,
அந்திப் பொழுதில் நடுக்கம்
மத்திய இரவில் ஏக்கம்,

செயற் நீருற்று இன்னிசையும்,
அரசிடை யதிரும் முரசிடை யோசையும்,
கண்மலர் மூடா நிலையே யெனக்கு,
உணர்வாய் உன்னதனே வருவாய் வேழப் படையொடு

என்னுளக் களவுக் கள்வனே...
என்னுளர் நிலம் உவப்ப பெருமழையென
வளமுடன் வியனழகு கண்டே வியந்தேன்,
திரிந்தேன் வார்த்தேன் சிற்பியாய் கவியொன்றை!

# கவிஞர் வேங்கை மார்பன்

வேய்ங்குழல் வேர்த்திட வேணுகானம் இசைத்திடும்
கன்றுண்ணா ஆவின்பால் கழனிவரப்பில் இறைந்திடும்
முல்லைநிலம் எம்புலமே கொல்லையிலே பொன்விளையும்!
அள்ளிச்செல்ல ஆளில்லை மூன்றுபோக நெல்விளையும்!

ஏறுதழுவும் காளையரும் ஏற்றமுடை கன்னியரும்
வார்புனலில் நீர்வார்க்க வாவிமலரும் கண்மூடும்
ஊறுசெய் தரமில்லை உயர்குடிப் பிறப்பன்றோ?
வீறுகொள் எம்மரபே வழுவில்லா வாழ்வன்றோ?

மாவிலை சலசலக்க மழைத்துளி தரைவீழும்
உச்சங்கிளை ஊசலாட இதழ்மடிப்பில் தேன்சொரியும்
பச்சைநிறப் பொழிலிடை இச்சைக்கிளி இசைபாடும்
குயிலதன் சாதகத்தில் நீலமயில் நடம்பயிலும்!

ஆட்டுமந்தை ஆயன்காக்க நாட்டுப்பாடல் பயிர்கேட்கும்
கட்டியமணி தலையாட்ட பக்கவாத்தியம் சுவைகூட்டும்
மீட்டுங்காற்று மூங்கில்மோத மாவினமும் கானம்கேட்கும்
வாட்டும்பனி வைகறையில் ஒட்டுமொத்த விடைகேட்கும்!

பூந்துகில் காற்றிலாட அஞ்சிறையும் சிறகடிக்கும்
நந்தவனமும் நாணத்தில் அந்தியிருள் வரங்கேட்கும்
வேந்தனவன் மோகத்தில் ஏந்திழையோ ஏக்கத்தில்
சாந்திபுலம் ஒழுகிட செவ்வந்தியும் சிரங்கவிழும்

வேங்கைத்தரு சிலிர்த்திட மகரந்தமும் விரித்திட
மங்கையவள் மஞ்சமோ மாயவனின் சொந்தமோ
வெங்கனல் மேனியிலே விரகத்தின் மாலையிலே
அங்கமெலாம் தகித்திட அருந்தவன் அணைத்தானோ?

பீடுதிணை முல்லையின் காடுசார்ந்த காட்சியில்
வீடுநிறை சாட்சியில் முத்தமிழின் மாட்சியில்
ஈடுசெய் எழுத்தினில் ஏடுநிறை கவியாட்சி
பாடுபொருளோ நீதந்தாய் பாவலனோ பா தந்தேன்

# கவிஞர் க. பாலகிருஷ்ணன்

மதுரை

கானகத்தைப் பாடிடுவோம்!

கவிதையின் கருப்பொருள் முல்லை!
கண்டுகளிக்கப் பேரானந்தத்தின் எல்லை!
பார்த்தால் எங்கும் பச்சையின் சிரிப்பு
பரவசமாய்ப் பச்சை வண்ண விரிப்பு!

தமிழ்ப்பெரு நிலத்தில் சிறந்ததாம் முல்லை!
தரணியில் இதனினும் பேரழகு வேறில்லை!
காடும் காடுசார்ந்த நிலமே முல்லை - அதனை
அழித்ததால் வந்ததே பெரும்தொல்லை!

மூலிகைத்  தாவரங்கள் எனும் அருமருந்து
முன்னோர்கள் நமக்களித்த பெரும் விருந்து – இதனைத்
தன்னகத்தே கொண்டதே முல்லைக் காடு
மண்ணில் அவற்றைக் காத்தால் இல்லை கேடு

மானுடம் காக்கும் மகரந்தக் காடு
மகிழ்ச்சியை வந்து இதனுள் தேடு!
மனித குலத்தின் ஆதி வீடு
மனதில் அமைதிக்கு இதை நாடு!

இலக்கியத்தில் இதன் பெயர் முல்லை!
இதயம் சொல்லும் நாம் இதன் பிள்ளை!
மனதைக் கொள்ளும் இது கொள்ளை
மனிதம் தழைக்கத் தரலாமா இதற்குத் தொல்லை?

கவிதைகளினால் தான் தமிழ் பிழைக்கும்
காடுகளைக் காத்தால் தான் நாடு பிழைக்கும்
உள்ளம் கவர் முல்லை நிலத்தை
உள்ளம் செய்யாமல் காப்பாற்றுவோமா நாம்?

மரம் வெட்டும் மடமையைக் கொளுத்துவோம்
வரமான வனமெனும் உடமையைக் காத்திடுவோம்!
காடுகளை வளர்த்து மழைதனை வரவழைப்போம்!
காவியத்தாயை கானகத்தாயை மகிழ்வாய்ப் பாடுவோம்!

# ரேணுகா சுந்தரம்

சென்னை

பிடரி சிலிர்த்து விழி விரித்து
குரல் உயர்த்தி வனமதிர கர்ஜிக்கும்
வனராசன் ஆதிக்கம் வானளாவிடும் மகாஅரசாங்கம்
கற்பாறை மேடைகளில் ஆவினமும் தனைமறந்து

மடிசுரந்த பாலெங்கும் பாலடையாய் எங்கெங்கும்
பரந்திருக்க அதன் மேலெங்கும் தேன்துளிகள்
சொட்டுகளாய் விழுந்து தேனடையாய் உருமாறி
திரியும் கால்நடைகளுக்கே விருந்தாக மாறிடுமே!

பறவையினம் கூடுகட்டி ஊஞ்சலாடும் கிளைகளிலே
பழுத்த கனிகளும் சரிசமமாய் ஊஞ்சலாடுமே!
அதைக்கண்ட மாங்குயிலும் ஆனந்த இசைபாடுமே!
வண்ணமயிலும் விண்ணதிர அங்கே நடனமாடுமே!

சலசலவென சங்கீதம் பாடிவரும் சிற்றருவிகளின்
சிங்காரச் சிணுங்கல்கள் சிந்தையை அள்ளுமே!
நிலவரசியின் ஒளிக்கொடையில் வனவிலங்குகளும் விளையாடுமே!
வானரங்களின் சாகசங்கள் சலிக்காத சந்தோசமே!

இயற்கை அன்னையின் அதிசயங்களும் அற்புதங்களும்
அன்றாடம் அரங்கேறும் வனமதை நினைக்கையில்
மனமது மகிழ்ச்சியில் தன்னிலை மறந்திடுமே!
கற்பனைக் காட்சிகளில் முழுமையாய் இலயித்திடுமே!

வனங்களின் மாட்சிமை ஐம்புலன்களுக்கும் விருந்தாகுமே
மனிதராய்ப் பிறந்தவர்க்கு இயற்கையும் இறைவனும்
இணைந்து வழங்கும் விலைமதிப்பில்லா விருதாகுமே!

# கவிஞர் சுதர்சன மூர்த்தி

ஐந்திணைகளுக்குள் அருந்திணை
வையத்துள் இதுவே நறுந்திணை!
அற்புதமாய்ப் பல மூலிகை மருந்தினை
கொடுத்திடும் முல்லை எனும் பெருந்திணை

இது விலங்கிற்கும் தரும் விருந்தினை
பெய்யும் மழைக்கும் இதுதானே பெருந்துணை!
இங்கு பல இடங்கள் கண்டிராது கதிரவனை
இது கூரையென வேய்ந்திருக்கும் மரந்தனை!

கொடிய விலங்கிற்கும் தந்திடும் வாழ்வுதனை
பாடிடும் பறவைக்குத் தந்திடாது தாழ்வுதனை!
கற்பனைக்கும் எட்டிடாக் கவின்மிகு எழில்தனை!
தன்னகத்தே கொண்டதிம் முல்லை யெனுந்திணை!

இங்கெங்கும் காணலாம் வானுயர மரத்தினை
அவை கூறிடுமே தமிழர் அறத்தினை
இவை வேண்டுவதில்லை தான்வளர உரத்தினை
தானெ வளர்த்துக் கொள்ளும் தம் தரத்தினை!

புத்தனுக்கும் பல சித்தனுக்கும்  ஞானத்தினை
கொடுத்தது முல்லையெனும் கல்ப திணை
பூமி அன்னை அணிந்திருக்கும் பச்சை ஆடையினை
போலிருக்கும் அழகில் இந்தத் திணை!

தொல்லை தரும் மனிதருக்கும் நன்மைதனை
கொடுத்திடும் குணமுடையது இந்தத் திணை!
இதனை மறுப்போர் இங்கு எத்தனை?

இதைக் காத்திடும் பெரும் பொறுப்பினை
ஏற்போம் மனதில் காட்டாமல் மறுப்பினை
இது தரும் நமக்குப் படிப்பினை! – இவ்வரங்கில்
இதைச் சொல்வதே என் கொடுப்பினை!

# சித்தார்த் பாண்டியன்

மதுரை

ஒருநாளென் இல்லத்தில் உட்கார்ந்து நானும்
ஓய்வாக நெய்ப்பொங்கல் பால்சோறு உண்டேன்!
தருகின்ற கொழும்பாலின் தணியாத சுவையில்
தமிழ்தந்த திணையைந்தில் தளிர்முல்லைத் திணைக்கு

உருவந்து கண்முன்னே உயிர்கொண்டு தோன்ற
உள்ளத்துக் களிப்பிற்கு உரையிங்கு இல்லை!
வருகின்ற கார்மேக வளர்மாலைப் பொழுதில்
வார்முல்லை நிலவாச வளப்பத்தைக் கண்டேன்!

மாயோனின் அருள்வேட்ட மகிழ்ந்தங்கே புறவில்
மலர்கின்ற சிறுமுல்லை மலர்கொய்து பின்னி
ஆயோரின் இளம்பெண்டிர் அடிபோற்றி நிற்க
அவர்பக்கல் அலர்மஞ்ஞை அகவோசை ஆர்ப்ப

தீயோரின் செயலோட்டத் தாதெருநல் மன்றில்
திருக்குரவை ஆய்ப்பெண்டிர் திளைத்தாடக் கண்டேன்!
வாயூற பால்வெண்ணை வழிந்தோடும் நெய்யும்
வந்தெனக்குத் தந்தார்கள் வகைவகையாய் உண்டேன்!

கொல்லேறு தனிற்கொம்பை கூர்மையுறச் சீவி
கோட்பறையை இடித்தார்கள் குலப்பெருமை யாய
வல்லேறு தழுவுதலின் வலிமையினைக் கண்டு
வளர்மாலை மணம்பூன வாரித்தார் பெண்டிர்!

நல்லாயர் வீரமதை நாளெல்லாம் எண்ணி
நலக்காதல் உளம்பூக்க நயந்தார்கள் பின்னும்
வல்லெருமைக் கொம்பூன்றி வணங்கியபின் அவர்கள்
வனப்பார்ந்த மணப்பந்தல் வந்தமரக் கண்டேன்!

கொன்றையிளங் குருந்துடனே காஞ்சியுடன் வெட்சி
கோடலுடன் ஆல்கடம்பு குல்லையிடை முல்லை
நின்றதொரு கான்பரப்பில் நிரைமேய்த்து வாழ்ந்தார்!
நிறைதமிழில் மாட்டுக்கு பொருள்செல்வம் என்றார்!

செந்நிலத்துப் பெருவழியில் சென்றூர்ந்து கோவாய்
சிறுநிலங்கள் ஆண்டிருந்த செல்வநிரை ஆயர்
நின்றூன்றி நிரைமேய்க்க நிமிர்த்தியதோர் கோலே
நீடித்துச் செங்கோலாய் நிலைபெற்ற தென்பேன்!

# ஈழவன் தாசன்

ஈழம்

புல்லினம் மகிழ்ந்திட பூத்திருக்கும் மலர்கள்.
புல்லாங்குழல் இசைதர பொய்கை பாய்ந்தோடும்..
வானுயர்ந்த வாகையினம் வரைபடத்தை மறைத்திருக்க
வள்ளுவனும் கம்பனும் வரைந்திட்ட பாடல்கள் நூறு..

ஔவைக்கு பழம்தந்த நாவலுக்குப் பெருமையும்
ஆறுமுகன் சூழ்ந்திருக்க அழகுதரும் காடுகளும்.
முல்லைக்கு தேர்கொடுத்த பாரிக்கு வள்ளலும்
மும்மாரி பொழிந்தருளும் முல்லைவனச் சோலைகளும்..

உழவனுக்கு உயிராகி உறைவிடம் தந்தருளும்
முல்லைவனக் காடுகளின் எல்லையில்லாப் பலன்களும்
நாகரிகமோகத்திலே முல்லை நாசமாய் போவதென்ன..
ஆசையோடு நாம்காண அருகிலில்லை முல்லைவனம்.

அன்னாந்து நோக்கிடவே அழுகின்றது வானம்
அழிந்து போகும் காடுகளின் அவலநிலை கண்டுமேகம்
அரியவகை மரங்களும் மருவிப்போகும் நிலையிலே
பெருகிவரும் சனத்தொகையில் அழிந்து போகும் காடுகள்...

கட்டுக்கடங்கா காட்டுத்தீ கருகும்  பயிரோடு உயிர்கள்
கண்டு மகிழ்வுறும் இன்றைய அரசியல்..
சாமிக்கு அலங்காரம் சக்கரங்களோ மரங்கள்.
முல்லைக்கு தேர்கொடுத்த பாரியோ வள்ளல் சாமியோ.

பணத்தைசையில் மரங்கள் பலவண்ணங்களாய் மின்ன.
பருவமழையை காணவே பலகாலம் ஆகும்நிலை
இயற்கைக் காடுகளின் இன்றைய தோற்றம்
நாளை எதிர்கால சந்ததியின் இணையத்தின் தேடல்...

காடும் காடுசார்ந்த நிலப்பரப்பும் இன்று.
காணாமல் போகும் நிலையின் கொடுமைகள்.
முல்லை வனம் கொள்ளைபோக கடல் மூழ்கும் நிலையில்
முல்லை நில எல்லைகளோடு நாம்...

# சி. பாக்கியராஜ்

தருமபுரி


அழகான இயற்கை அமைப்பைப் பொறுத்து
பழந்தமிழன் ஐவகை நிலங்களை வகுத்தான்..
முரண்பாடு வராமல் சரியாய் தொகுத்து
இரண்டாவது இடத்தில் முல்லையை வைத்தான்...

காடும் காடு சார்ந்த இடமாம்
காரும் மலையும் முல்லையின் சிறப்பாம்....
ஆயர் மக்கள் வாழ்ந்த நிலமாம்
ஆண்டவனாய் திருமாலை வணங்கிய பூமியாம்......

ஏறு தழுவுதல் குல விளையாட்டாம்
எருமை மேய்த்தல் குலத் தொழிலாம்...
வரகும் சாமையும் வயிற்றுக்கு உணவாம்
வானும் மண்ணும் இவர்களுக்கு உயிராம்...

குறுநில அரசுகள் தோன்றிய பகுதியாம்
குணங்களில் நல்லவை ஊன்றிய பகுதியாம்...
தனித்தனிக் குடும்பமுறை உருவான பகுதியாம்
தனிநபர் சொத்துரிமை கருவான பகுதியாம்...

விரிச்சி கேட்டலை செய்த நிலப்பகுதியாம்
வீரத்தை நித்தம் விரும்பிய நிலப்பகுதியாம்...
ஈர நெஞ்சங்கள் நிறைந்த நிலப்பகுதியாம்
ஈகையும் இரக்கமும் முளைத்த நிலப்பகுதியாம்..

சுறுசுறுப்பாய்ச் செயல்பட்ட சுத்தமான கூட்டமாம்
சுருமாடு பயன்படுத்திய உழைப்பாளிக் கூட்டமாம்...
முல்லை நிலத்தின் ஆயர் கூட்டமே
முத்தான நாகரிகத்தின் முதல் தத்துவமாம்...

# கவிஞர் அ. பாண்டுரங்கன்

இல்லை என்று சொல்லாத வள்ளல் மனம்
கொண்ட பாரி ஆண்ட மண்ணே எங்கள் முல்லை
கள்ளமிலச் சிரிப்புடனே பிள்ளை மனத் தவிப்புடனே!
அண்டிவந்தோர் பசிதீர்த்த பாரிவாழ்ந்ததெங்கள் முல்லை!

காட்டு விலங்குகள் யாவும் இங்கே
கூட்டுக் குடும்பமாய் வாழும்!
பாட்டுக் குயில்களின் கீதமும் இங்கே!
வாட்டும் மனத்துயர் போக்கும்!

சந்தன மரங்களின் சங்கமம் இங்கே
வாசப் பூமழை தூவும்!
சிந்தனைப் புலவனின் எண்ணம் இங்கே
செந்தமிழ் ஆறாய் மாறும்!

முல்லை மலர்களின் ராச்சியம் அங்கே!
பிள்ளை மனங்களும் களிக்கும்!
இல்லையென்றாகும் எல்லா வளங்களும்
முல்லை நிலந்தனில் வசிக்கும்!

சின்னக் குயில்களின் மெல்லிய கீதம்
தென்றலை மனங்களில் பொழியும்!
வண்ண மானினம் துள்ளிடும் நடனம்
கண்களில் பூமழை பொழியும்!

காடுகள் அழித்து வீடுகள் காக்கும்
கயவர்கள் கூட்டம் இங்கே!
தேடுதல் செய்வோம் காடுகள் காப்போம்!
மரங்கள் வளர்ப்போம் அங்கே!

# கோபி கிருஷ்ணா

முல்லை இல்லாது மாரியும் பொழியுமா?
முல்லை அழித்தே மனிதமும் அழியுமா?
பூமியில் இன்னொரு வானம் இந்த வனம்
நாம் உயிர்வாழ காக்கிறது தினம்

அதை அழித்து வாழ்வது ரணம
நச்சுக்களை உள்வாங்கி பரப்பிடுமே நறுமணம்
அடுப்பெரிக்கச் சுள்ளிபொறுக்கியவர் அழிக்கவில்லை வனத்தை
பசுமை சாலைக்கும் நகரமயமாக்கலுக்கும் அழித்தவரே அதிகம்

சட்டம்போட்டு வனமழிப்பவரும் தேசத்துரோகிதான்
மொட்டை மரங்களும் பொட்டல் காடுகளும் உணர்த்தவில்லையா?
அமங்கலி நாங்கள் உடன்கட்டை ஏறுகிறோமென்று
நகரத்தை உருவாக்கி நரகத்திற்கு வழிக்காட்டாதீர்கள்

வெப்பத்தை உள்வாங்கி மழைதரும் செல்வத்தை அழிக்காதீர்கள்
நமக்கு பிராணவாயு தந்தவனைப் பிடறியிலடிப்பதா கைமாறு?
கோட்டை தாங்கும் தூணாய் நிற்பவனை
கோடாரி கொண்டு வெட்டுவதா நாகரீகம்?

பஞ்சத்திலிருப்பவனையும் வாழவைக்கும் வனம்
பிரபஞ்சத்தைக் கூறுப்போட்டு வாழாதீர் தினம்
பூமியின் சொர்க்கம் காடுகள் அல்லவா
வனவிலங்குகளுக்கும் நீ செய்வது தீங்கல்லவா?

சந்தனமரமும், செம்மரக்கட்டையும் வரலாறு பேசும்
ஆனாலதன்,அழிவின் பிழைகள் எதனைப் பேசும்
வனமிருந்தால் வானம் பொழிந்து பூமி செழிக்கும்
மனமிருந்தால் நாமும் வாழ்ந்து வனங்களைக் காப்போம்

நாளைய சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்வோம்
வாழ்வின் ஆணிவேரான வனத்தை வாழவைப்போம்

## சு. சிவசுப்பிரமணியன்

புதுச்சேரி

கதிரவன் படைகளுக்கு தடை போட்டிடும்
உடை போர்த்திய கிளைகளுக்கு கீழே
நடை பயிலும் மடை தேடும் உயிரினங்கள்.....!
சுட்டெரிக்கும் சுடரிலும் தண்மை மாறா

வளி மட்டுமே வழியில் வந்துறவாடுமே...!
பகல் இரவு பேதமெல்லாம் பகுத்து பார்க்க
கண்களுக்கே சோதனை தரும் தருவெலாம்
அடர்ந்து படர்ந்து பச்சையள்ளி தூவிருக்குமே....!

முகிலினம் கூடியதும் கருமையானதும்
மேனி தீண்டும் நீர்த்துளிகளே தகவல் பரிமாறும்!
இசை பிறக்க புது ஓசை! இனிதான கானம் யற்றவொரு
இ புள்ளினமே! இசைத்து நம்மைக் கவர்ந்திடுமே

கலப்படமற்ற மழைநீரால் நிரம்பிய பள்ளம்
குட்டையென்றே கூற முடியா தெளிவதனை
கால் வைத்தே கலங்கிய பின்னே
உணரச் செய்யும் தெளிந்ததொரு நீர்நிலை

மனிதச் சுவடுகள் பதியுமுன்னே இருந்த சுவடுகள்
இவை தானென்றே சொல்ல வைக்கும் வடுக்களிலே
இன்று திரியும் முல்லைக்கோர் தேர் கொடுப்பார் யாரோ?
வெட்டப் பட்ட மரத்திலே புதைகின்ற நிழலை மீட்டெடுப்பார் யாரோ..

நீர் தேடி வனம் விட்டு வருகின்ற விலங்குகளின் அணிவகுப்பை
வேடிக்கையாய் பார்க்கும் பொழுதுகள் மட்டும் வளர்ந்தே
முப்பொழுதும் காட்டுகின்ற வனம்....!
முற்றத்து முல்லை கடந்து முல்லையின் முற்றத்துக்கு வந்து விட்டோம்....!

தவறு நம் தவறல்ல! காலத்தின் வேகத்தில்
நமது பெருக்கம் வளர்ந்து விட்டதாலே...!
காலத்தின் திரிபு சுருங்காததால் இங்கு நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமாய் சுருங்குகிறது! முல்லை நிலத்து நிழல்!

# கவிஞர் லோ. ராஜ்குமார்

முல்லை நிலத்து நிழல்...

முல்லை செழிக்குமோ மாமழை பெய்யுமோ
கலிகாலம்மென்பதால் கார்காலம் பொய்க்குமோ?
காடுகள் காயவோ காட்டாறு கானலோ
காலத்தின் மாற்றத்தால் கடவுளும் கல்லானதோ?

எங்கும் பார்க்கின் ஏமாற்றம் ஆகுதே
கடவுள் பெயரால் காடுகள் அழியுதே
அங்கும் இங்கும் அலையும் விலங்கினம்
தேடியும் இல்லை தடத்தின் பூர்விகம்

ஆசையும் காதலும் அசையா சொத்தே
முல்லை நிலத்தில் மூவினம் வளர்த்தே
காக்கவும் நோக்கவும் காதலில் நடக்கும்
விட்டுக்கொடுத்தால் வாழ்கை செழிக்கும்

நீரில் கரையும் கல்லும் மணலாய்
தலைவியும் கரைவாள் தலைவன் நினைவாய்
நிசமாய் இன்று காதலும் இல்லை
நித்தம் நடக்குது மணலின் கொள்ளை

கொள்ளை அழகாய் காடுகள் பார்த்தோம்
கொள்ளை அடிப்பதை கண்களில் பார்த்தோம்
அமைதியாய் இருந்தால் அனைத்தையும் இழப்போம்
அழகாய் இருந்த காடுகளை மீட்போம்!

நிர்வாணமாய் மாறும் நிலங்கள் இங்கே
ஆடைகளாய் இருந்த அழகிய மரங்கள் எங்கே
நீர்நிலை யாவும் வேண்டும் என்றால்
காடுகளைக் கடவுளாய்ப் பார்த்தல் நன்றே!

எழுவாய் தமிழா ஆதியை மீட்க
எழுவாய் தமிழை நாமும் கற்க!
எழுவாய் தமிழா ஆதியை மீட்க
எழுவாய் தமிழை நாமும் கற்க!

# கவிஞர் கவிமுத்து

மதுரை

ஐந்திணைகளில் ஒன்றான முல்லை திணையே!
உனக்கேதும் இல்லை ஈடுஇணையே!
முல்லை மலரைத் தழுவிப் பெயரேற்ற காடுகளே! –
செம்மண்ணில் முளைத்த
மரங்களால் செம்புலமென அழைக்கப்பட்டதே!

முல்லையே! காரென்னும் பெரும்பொழுதும்
மாலையென்னும் சிறும்போழுதும் உம்பொழுதுகளாம்!
ஆடுமாடு மேய்ப்பவர்களை ஆயர் ஆய்சியரென்றும்
ஏறுதழுவுதல் விளையாட்டே மரபின் சிறப்புகளாம்!

காடுகளே! - காற்றை அடிவயிற்றிலிருந்து பெற்றெடுத்த தாய்களே!
விலங்குகளின் எச்சமே உங்கள் உரம்
பறவைகள் உம் வம்ச விருத்தியாளர்கள்
உம்மை இன்னுமழகாக்கிடும் இரண்டாம் மலர்கள் பட்டாம்பூச்சி!

பசுமையே! இறைவன் தந்த அருட்கொடையே!
நீ பூமியில் முளைத்ததால் - பூமிக்கு
கூந்தலாகி பெண்ணாகி பூமாதேவியென்று பெயரானது!
நீ முளைக்காமலிருந்தால் - உலகம்
காய்ந்து வழுக்கையென பெயர் வாங்கியிருக்கும்!

முல்லையே! நீ விருட்சமாக்கும் விருத்தியாளன்!
காதலியே வா! முல்லைக்குள் செல்வோம்!
நீயும் நானும் ஆதாம் ஏதாவாலாக மாறுவோம்!

பசியென்றால் காடு நமக்கு பழம்தரும்!
வெயிலென்றால் காடு நமக்கு நிழல்தரும்!
மழையென்றால் ஓடியொளிந்துகொள்ள படர்ந்த கிளைதரும்!
நாம் குடும்பம்நடத்தவே குகைபோன்ற இடம்தரும்!

காடுகள் இல்லையேல் நாடு இல்லை
நாடு இல்லையேல் உலகமேயில்லை!

# கவிஞர் அன்பு கரன்

பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட
ஐவகை நிலங்களில் முல்லையும் ஒன்று
செம்மண் பரந்த செம்புலம் இந்நிலம்...

காரும் மாலையும் சிறுபெரும் பொழுதுகள்
மாயோன் திருமால் முல்லையின் தெய்வம்
ஆநிரை உழவு அவர்தம் தொழிலாம்
இருத்தலும் வஞ்சியும் அகபுற ஒழுக்கம்...

ஏறுதழுவுதல் இவர் குல விளையாட்டு
வரகும் சாமையும் வயிற்றுக்கு உணவு
தலைவன் பிரிவால் தலைவியின் தவிப்பு
தலைமுறை கடந்தும் தொடர்ந்திடும் பிழைப்பு...

கோட்டினத்தார் எருமைகளும் கோவனத்தார் பசுக்களும்
புல்லினத்தார் ஆடுகளும் மேய்த்தலே தொழிலென
மேன்மையாய் வாழ்ந்தனர்

ஏறுதழுவி எருமைக் கொம்பை வழிபட்டு
சூதுவாது இன்றி சுகமாக வாழ்ந்தனர்
நறுவீ முல்லையும் சேண்நாறு பிடவமும்
செறியிலைக் காயாவும் முறியிணரக் கொன்றையும்

கோடல் குவிமுகையும் தோடார் தோன்றியும்
முல்லை நில பூக்களாய் மலர்ந்து சிரிக்க
மனது நிறைந்து மகிழ்கிறது...
ஏறுகோட்பறையில் இசை முழங்கியும்
முல்லை யாழ்மீட்டி புகழ் விளங்கியும்
பொருள் ஈட்டச்சென்று வாராத தலைவனால்
பொன்மாலைப் பொழுதுகள் புன்மாலையாகி வருத்தியது

சங்க கால பதிவினில் புலவர்களின் பாட்டினில்
முல்லை நிலத் தரவுகள் கொடிமுல்லையாகப் படர்ந்திட
காடும் காடு சார்ந்த இடமும் காப்பியமாய்த் திகழ்ந்ததே...

# மருதம்

முன்னுரையும் வாழ்த்துரையும்..

வேந்தன் மேயத் தீம்புனல் உலகம்" என்கிறது
மருத நிலத்தைத் தொல்காப்பியம்.
ஆம் மழைவளம் மிகுத்து ஆறும், ஏரியும்,
பொய்கையும், குளமுமாய்
எங்கு நோக்கினும் நீர்வளம் மிகுந்த சமவெளிப்
பகுதியாக காட்சியளிக்கும் மருதநிலம்.

இந்நிலத்தில் இஞ்சியும்
மஞ்சளும் செந்நெல்லும் கரும்பும் வாழையுமாய்
நன்செய் நிலம் செழித்துக்குலுங்குவதால்
மக்களைக் காக்கும் மன்னனே இந்நிலத்தின்
தெய்வமாக வைத்துப் போற்றப்படுகின்றார்.

இல்லத்தில் செல்வவளம் மிகுந்திருப்பதாலும்
தலைவனானவன் கொண்டாளை விட்டுப்
பரத்தையின் வீடு செல்லும் பழக்கம் மேலோங்குவதாலும்

தலைவனுக்கும் தலைவிக்கும் அடிக்கடி
ஊடல் தோன்றும். எனவே ஊடலும் ஊடல் நிமித்தமுமே
இந்நிலத்தின் உரிப்பொருளாக விளங்குகிறது.
சங்க இலக்கியத்தில் மருதத்திணை பாடுவதில்
வல்லவராகப் போற்றப்படுவர் ஓரம்போகியர்.

ஏற்காட்டின் குறிஞ்சி நித்தில் நின்றுகொண்டு
பண்பாட்டை உலகுக்குத் தந்த மருநிலம்
பற்றிப் பண் பாட வந்திருக்கும் பாவலருக்கு வாழ்த்துகள்

ஆம்பலும் அல்லியும் பூக்கும் - அதை
அந்திநிலா வந்து நோக்கும்
கூம்புதண் தாமரை போலே - பாம்பு
குளத்தினில் தலைதனைத் தூக்கும்
காம்பினில் வாளைமீன் மோத - எருமை
கறந்ததீம் பால்குளம் தேக்கும்
தீம்புனல் மருதம் பாரும்- அதை
தித்திக்கப் பாடநீர் வாரும்..!

ஏழைகள் ஊட்டியில் நின்று - இன்பம்
ஏந்தும் கவிதனைக் கொண்டு
வாழைய டிவாழை யாக - போற்றும்
மருதப் நிலத்தினைப் பாட
காளைபோல் கவிஞரே வாரும் - காதல்
கற்கண்டுத் தேனள்ளித் தாரும்
ஆளை மயக்கட்டும் பாட்டு - அதில்
அகிலம் மயங்கட்டும் கேட்டு..!

வாழ்த்தி வரவேற்கிறேன்..

இவண்

**பைந்தமிழ்ச்செம்மல் பே. வள்ளிமுத்து**

# உஷாதேவி பார்த்தசாரதி

அச்சமின்றி வாழ்வதற்கு அடைக்கலமாகும் இடம்
துச்சமெனத் துணிவில் துளிர்க்கும் வாழ்வியல்
மிச்சமெனச் சேமிக்கும் மிகையான வளங்கள்
இச்சகத்தில் நாகரீகம் இழையோடிய இன்பத்தடாகம்

கூடிவாழவும் பாதுகாப்பிற்கும் கற்பித்த கல்லாரி
நாடிச்சென்று அடைந்திடும் நல்லவைகள் எதுவென
ஓடிவரும் நீர்நிலைகள் ஒளிந்திருக்கும் கனிமங்கள்
தேடிவரும் விளைச்சலில் தெளிந்த வணிகம்

தேங்கிடும் குளங்களில் தெறிவான தொழில்கள்
ஓங்கிடும் கற்பனையில் உருவான கலைகள்
நீங்கிடும் ஐயத்தில் நீதியான சட்டங்கள்
தாங்கிடும் நேயத்தில் தழைத்த உறவுமுறைகள்

வயலின் வளமையில் விளைந்த உணவுப்பொருட்கள்
செயலின் உழைப்பில் செயித்த முன்னேற்றங்கள்
அயலின் தோழமையில் அமைந்த கண்டுபிடிப்புகள்
முயலின் வேகமின்றி முனைந்த மாற்றங்கள்

தோதான மருதம் தோழமையை வளர்த்திட
சாதாரணமானவை முனைப்பில் சாதனையாக மாற்றிட
ஆதாரங்கள் முன்னோடியாக அனைத்திலும் தமிழாக
சேதாரங்கள் தவிர்த்து சீர்திருத்திய மாருதமானதே

நடப்பில் நலிவது நயவஞ்சகத்தால் இரக்கமின்றி
கிடப்பில் போடுவது சந்ததிகளின் எதிர்காலத்தை
உடைப்பில் குளிர்காய்ந்து உரமின்றி வீணானதே
படைப்பில் இறையானவை பழிதீர்க்கப்படுகிறதே வஞ்சத்தால்

## கோ. ரா. ரவி

பண்பட்ட நிலத்தில் பசுமையான சூழலில்
வாழந்த மனிதர்கள் பசுமைப்புரட்சி என்ற
பெயரில் நிலங்கள் பாழானதே

பார்க்கும் இடமெல்லாம் பசுமையாக இருந்தனவே
பன்னாட்டுநிறுவன படையெடுப்பால் நிலங்கள் பாழானதே
ஆற்றம் கரையோரம் வாழந்தமக்கள் அறிவோடும் அன்பொடும்
அரவணைப்போடும் ஆற்றல் மிக்கவராக வாழ்ந்தனரே

மாதம் மும்மாரி மழையும் பெய்தனவே
சுற்றுச்சூழல் சுகாதாரமாக இருந்தனவே
ஆடிப்பட்டம் தேடி விதை என்றார்களே
ஆம் அறிவுள்ள மனிதன் அதை செய்தானே

ஆறுகள் குளங்கள் ஏரிகள் மனிதர்களிடம் இருந்து போதே
பொதுப்பணித் துறையின்கீழ் ஆறுகள் குளங்கள்
ஏரிகள் சென்ற போது பொரித்து எடுத்து விட்டனரே
நகரமயமாக்கல் என்றபெயரில் இயற்கை நாசம் செய்தனரே

விளைநிலங்களில் பன்னாட்டு நிறுவனம் வைத்து
சுற்றுச்சூழல் கெடுத்தனரே
கண் கெட்ட பின் கதிரவன் வணக்கமா
கண் விழித்துக் கொள்ளுகள்
களவாணிகளை களைந்து எறிவோம்.

# மணிமாறன் கதிரேசன்

விளைச்சல்தான் முடிந்ததுமே ஆட்டுமந்தை கட்டிவைத்தேன்
விட்டுப்போனக் கழிவைத்தான் விளைச்சலுக்கே விட்டுவைத்தேன்
மாட்டுச்சானம் சேகரித்து இயற்கையுரம் செய்துவைத்தேன்
மண்வளத்தைக் காக்கவே  இயற்கையிடம் சரண்புகுந்தேன்

மாட்டைப்பூட்டி ஏரைத்தாங்கி நிலத்தைதான் உழுதுவைத்தேன்
மண்புழுக்கள் மங்காமிருக்க இயற்கையுரமே போட்டுவிட்டேன்
மாதம்மும்மாரி மழைபொழிய இயற்கைக்கே தூதுவிட்டேன்
மழைதந்து மகசூல்சிறக்க இறைவனையும் வணங்குகின்றேன்

வரப்புகள்தான் வெட்டும்போது உடல்வலியும் மிகுந்திடுதே
விடாமழை பொழியாமல் விட்டுவிட்டு வந்திடவே
களையெடுத்துப் பயிரைக்காக்க கர்ப்பவலியே தந்திடுதே
கடுமையான வலியெல்லாம் கதிர்பார்க்க பறந்திடுதே

நீர்பாய்ச்சும் அழகெல்லாம் நிம்மதியும் தந்திடுதே
நீர்வந்து உரசும்போது நெற்பயிரும் சிலிர்த்திடுதே
நீரின்றி வாழத்தான் முடியுமோயென காட்டிடுதே
நீரருந்தி நமக்கெல்லாம் உணவுகளை படைத்திடுதே

பச்சைநிலம் பார்க்கத்தான் பரவசமும் தந்திடுதே
பாதைக்கு வழிவிட்டு சோளமும்  நின்றிடுதே
பறவையைத் துரத்தவே வெள்ளைத்துணி பறந்திடுதே
பார்க்கவே நெற்பயிரும் வெட்கித்தலை குனிந்திடுதே

வரப்பிலே வளர்ந்து புகுந்தவீட்டுக்குப் போறவளே
வளர்ந்தவீட்டுப் பெருமையை அவர்தம் உணர்த்திடுவாளே
வளர்வதிலே அத்தனை சிரமத்தைப் பார்த்தவளே
வளமத்தை வீண்செய்யாதிருக்கச் செய்திகளைச் சொல்லிடுவாளே

# ஆத்தூர் சாகுல்

காவிரி திறந்து கடைமடை பாய்ந்து
நிலமது  குளிர நெஞ்சமெல்லாம் இனிக்கும்

பாத்தியில் நாற்றும் பக்கத்தில் உழவும்
சேற்றின் மணமும் சிந்தையை கவரும்

காளையர் தோளில் நாற்று சுமக்க
களைப்பை போக்க பாட்டு பாடும்
நாற்று நடும் பெண்கள்

நட்ட நாற்றுகள் பச்சைப் பிடித்து
அடர்த்தியைக் கூட்டும்
நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய்
பயிர்கள் வளரும்

பூச்சிகள் புழுக்கள் தவளைகள் பாம்புகள்
நண்டு நத்தைகள் வயலில் உலவும்
எங்கிருந்தோ வரும் பறவைக்  கூட்டம்
உண்டு மகிழும்

பால் கக்கிய நெற் கதிர்கள்
நிறம் மாறி முற்றி வரும்
முற்றிய நெல் மணிகள்
மனித இனம் பசியாற

ஒதுக்கப்படும் வைக்கோல்களோ
கால் நடைகள் பசியாற

மருத நிலத்தில் அன்று கண்ட
இந்தக் காட்சி இன்று காண
முடியாமல் போனது வேலை தேடி
நகர்ப்புறம்  வந்ததால்

# தங்கை பாலா ஆசினி

மருதநில பரப்பினிலே மகத்தான தொழிலுண்டு
கருப்பையின் புனிதம்போல் கழனிகளும் தானுண்டு
ஏரோடும் நிலத்தினிலே எண்ணற்ற பயிருண்டு
நீரோடும் நிலத்தினிலே நெற்பயிர்கள் விளைவதுண்டு

பசுமையான வயல்வெளிகள் பார்ப்போரை ஈர்ப்பதுண்டு
விசும்பினது துளிவிழவே வியர்வைக்கு அர்த்தமுண்டு
பாடுபடும் விவசாயி பகலெல்லாம் உழைப்பதுண்டு
வாடும்பயிர் துளித்தெழவே வருணனவன் பங்குண்டு

வியர்வையினை சிந்திடவே விளைச்சலுமே காண்பதுண்டு
உயர்வான தொழிலாக உலகினிலே நினைப்பதுண்டு
தேக்குமர தோப்புண்டு தென்றல்காற்று வீசுவதுண்டு
பாக்குமரம் வளர்வதுண்டு பசுமையான சோலையுண்டு

செந்தாமரை மலர்வதுண்டு செங்கரும்பு விளைவதுண்டு
அந்திபொழுதில் மகளிரெல்லாம் அகல்விளக்காய் ஒளிர்வதுண்டு
செந்நெல்லும் தலைகுனிய செங்கரும்பு வான்முட்ட
அந்திசாயும் பொழுதுவரை அயராது உழைப்பதுண்டு

மாடாக தானுழைத்து மண்ணெல்லாம் பொன்னாக்க
காடாக இருந்தநிலம் கழனியாக மாறுவதுண்டு
அன்றாடம் வயல்வரப்பை அக்கறையுடன் பார்ப்பதுண்டு
தன்னுழைப்பைச் சிந்தாது தரணியிலே படுத்ததில்லை

ஏரோடு தான்நடந்து எல்லோரும் வாழ்ந்திடவே
சீராக பயிர்வளர சிந்திடுவார் வியர்வையினை
ஆறுகுளம் தூர்வாரி ஆழமாக நீர்தேங்க
சேற்றினிலே தான்வளரும் செந்தாமரை பூப்பதுண்டு

நண்டினங்கள் வலைதேட நளினமாக நடைபயில
வண்டினங்கள் ரீங்கார வசந்தப்பா  பாடிடுமே
தண்டினிலேயே விளைந்தபயிர் தலைகுனிந்து நிற்கையிலே
மண்வளமும் தெரிந்திடுமே மகசூலும் பெருகிடுமே

# செல்வம் பெரியசாமி

கோல மயில்களாட தாமரை ஒளிமலர
குளத்துநீர் கொண்டலில் திரைச் சேலையாடும்
குவளை கண்விழித்து மகிழ்ந்து நோக்கும்
மேகமத்தளம் மகரயாழ் மீட்டும் இனிதே

வெந்தன் மேயும்தீம் புனல் மருதமே
நீர்மிகின் சிறைபடா மேட்டு முல்லையின்
வனமழித்து பள்ளமாம் கழனி சமைத்து
முயல்பாயும் வழியில் கயல்பாயக் குளமமைத்து

வடவாறு வெண்ணாறு  வெட்டாறு காவேரி குடமுருட்டி
ஐயாறாய் நடந்தாய் வாழி காவேரி
வளவன் கண்ட மருதமே  பொருணை
கயத்தாறு சிற்றாறு  வளமான முக்கூடல்

தமிழன் கைப்பட்ட மண்ணின் மாண்புரைக்கும்
நாகரிகத் தொட்டிலென சாற்றும் பண்பாடே
பெரும்பொழுதாறும் சிறுபொழுதாறும் பெற்ற நிலம்
வரைவில் மகளிர் நாடிய மகிழ்நன்

உழத்தியிடம்  ஊடியும் கூடியும் வளம்பெற
இறையோ  இந்திரன்  ஊரனுழவன் உழத்தியர்
மக்களொடு நாரையன்னம் குருகுதாரா எருமை
மான் முயல் நீர்நாய் விலங்கொடு

பேரூர்  மூதூர் ஆற்றுநீர் குளத்துநீர்
தாமரை கழுநீர்  பூவொடு மருதமரமும்
மருதயாழ் பண்ணிசைத்த வளமான மருதமே
ஈழமலையாள மின்னல் மழைக்கான பருவமென

காலநிலை விளக்கும் விஞ்சிடும் விஞ்ஞானம்
நெல்லின் வகையும் மாட்டு வகையும்
நிலவகையும் நீர்நிலை வகையும்  மருதக்கொடையே
புல்லைப் பழக்கி நெல்விளைப் பயிராக்கி

வயிற்றுத் தீத்தணிக்கும் உழவே தலையாகி
ஏர்மங்களம் பள்ளுபள்ளேசல் நடவுப் பாட்டொடு
கலைக் கூடமெனத்  திகழும் மருதமாண்பே

# கவிதா ராஜசேகர்

தரணி கண்ட தன்னிகரற்றத் தொழில்களையெல்லாம்
தாங்கிப்பிடிக்கும் அச்சாணி யாம் உழவுத் தொழிலை
உயர்த்திய நிலம் ஒப்புயர்வற்ற மருதமே
உணவு கொடுத்து உறவு செழித்து

மனிதம் வளர்த்தது மாசில்லா மருதமே
மாஞ்சோலை அழகும் பூஞ்சோலைப் பொலிவும்
புன்னகை பூத்திடுமே புத்தொளி வீசிடுமே
ஆலும் அரசும் வேலும் வேங்கையும்

அழகாய் அமைந்து நெடிதாய் நிழலீந்து
வாய்க்காலதுவும் வளமாய் வயல் நிறைத்து
மண்ணைப் பொன்னாக்கி மகசூல் கொடுத்தது மருதமே
நாடோடியாய் திரிந்தவனை நாகரீகமாக்கியது மருதமே

ஐவகை நிலத்தினும் உயர்வுடையது மருதமே
நிலத்தோடு நீர் சேர்த்து நெல் விளைத்து
தன் கையே தனக்கு உதவியென
தலை வணங்காது நிமிர்ந்த உழவரின் கூட்டமே

தரணியில் உனக்கில்லை ஒருபோதும் வாட்டமே
உழவை மதிக்கா நாடு உயிரற்ற வெற்றுக் கூடு
மருதம் போற்றாத மானுடமே நீயென்றும்
மண்ணுலகில்  வாழ்வதெல்லாமே வீண் இடமே

மானம் மறைக்க மலிவான கோவணமெனினும்
தன்மானத்துடன் சேற்றில் வாழும் செந்தமிழனாம்
உழவரை உதாசீனப்படுத்தி ஓங்கி மிதித்தோரெல்லாம்
உணவுக்காய் கையேந்தி அலைவரென்பது உண்மையே

உழவை உளமார வந்தனை செய்து
உழவரை நித்தமும் நிந்தனை செய்திடுவோம்...
வயலும் வயல் சார்ந்த  நிலமாம்
மருதம் போற்றி மனிதனாய் வாழ்ந்திடுவோம்

# பாவலர் சீனி பழனி எம். ஏ.

குறிஞ்சி முல்லை நெய்தல் சூழ
சிறந்தோர் பயிலும் சீரிள மருதம்
உறவோர் கூட உழவும் பொலிய
அறவோர் கூடல் அருந்தமிழ் நாடே

அருவி மழையோ அணைசுகம் கழனி
மரமும் செடியும் கொடியுடன் முல்லை
மரகத மலையின் கால்வல் நெடுந்தேர்
வரகு கொள்ளு வாளைப் போரே

காவும் மாவும் கனிமலி கரும்பு
ஆவும் கன்றும் யாடென மந்தை
தாவும் மந்தி தனியுயர் மரமே
ஆவல் மாக்கள் அடுபோர்க் கல்வி

அறமும் பொருளும் ஆர்வளர் அன்பே
நெறியுடன் முடியே நீதிக் குடியே
இறைதுணை யறியா முறைமனக் கோலே
பிறைதுணை விழவு பேறென வாழ்வு

மருதக் கொடையே மனைநிறை மகிழ்வு
திருமுகம் ஒளியே தேர்சொல் நங்கை
சுரந்திடும் அன்பு சோறிடும் பண்பு
கரம்பயில் காதல் கனிவது ஊடல்

ஏர்த்தொழில் வழியே எருதுகள் களிறே
போர்த்தொழில் பரணி பொருண்மை வீரம்
கார்த்தொழில் வானம் கதிர்பொதி மண்ணே
தேர்தமிழ்ப் புலவன் தெளிதமிழ்க் கண்ணே

# செ. வெங்கடேசன்

விசும்பி நின்ற   மழைநீரும் அங்கே
பசும்புல் தலையில் படியும் பனிதுளியும்
அச்சாரம் போடும் நண்டுயினமும் விளையாட்டிடும்
பசுக்கண்றினமும் மருதத்தின் சிறப்பே

குருவிக்கூட்டை நோட்டமிடும் பருந்தும் அங்கே
கருத்தாய் கண்காணிக்கும் அணில் கூட்டமும்
உருமாறும் பச்சோந்தியும் தாங்கிடும் மரமும்
இருக்குமிடமே மருதத்தின் சிறப்பே சிறப்பு

விவசாயத்தின் நம்பிக்கை நண்பன் காளையும்
அவசரமாய் உருண்டோடிடும் சக்கரவண்டியும் விவசாய
கவசமாய் இருக்கும் கலப்பையும் அருவாயும்
விவசாயம் சார்ந்த மருதம் பெருமையே

சித்திரக் கைப்பழக்க மகளிர் வேலையும்
சித்திரை முதல்நாள் சூரியப் படையலும்
நித்திரையில் உறங்கும் மனிதரின மும் அவை
எத்திசையில் சுவைக்கும் மருதமாய் இனிக்குமா

மாற்றம் ஒண்ணே மாறாதது உலகில்
ஏமாற்றமில்லாமல் விவசாயின் வாழ்வு மாற
மாற்றம் கண்டிடுவோம் விவசாயின் வாழ்விலே
மருதத்தை நேசித்து நாட்டைக் காப்போம்

## கா. சதீஷ் காளிதாஸ்

மண்மனம் மாறாத மருத நிலத்தில்
மாண்பினை எடுத்துரைக்கவே
மருதமண்ணின் மைந்தனாய் வந்துள்ளேன்

உலகுக்கே உழவு கற்பித்த
உயர் உள்ளம் படைத்தவன்
தமிழ் வேந்தன் அவனை
தலைவனாய் கொண்டு வாழ்ந்தவன்

வெல்லாண்மை விதைப்பினும்
சொல்லாண்மை கொண்டு
இல்லாமையை இகழ்ந்துரைத்தவன்

காவிரி நல் தாமிரபரணி கொண்டு
பாரின் பசியை போக்கிடவே
சேற்றில் இறங்கி சோற்றை தந்தவன்

ஊடல் கொள்ளும் அக ஒழுக்கமும்
ஊழிஞை கொள்ளும் புற ஒழுக்கமும்
ஒருங்கே அமையப் பெற்றவன்

கார் கூதிர் முன்பனி என்றும்
பின்பனி இளவேனில் முதுவேனில் என்றும்
பெரும் பொழுதோடு பழகியவன்

வைகறை நேரத்தையே தன்
விடியலாய் கொண்டவன்
நாரை குருகு அன்றிலோடு
அன்பு மொழி பேசி வாழ்ந்தவன்

மருத யாழ் இசைத்து நெல்லரி பறையோடு
நெறியாளுமை கொண்டவன்

பொய்கையின் உதவியினால் கழுநீரையும் கமலத்தையும்
காஞ்சி மருத மரத்தையும் காத்திட்ட செல்வன் அவன்
மருத நில மக்களின் மாண்பினை போற்றியே
மகுடத்தை சூட்டிடுவோம்

# நளினா கணேசன்

சங்கப் பனுவலெனும் இலக்கியச் சோலையில்
நங்கையும்நம்பியும் வாழும் நன்னெறி வாழ்வதனை
நங்கூரமிட்ட அன்பினை அகத்திணையாக்கி உலவ
ஐங்குரவரும் ஐக்கியமாய் வாழும் மருதமாகியதே

சங்கத் தமிழர் கூர்நோக்குப் பார்வையிலே
அங்கமாம் வாழ்வியலுக்கு நன்னெறி வகுத்தே
எங்குறையும் மானுடரும் ஏதின்றிக் கற்றிடவே
பங்கமிலாது வாழ்ந்தும் காட்டிச் சென்றனரே

ஈங்கிவர்க்குத் தெய்வமாய் இந்திரனும் அருளிடவே
நூங்காய் விளைந்தவெண்ணெல்லும் செந்நெல்லும்
உணவாக்கியே
ஊங்காய் வைகறையில் வயலிலே உழவனும் உழத்தியுமே
தேங்கிய அன்பாலுவந்து சுற்றமும் தழுவினரே

செங்கழுநீரும் செந்தாமரையும் கழனியில் சிரித்திடுமே
ஓங்கிய காஞ்சியும் மருதத்தருவும் நிழலாகிடுமே
செங்கயலும் துள்ளிடும் செம்புலத்தில் செந்நெல்லும் செழிப்பாகிடுமே
அங்கமெலாம் சேறுபூசியவர்க்கு காளையும் துணையாகிடுமே

கங்குல்துயின்ற நாரையும் அன்னமும் விழித்திடவே
கிங்கிணியாடச் சிறாருமே பொய்கையில் களித்திடுவரே
சங்கடம்தீர மணமுழாவெனும் பறைகொட்டி ஆடிடுவரே
சங்கியையோடே மருதயாழும் மருதப்பண்ணும் இசைத்திடுவரே

செங்கோலோச்சும் செம்பியன் முதலாய் அனைவருக்கும்
செங்கண்மாலாய் நல்லுணவு நாளும் நல்கிட
செங்கதிரின் செம்பார்வையில் செய்திருத்தி செஞ்சாலியிட்டு
சங்கடந்தீர்த்த நல்லுழவர் நலிகின்றனரே இன்று

பாங்குற்ற நிலங்கள் பங்கிட்டே மனைநிலங்களாகியதே
தீங்கிலாது உணவிட்டோர்க்கு தீது சூழ்ந்ததே
மூங்கையாய் முறுவலித்தே கடக்கிறோமே அவர்துயரை
ஓங்கலானவர் தாழ்ந்தால் காயசண்டிகையாய்த் திரிந்திடுவோமே நாமும்

## த. பேபி ஷகிலா

இயற்கை அழகே எல்லாம் மருதமே
பரந்த வெளியே பசுமை சூழலே
உலக உயிர்களை காக்கும் வள்ளலே
நிறைந்த செல்வம் அட்சய பாத்திரமே

காடு மேடு கடந்து விரிந்து
பச்சை வளமாய் பசுமை பூத்து
நாற்று வயல்கள் செழித்து வளர்ந்து
கோடி நலன்கள் நாடி கொடுக்கிறாய்

வாய்க்கால் வரப்பு நீர்ப் பாசனம்
வளரும் பயிரின் உன்னத ஆவணம்
உயிரை வளர்த்து பயிரை கொடுத்து
வாழும் ஜீவனின் வாழ்க்கைப் பாத்திரம்

உழவும் தொழிலும் உழைக்கும் கரங்களும்
விவசாய மக்களின் புத்திர பாக்கியம்
தரணியும் தளிரும் தழைக்கும் உரங்களும்
சமூக விருத்தியின் அட்சர வாத்தியம்

வயலும் வாழ்வும் பைந்தமிழ் அறனும்
உலக அரங்கில் உயர்ந்த சாசனம்
நெல்லும் மணியும்  புல்லும் பூண்டும்
ஜீவ ராசிகளின் சிறந்த உணவு

இயற்கை கொடையும் மகசூல் ஏற்றமும்
நாளைய விடியலின் நிறைந்த பெற்றம்
நாடு நலனும் வீடு வாசலும்
இறைவன் ஈந்த அழியா பொக்கிஷம்
நாளைய தலைமுறை கண்ணுக்கு வெளிச்சம்
உழவை காப்போம் உயர்வை பெறுவோம்

# நித்யா பெரியசாமி

நன்மலரும் நறுமணமும் நஞ்சையோடு கொஞ்ச
பொன் புலரும் பூஞ்சோலை புஞ்சையோடு விஞ்ச
நெல்மணியும் விண்ணோடு முகமுட்டிக் கொஞ்ச
மண் மணமோ பசுமையோடு பால்பிழிந்து செல்ல

மன்னவனோ மகிழ்ந்துவிட்ட சோழரசு மருதம்
விண்ணவரும் வியக்கின்ற வண்ணமொழி சிந்தும்
கண் கவரும் காளையோடு ஏர்ப்பூட்டி
நிலமகளை மார்போடு களமாடி உழவுட்டி

நெல்விதைத்து நிறத்துவிட்டு பசுமையோடு எழிலூட்டி
ஆடிவரும் காவேரி அணைத்திடுமோ தாமிரபரணி உயிரூட்டி
மலைமகளும் திருமகளும் நிலமகளின் பாலூட்டி
மகிழ்ந்து குலவும் மருதமென அழகூட்டி

உழவரும் உழத்தியர் கடையரும் அறமோடு
தொண்டையும் கொங்கும் சோழரசு மரபோடு
குறும்பர் வேட்டுவர் வீழ்த்திவிட்ட வீரமோடு
மானம் காத்து மகிழ்ந்துவிட்ட மருதமலை

வேந்தர் இந்திரன் வணங்கிவிட்ட அழகுமலை
வேளாண் வளர்த்து விஞ்சிவிட்ட சோழகுலம்
இளவேனிற் முன்பனியும் பின்பனியோடு நிறைவாகும்
நெல்மணியும் வெண்மணியும் விளைத்துவிட்ட அழகாகும்

இசையொழியில் இன்பமிடும் யாழிசையும்
நெல் பொழிவின் உயிரிட்ட பொய்கையாறும்
நெஞ்சமெங்கும் நெகிழ்ந்துவிட்ட பசுமை வெளிகள்
மருதமலை மக்களோடு வளமாடி உறவாடி நலமாகுவோம்

# சரஸ்வதி ப்ரியா

விடியலில் கெண்டை மீன் குழம்போடு
பிடியடிசில் தொண்டை வரை யுண்டு
மேலி சுமந்து சேற்று வயலிலே
கூவிக் களையுறுவி வாழும் தலைவா

நேற்றுவரை யவளது  மனையில்
சோற்றுத் திரளை யுண்டு வந்தாய்
இன்றே னோயென் சேயது தாயென
நன்றி மறவா தவனாய் நவிலுகின்றாய்

கொண்டைச் சேவல் கூவையிலே தானென்
தண்டையொலி தவழ்ந்துன் செவியறைந் ததுவோ
வளைமுள் குலையினின்று கழன்று திர்ந்த
வெண்காம்புக் கருமலர் நிறை நாடுடையோனே

வெள்ளைக் கொக்கொன்று விரால் மீனையுண்ண
வள்ளைக் கொடியகற்றி வாய் திறந்ததுவாய்
பல்லைக் காட்டியவள் பாதம் பணிந்தாயே
கிள்ளையென் நினைவு இனியுமுனக் கெதற்கு

எருமை கலக்கும் செந்நீர் கிழித்து
அருமையாய் மலரும் ஆம்பலென நினைத்தாயோ
என் கைவளை கழன்றாலும் கழலட்டும்
உன் பொய்வலையில் சிக்கா பேதையாய்நான்

பூட்டறுபட்ட வில்லினின்று புறப்பட்ட அம்பு
நறவுண்ட இறவாய் ஆர்ப்பரித் தாலும்
கடலுண்ட ஆட்டனத்தி தானே நீயாவாய்
ஆதிமந்தி யாவேனென நினைக்காதே அருந்தலைவா

நறவு கள் இறவு இரால்
மேலி கலப்பை அடிசில் உணவு
களையுறுவி களையகற்றி

## ஜாஹீர் ஹனீபா

உழுதுண்ட வேந்தர்குல மல்லர் தமிழன்
நெல் நாகரீகம் நன்னிலம் விதைத்தவன்
தமிழராய்ப் பிறந்திட்டோம் உழவனாய் வளர்ந்திட்டோம்
நெல் விதைத்து பயிர் வளர்த்து
நாகரீகம் உலகறிவித்தோம் மருதம் காத்திட்டோம்

பாண்டிய வம்சம் சென்னல் விதையும்
கன்னல் கணுவும் கதலி குருத்தும்
பனை விதையும் கண்டவன் கிணறுவெட்டி
வேளாண் செய்தே தமிழர்குலம் காத்திட்டான்
வேந்தன்வழி செழித்திட்ட மருதம் நிலைத்திட
நீர்பாய்ச்சி விவசாய நிலம் வளர்த்திட்டான்

மருதநில வினைஞர்கள் பண்பாட்டுத் தலைவர்கள்
வேந்தர் தமிழரசராக உழவை செழுமையாக்கி
களமர் கடைஞர் களைஞர் கம்பளர்
உழவை தொழிலாக்கி உழவராக மேன்மையடைந்து
குலம்வளர மருதம் வளர்த்து விவசாயம்
காத்தான் அரசாண்ட பண்பாட்டு வேந்தர்கள்

மிளகு மாந்துளிர் மஞ்சள் மல்லிகை
விதைகளைத் தேடி விதைத்துக் காத்து
நாகரீக உலகை அறிவித்த உழவன்
தமிழர் தலைநிமிர அன்னம் சிறப்பித்தான்
நஞ்செய் விவசாயம் முதன்மையாய்ச் செய்தவன்
உயர்குலத்தவன் உழவனே உணவிட்டவன் தமிழன்

மருதநிலம் நெற்குன்றுகள் மலைகளடர்ந்த குறிஞ்சியாகி
சமவெளி நெல்நாகரீகம் உலகிற்களித்த மருதம்
வேளாண் விளைவித்த ஆற்றுக்காலாட்டியர் தமிழனே
செந்நெல் அமுதுபடைத்து செப்புப்பட்டையம் பெருமைபடத்
தலைநிமிர்ந்து கூறுவேன் நானும் தமிழனென்று

# தஞ்சை பாமா

மருதம் என்று நினைத்தாலே
மனமெங்கும் மகிழ்ச்சிதானே
கண்ணைக் கவரும்
பசுமை எங்கும்
காட்சிதனில் நிறைந்திடுமே

வரப்புதனில் நடக்கும்போது
வாடைக்காற்றும் வீசிடுமே
காற்றில் அசையும்
கதிரெல்லாம் கண்களுக்கு விருந்தாகிடுமே
மண்ணின் வாசனையும்
அங்கேத்தான் மணந்திடுமே

மருதம் என்று நினைத்தாலே
மனமெங்கும் மகிழ்ச்சிதானே
அறுவவடைக் காலமெல்லாம்
நீ அட்சயப் பாத்திரமே

நெல்மணியைக் கண்டாலே
நிம்மதியும் வந்திடுமே

காலைப் பனித்துளியும்
உன்னில் காதல்கொண்டு விளையாடிடுமே
உன்னுடைய உயிர்ப்பூவில்
உலகமும் உயிர்வாழ்ந்திடுமே
மருதம் என்று நினைத்தாலே
மனமெங்கும் மகிழ்ச்சிதானே

## வே. நித்யப்பிரியா

வானம் பார்த்த சேதுநாடு எங்கநாடு
வளம் கொழிக்கும் கருசக்காடு எங்கஊரு
சதிகாரன் வெதச்சுவச்ச கருவேலம் நிறைஞ்சது எங்கபூமி
ஒட்டுத் தண்ணியையும் விடாம குடிக்கும்
கருவேலம் எங்க குலமரம்
நெல்லும் சோளமும் மறந்து போச்சு
எங்க மண்ணுக்கும்
வைகையில மிஞ்சிய சாக்கடத் தண்ணி
அமிர்தமாச்சு எங்க பூமிக்கு
பருவம் தப்பிய மழையில நிறைஞ்சது என்னவோ
வயவரப்பு விருவுக மட்டுந்தான்
தப்பிய மழையிலும் விடாம உழுதுப்போட்டு
மறுமழையை அடிவானத்தில தேடி
வேண்டாத கோயிலுமில்ல வணங்காத கடவுளுமில்ல
வீடு வருவதற்குள் புயல் எச்சரிக்கைல
வந்து சேர்ந்தது இரக்கமழை
வந்த மழையையும் விடாம நண்டு ஓடும்
பாதையில் நட்டுவச்சோம் பருத்திக்கொட்டைய
கூடவே புள்ளக்குட்டிக்கு வெள்ளரியும் வெதச்சுவச்சோம்
இருந்த தண்ணிய குடுச்சுட்டு வயசுக்குவந்த பையனப்போல
நெடுநெடுனு வளந்துச்சு எங்க பருத்திச்செடி
கோடை விடுமுறையில் குடும்பமே
தொட்டிக்கட்டி பெறக்கும் சூரியன் உச்சி தொடுவதற்குள்
பருத்தி மூட்டை தலையுச்சியைத் தொட்டுவிடும்
எடுத்த பருத்தி என்னவோ
வாரச்சந்தைக்கும், கடனுக்குமே சரியாப்போகும்
அக்கினி வெயில்ல வெடிக்காத காயும் வெடிக்கும்
கூடவே செடியும் செத்துவிடும் குடிக்க காவேரித்தண்ணீ
வெதைக்க வைகைத் தண்ணீ
இப்படியே எங்க வாழ்க்கையும் ஓடுது
இதுவும் இல்லாத ஊர்களும் உண்டு
இயற்கையைச் சீரழித்தோம் விளைவு என்னவோ
எங்களை வாட்டுது வானம் பார்த்த பூமியிலும்
வளம் தேடும் வாசிகள் நாங்கள்
தண்ணி இல்லா தேசத்திலும்
சாதனை படைக்கும் செழிப்பாளர்கள் நாங்கள்

# பி. ச. கோபால் குமார்

அழகழகாய் வாசமுடைய பூக்களும் உண்டு
வற்றாத எழில்மிகு ஆறுகளும் உண்டு
குளிர்ந்த தென்றல் காற்றும் மடிக்கும்
கண்ணாடி போல் ஊற்றும் மடிக்கும்

குளங்களிலும் குட்டைகளிலும் குவளை அல்லி
தாமரைப் பூக்களுடன் நிறைந்து இருக்கும்
பச்சைப்  பட்டு உடுத்தி ஆரவாரம்
இல்லாமல் அடக்கமாக புன்னகைப்பாள் பூமாதேவி

ஓங்கி வளர்ந்த தென்னைகளும் பனைகளும்
உரசித்தான் ஆடும் புன்னை மரங்களோடு
மாமரத் தோப்புகளும் வாழைத் தோட்டங்களும்
மருத மரத்தடியில் கொஞ்சிக் குலாவும்

பள்ளப் பகுதியில் செந்நெல் விளைந்து
சேற்றோடும் காற்றோடும் கூற்றும் மடிக்கும்
செங்கனிப் பலாவும் செங்கரும்புச் ச்சாரும்
திகட்டாமல் தித்திக்கும் தெள்ளமுது சுவைதரும்

பல வகை கனிகளும் விளையும்
மள்ளர் தம் வீரமும் விளையும்
ஏராளமான வண்ணத்துப் பூச்சிகளும் சில வகை
சிட்டுக் குருவிகளும் பரவசத்துடன் பறந்து

திரியும் பருவமங்கை அழகினை ஒற்று
பாசப் பறவைகள் பாடித் திரியும்
உழவு செய்து உலக மக்களின்
பசியாற்றும் குணம் மருத மக்களின்
உயர்ந்த உள்ளம் படைத்த மருதநிலம்

தமிழினியன்

# கவிஞர் தென்றல் பாலக்காட்டு சுந்தரம்

மண்ணின் பெருமையும் மகத்துவமாய் எம்மருங்கும்
முன்னருமே பெருமிதமாய் காத்திடனும் இயற்கையை
முணர்வே நன்னெறியை உணர்த்தியே முன்னோர்களும்
மனமறியா மனிதர்களும் பிழையென மதியிழந்தாரே

மண்ணுலகில் மழையின்றி எண்ணுதலும் தழைக்காதே
மணத்துடன் மலரும் தரணியில் நிலைபெறும்
மரங்களை வளர்த்தே பிழைகளை திருத்திடுவோம்
மண்நோக்கும் இயற்கையை நுளம்பழித்து காத்திடுவோம்

மண்ணோடு மனம்சாய்ந்து மரங்களின் நிழல்சாய
மனிதர்களும் விரும்பாதோர் நகரங்களில் எவருமுண்டோ
மண்ணுலகில் மாற்றங்கள் மாறிவிடும் நன்னறிவால்
மாற்றமில்லா முயற்சிகளும் மண்ணுலகம் மாற்றிவிடும்

மலைமலையாய் பெருகிடுமே மாசற்ற இயற்கையும்
மலையுடனே மலைசேர்ந்த காட்சிகளும் குளிரவைக்கும்
மனிதத்தை பேணிடுங்கள் மலரட்டும் புதுவாழ்வு
மாலையிலும் மனம்குளிர மயங்கிடுவோம் நல் வாழ்வில்

மண்ணுலகில் வரமாக இயற்கையும் வளமாக
மழைமேகம் வந்ததினால் விளைநிலமும் விளங்கிடுமே
மண்ணை நம்பி வாழுகின்ற விவசாயி உழைத்தாலே
மகத்துவமே மாறிவிடும் மனத் துயரம் நீங்கிவிடும்

மாண்புடைய மனிதர்களே மக்களினம் பெருகிடுதே
மாற்றமில்லா வாழ்வினிலே உணவுக்கு உதவிடுங்கள்
மார்த் தட்டிக் கொள்ளுகின்ற மக்களினம் உணவின்றி
மடிதலுமே வேண்டாமே மறுக்காதீர் மரம்வைப்போம்

முழுமையான உழைப்பினிலே தணியாத உழவினங்கள்
மண்மீதில் உழைத்திடுவார் மடல்போலே வளைந்திடுவார்
மன்றிலுமே பேர்போற்ற கடனில்லா வாழ்வமைக்க
மறுப்பின்றி பெற்றிடனும் மறையாத வான்மழையை

மங்கியதோர் வாழ்வினிலே மங்காமல் உழைப்பதற்கு
மண்மீதில் எழிலாக மழைத் துளியும் பொழியவேண்டும்
மனத்தினில் விடிவெள்ளி நோக்கிவாழும் விடியலில்
மலரவேண்டும் உயிரினங்கள் நலம்பெற்று உயிர்வாழ

# பாவலர் கோ. மலர்வண்ணன்

கரைதழுவித் தவழ்கின்ற ஆற்று வெள்ளம்
காலவாய்கள் வழியாகப் பாயும் எங்கும்
திரையெழும்பி ஆர்ப்பரிக்கும் கடல்போல் ஏரி
தெள்ளியநீர் பரப்பாலே காட்சி நல்கும்
புரைகடிந்த நன்னூல்கள் கற்றார் போலப்
புனலாலே நிறைந்திருக்கும் குளங்கள் எல்லாம்
தரைமுழுதும் மரகதத்தைப் பரப்பி னாற்போல்
தண்ணென்னும் வயல்வெளிகள் தோற்றங் கொள்ளும்

தாமரைப்பூ கதிர்வரவால் மலர்ந்தி ருக்கும்
தளிரிலைகள் ஒளிபட்டுப் பளப ளக்கும்
பூமகளைச் சிறப்பித்தல் போலப் பச்சைப்
பொன்னாடை யாகப்புல் போர்த்தி ருக்கும்
தேமதுரப் பண்ணிசைக்கும் வண்டி னங்கள்
தேனூறும் மலர்நாடிக் களித்தி ருக்கும்
மாமருத மரங்களெல்லாம் வானை நோக்கி
வளர்ந்திருக்கும் நிலத்திற்குப் பெருமை சேர்க்கும்

ஏருழவர் சேற்றுவயல் உழுவர் பெண்கள்
இளநாற்று தனைப்பிடுங்கி நடவு செய்வர்
மேருவென நெல்மணிகள் களங்கு விப்பர்
மேதினியில் உறுபசியைப் போக்கி வைப்பர்
பேருவகை யால்பொங்கல் திருநாள் காண்பர்
பெருமைமிகு தமிழர்தம் மரபைக் காப்பர்
சீருலவும் வாழ்க்கையினை மருதம் போற்றும்
சிறப்புதரும் மருதநிலம் உலகத் தார்க்கே

# க. மணிவண்ணன்

உழவனும் உழத்தியும் களித்த நிலம்
கழனியில் கயல்களும் செழித்த நிலம்
செந்நெல்லும் வெண்நெல்லும் விளைந்த நிலம்
அன்றிலொடு நாரைகுருகு நடந்த நிலம்

வேந்தனவன் விளை நிலத்தின் குலதெய்வம்
வெள்ளாண்மை செய்தவனே வேந்தன் ஆகினான்
மகிழ்னனவன் மருதத்தொடு தலைமை ஏற்றதால்
மகிழ்ச்சியதை மகிழ்வுடனே மருதம் கொண்டது

வயலுடனே வயலுமான வளமை நிலமது
செயல்களினால் செழித்த நிலமே மருதமானது
நல்லநீரால் நன்னிலங்கள் நஞ்சை ஆனது
நாகரீகம் இங்குதானே வளர்ச்சி பெற்றது

ஊடலோடு உழிஞையுமே ஒழுக்கம் என்றது
பாடலோடு பண்ணிசையும் வனப்பு கொண்டது
செவ்வணியும் வெள்ளணியும் குறிப்பில் வென்றது
செம்மாந்தக் குடியொழும் பண்பைப் பெற்றது

ஆறுமிங்கே மாற்றம் செய்து குளங்களானதால்
சோறுபோடும் சூழ்நிலையில் சொர்க்கம் ஆனது
பேறுபெற்ற பெருநிலத்து பெருமை சொல்லிடும்
ஆறுவகை பொழுதுகளில் உயர்ந்து சிறந்தது

ஐந்துவகை நிலங்களிலே மருதமும் ஒன்று
ஆறுகளின் படுகைகளில் சிறந்தது அன்று
கூறுபோடும் மனிதயின ஆசையினாலே
வேரறுந்த மரமெனவே மாய்ந்தது இன்று

தேடித்தேடித் தேவைகளில் மூழ்கிப் போனதால்
ஓடியோடி உழைத்த நிலம் சருகானது
பாட்டனவன் பாடுபட்டு வளரத்த நிலமதை
பாதுகாப்பு செய்திடுவோம் பழமை செழிக்கவே

# நெய்தல்

முன்னுரையும் வாழ்த்துரையும்..

நெய்தலை நெய்திட
கைதனில் கவிமலர்
சப்த கவிதாயினிகள்
தசாவதானியாக கவிஞர்கள்
கண்டோம் இங்கே
கவியுலகப் பூஞ்சோலை
கவிக்குழுமமாம் முகமறியா
முகநூல் குழுமத்தின்
முகவரியாக பூத்த முகத்துடன்

பஞ்ச பாண்டவரென
அஞ்சுவகை நிலமாம்
பஞ்சம் காணாததே
குறிஞ்சி முல்லை மருதம்
நெய்தல் பாலை
நெஞ்சிறுத்தி நிமிர்த்தி
நெய்தல் பாடவந்த எம்கவிகள்

கொஞ்சும் கடலழகும்
கடல் சார்ந்த நிலமே
விவசாயம் வழியின்றி
சாயம் வெளுக்கா தொழிலாக
விஞ்சும் மீன்வளமே

பரதர் பட்டினவர் பெயராகி
கட்டுமரம் கடலிறக்கி
காததூரம் சென்று
காணக்கிடைக்கா அறியவகை
கடல்வாழ் உயிரினங்கள்
உடனாக ஊர்வந்து
பண்டம் மாற்றியே
பட்டினித் தவிர்ப்பர்

கடலோரம் உப்பளம் நீர்பாய்ச்சி
உப்பு சப்பற்ற வாழ்க்கை
உப்புக் காய்ச்சி
உப்புக்கு நெல் மாற்றி
உயிர் பெறச் செய்தனர்

நாணயப் புழக்கமறியா காலத்தே
நா நயம் காத்தே
பண்டமாற்று பாங்குடனே
பரிவர்த்தனை ஆகியதே

வாசன் சாவி

# திருமலை ப சிவன்

பூமித் தாயின் பாதம் தொட்டு
பூகோளத்தின் எல்லை வரையில்
ஐந்தில் ஒன்றாய் அமைந்த திணையே
கடலும் கடல்சார் நெய்தல் நிலமே
உன்போல் கருணை கொண்டவர் உண்டோ

கடலைக் கண்டால் கவிதை தோன்றும்
கடற்கரை மணலில் கரங்கள் இணையும்
பிஞ்சுக் குழந்தைகள் ஓடி மகிழ்ந்திடும்
பஞ்சுப் பாவைகள் நனைந்து நெகிழ்ந்திடும்
நெய்தல் திணைபோல் நிலம் வேறு உண்டோ

பியார் பாஸ் பனூஸ் நிஷா
தானே செபலா மெஹ் நடா
கியாண்ட் கஜா வார்த் ஃபானி
இது இந்தி திணிப்பல்ல எழுத்துப் பிழையுமல்ல
சூறாவளி காற்றுக்கு நாம் சூட்டிய பெயர்கள்

குறிஞ்சியும் முல்லையும் மருதமும் பாலையும்
தெரிந்தே செய்திடும் மாபெரும் தவறுகள்
நேரிட்டுத் தாக்கிடும் நெய்தல் நிலங்களை
சுனாமி என்றொரு ஆழிப் பேரலை
சுருட்டிக் குடித்த உயிர்கள் எத்தனை

உப்பு இல்லையேல் உணவு இல்லை
கடல்தரும் உணவில் கலப்படம் இல்லை
விமானம் தாங்காத எந்தப் பொருளும்
நெய்தல் நிலத்தின் கப்பல்கள் தாங்கும்
நாட்டின் வளர்ச்சி கடல்வழி மார்க்கம்

கரையை புரட்டும் காட்டாற்று வெள்ளம்
நெய்தல் நிலத்தில் அடங்கி அமரும்
இயற்கையை அழித்து இன்பம் காண்போர்
எண்ணிடல் வேண்டும் கடலின் சீற்றம்
உப்பு இட்ட திணை உள்ளளவும் நினை

## எ. தங்கமணி

மதி தொட்ட அன்பு மனம் தொட்ட போது
மலர்ந்திட்ட பண்பால்
மலர் மணம் போலானேன்

கடற்கரை சோலை அதில்
காணும் தாழம்பூ
இடை நிறை இடத்தோடு
இணைந்தாடும் தென்னம் பூ

மதி தொட்டதே அவள் காதல்
மனம் இணை தேடுதே கூடல்
விதி விடுமா இல்லை
விலக்கிடுமா விடை அறிய நாடல்

விழி தொட்டு காதல் விளைந்திட்ட போது
வீழ்ந்திட்டேன் நானும் ஆலம்
விழுதினைப் போல

சூழ்ந்திட்ட நெஞ்சில் சுடர் விட்ட தீபம்
சுகப்பட வாழ்வில்
சூரிய ஒளியென வந்தாள்

நூலிழை போல நூர்த்திட்டேன் நானும்
நெய்திட்ட பண்பால்
நேர்த்தியானதே எங்கள் வாழ்வு

சுற்றமும் புகழ் உரைக்க
சூழ் உரை அவள் உரைக்க
சூழ்ந்தது உச்சம்
சுகமே எங்கள் வாழ்வில் மிச்சம்

அச்சமும் இல்லை எங்களில்
அகமும் தானில்லை
எச் சூழல் தன்னிலும் நாங்கள்
எதையும் தனித்ததே இல்லை

மிச்சமும் மீதியும் மேன்மையாய் எங்களுள்
எங்கள் நெய்தலின் விளைவே
எங்கள் உயர்வுக்கு வழியாய்

# துரை. பாலாஜி

பட்டுக்கோட்டை

ஐந்துவகை நிலங்களிலே அழகியது நெய்தலன்றோ
அவற்றினிலே இதன்சிறப்பு அதிகமழை பெய்தலன்றோ
பைந்தமிழில் பழந்த்தமிழர் பாடித்தான் களித்தனரே
பரந்தாமன் பள்ளிகொள்ளப் பாற்கடலை அளித்தனரே

நைந்துபோன மனதுதனை நல்லநிலை ஆக்கிவிடும்
நம்பிக்கை அளித்தேதான் உளைச்சல்தனைப் போக்கிவிடும்
மைந்தரென நாமிருந்து இந்நிலத்தைக் காத்திருப்போம்
மறுபிறப்பில் நெய்தலிலே மலரெனவே பூத்திருப்போம்

கடல்தன்னில் கால்வைக்க அலைவந்து வருடிடுமே
காண்போரின் இதயத்தைக் கச்சிதமாய் திருடிடுமே
உடலுள்ளம் இரண்டுக்கும் புத்துணர்வு கொடுத்திடுமே
உச்சிவெயில் தருகின்ற தகிப்புதனைத் தடுத்திடுமே

முடவனுமே கடலிறங்கி முத்தெடுக்க வந்திடுவான்
முயற்சியினால் வாழ்வினிலே முன்னேற்றம் கண்டிடுவான்
இடரெனினும் பெரும்பொருளைத் தந்திடுமே கடற்தொழில்கள்
இயற்கையன்னை நமக்களித்த நன்கொடையே இதன்எழில்கள்

வசித்துப்பார் கடலருகே வாழ்க்கையுந்தான் இனித்திருக்கும்
வருத்தங்கள் மறைந்தேதான் வசந்தங்கள் ஜனித்திருக்கும்
புசித்துப்பார் கடலுணவை புதுத்தெம்பு பெற்றிடுவாய்
புழுகவில்லை நானிங்கே வலைவீசக் கற்றிடுவாய்

ரசித்துப்பார் கடலழகை கண்களுக்கு விருந்தாகும்
நன்னிலையை அடைவதற்கு நல்லதொரு மருந்தாகும்!
ருசித்துப்பார் கடல்நீரை வியர்வைபோல் உவர்ப்பிருக்கும்
உழைப்புதனின் பெருமையினை அதுவும்தான் உணர்ந்திருக்கும்

# கி. சீனிவாசன்

மீஞ்சூர், சென்னை

வருணனின் வருகையால் நிலத்தில் ஊன்றியே
ஆழமாய் தன்னுள் புதைத்தே கடலானாய்
கடலும் கடல் சார்ந்த இடமானாய்
நின் பெயர்தான் அழகிய நெய்தலோ

விரிவான் குளத்தின் வெள்ளிப் படகாய்
மடித்துச் சுருட்டா வானமதின் நேரெதிராய்
குளிர்கடல் அலைகள் கொய்து கொய்து
வானக் கொக்குகள் மீன்களை கொய்வதுமாய்

கடற்காகம் அலையை தொட்டுச் செல்வதும்
சுறாக்கள் ஆழமாய் ஊடுறுவிச் செல்வதும்
கரையிலே புன்னை மரமாய் மலர்வதும்
தாழை மலர்கள் அழகு சேர்ப்பதுமாய்

மீனவரின் வாழ்விலே முக்கியக் காரணியாய்
மீன்களின் பிறப்பிலே மீனவர் வாழ்வதுமாய்
வாழ்க்கைப் படகை கடலில் செலுத்தியே
அவரின் வாழ்வோ சுடும் மணலிலே

முத்துக் குளியலை சிப்பிக்குள் தேடுவதும்
ஆர்ப்பரிக்கும் கடலிலே அலையற்ற ஆழத்தில்
வணிகமாய் தொழிலை நவீனமாய் செய்வதும்
நெய்தல் படைப்பினிலே அதிசயம் கண்டேனே

நெய்தலின் பயன்களை எண்ணியே மாளாது
கண்களின் குளிர்ச்சியாய் கலையான கடலழகில்
கர்வமாய் துள்ளியெழும் அலைகளின் ஊடே
கணக்கற்ற உயிர்களும் கலங்காமல் வாழுதே

## கீர்த்தி கிருஷ்

வருணன் மேயப் பெருமணல் உலகாம்
அருமைத் தமிழரின் ஆதி நிலமாம்
செழுமை படர்ந்த நீல வனமாம்
அழுவம் என்றால் சேரும் வளமாம்

கடலும் கரையும் முத்தமிடும் இடமாம்
நிதமும் இங்கே காதலர் தினமாம்
படகும் பாய்மரமும் பரவிய துறையாம்
பலமும் பாசமும்தான் இத்திணையின் இறையாம்

கங்குலில் கதறல் கடலின் இயல்பாம்
மங்கையர் தவிப்பும் சேர்ந்த துயராம்
தம்மவர் தண்ணியிலே தரைகடந்த தவமாம்
அன்னையாய் ஆழியையே வணங்கும் பெண்குலமாம்

ஊதைக் காற்றில் குவித்த மணலாம்
காதைப் பிளக்கும் கடலின் ஒலியாம்
உப்புக் காற்று சுழலும் நிலமாம்
அப்பிக் கொண்டது நெய்தல் வாழ்வாம்

பட்டினம் பாக்கம் என்பது ஊராம்
நல்லினப் பரத்தவர் நிறைத்திடும் திணையாம்
தாழையும் புன்னையும் செவ்வழிப் பண்ணாம்
வாழையடி வாழ்வாய் சிறந்தது இம்மண்ணாம்

குறுந்தொகை கலித்தொகை பாடிய திணைவகையாம்
அலைத்திரை அணைத்திடும் அழகிய கடற்கரையாம்
ஐவகை நிலங்களில் சிறந்ததொரு திணையாம்
உவகை கொண்டிடும் இம்மண்ணால் அகத்திணையாம்

# புதுவை க. சரவணன்

கடலும் கரையோர வாழ்வும்

கரைமேல் ஏனோ பிறக்க வைத்தான்
கண்ணீரில் நாளும் மூழ்க வைத்தான்
கடலை நம்பியே பிழைக்க வைத்தான்
காலமெலாம் காலனுடன் போரிட வைத்தான்
கடல் அன்னையின் அரவனைப்பில் வளர்கிறோம்
கடலையும் கதிரவனுமே நாளும் தொழுகிறோம்
கடல் உணவை நாடியே வாழ்கிறோம்
காலமெல்லாம் வறுமையில் வாடியே சாகுறோம்

கடலில் மீனைத் தேடியே வலைவீசுகிறோம்
மீனுக்கு பதிலாக நாங்களே சிக்குகிறோம்
எங்கள் வறுமைக் கோட்டினை அழிக்கவே
எந்நாளும் கடலில் நாங்கள் பயணிக்கிறோம்
எந்நாட்டின் எல்லைக் கோட்டை தாண்டியதாய்
அந்நியனின் துப்பாக்கி குண்டுக்கு இரையாகிறோம்
எல்லையில்லா கடலுக்கு எல்லை வகுத்து
தொல்லையில் மக்களை வாட்டி கொல்லுதல் நியாயமோ

எமனின் பினாமியாய் வந்த சுனாமியே
கொலை கொள்ளை கற்பழிப்பு ஊழலென
அநீதி செய்வோரெலாம் நாட்டில் உயிரோடிருக்க
அப்பாவி மக்களை நீயும் கொண்றது நியாயமோ
கடலலையே நீயும்
அமைதியொடு உள்ளவரையே
கரையில் உயிரோடு நாங்க இருப்போம்
கடலன்னையே கன்னியமாய் நீயும் இருந்திடு
கேடின்றி இனியேனும் எங்களை வாழ விடுங்கள்

# இளையசாகுல்

வைதல் நிறை வாழ்வில் நெய்தல் நிலை வீழவே
வலை கொண்டு மீட்கும் நிலையில் ஆனானே
உப்பு நீரோடு உலாவித்தான் மீனவனும்
இரும்பு உலோகமாய் இற்றுத்தான் போனானே

புழுக்கள் தேடி அம்மணமாய் திரியும்
மீனைப்போல அவன் வாழக்கை

கிழித்தெறிவோம் வா கண்டும் காணாத
ஆதிக்கவாதிகளின் பகட்டுப்  போக்கை
அலையோடு அலையாக
அவனிழுக்கும் நடுக்கடல் தேரோட்டம்

பஞ்சம் நிறைந்த
பாவி அவன் வாழ்வினிலே அனுதினமும் போராட்டம்
கண்ணீரில் மூழ்காதிருக்க
தண்ணீரில் மிதக்கும் அவன் வாழ்வை

உப்பு கலந்த உணவு போல
சுவையாக ஆக்குகிறது அவன் வியர்வை
வலையைப்போல்
சிக்கலாய் பின்னிய அவன் வாழ்வும்

உப்பு நீரில் கலந்ததாலே
இனிக்கிறது அவன் நிலையும்
வானமாய் அல்லவா
விரிய வேண்டும் அவன் இருப்பு

எவ்வித முன்னேற்றமுமின்றி
முடங்கித்தான் கிடக்கு அவன் இடுப்பு
ஆழ் கடலில் மூழ்கி முத்தெடுத்தும்
உவர் மணலாய் அவன் மாறியதென்ன

பாழ்கிணறாகவே ஆன
அவன் வாழ்வும் யுகம், யுகமாய்  நாறுவதென்ன

துடுப்பும் தோணியும்
அழுக்கான உடையுமே அவன் முகவரி

இனி என்றும் என்றும் அவன் ஒருவனே
நானெழுதும் கவியின் முதல் வரி

# புத்த கவி M. சௌந்திரபாண்டியன்

மதுரை

நெய்தல் மலரே நெய்தல் மலரே
முன்பின் அறியாதவனை முன்பனி
முகம் கண்டு முயங்க வைத்ததடி
அவனுள்  நானும்  என்னுள் அவனும்
ஐக்கியமாய் ஆகி ஆனந்தம் கண்டோமடி

கடலலை மீறி கடற் காற்றை மீறி
கடலிரைச்சல் மீறி கடலுள் சென்று
மீன் தொழில் மேற்கொண்டு கூதிர்க்குள்
மீண்டும் வருவேன் என்ற என் மீனவனைக் காணோமடி

பெருந்திரள் மேகக்கூட்டம்
பெருமழைக்குக் காத்திருக்க
கருந்தேளாய் தனிமை கடுமையாய்க் கொட்டுதடி
அன்றிலைத் துணையாகக் காண நெஞ்சம்
அலைக்கடலாய்த் துடித்துப் போனதடி

கடல் உள்வாங்கி விட்டதடி
பாழ் நெஞ்சோ பதறித் துடிக்குதடி
சுனாமி வந்துவிடுமோ காற்றிலாடும்
பாய்மரக் கப்பலாய்ப்  மனம் ஆடுதடி

நத்தை இல்லா வலம்புரிச்சங்காய்
நான் கடற்கரை மண்ணில் கிடக்கின்றேனடி
இதுவன்று நான் வாழ வேண்டிய கூடு
இன்மையில் எனக்கு அவனிதயமே வீடு

காதலும் காதலனுமே என் சொத்தடி
இவ்விரண்டும் இன்றேல் நான் செத்தேனடி
அதோ அதோ எட்டாத தூரத்தில்
ஆடி வரும் தேராயொரு கட்டுமரமடி
தறிகெட்டு ஓடி வரும் பசுமாடாய்
பொறிதட்டி கண்களில் கண்ணீர் முட்டுதடி

## ஜாஃபர்

நீரால் நெய்யப்பட்ட கடல்
கடலையே சுவாசிக்கும் நிலம்
வருணன் வாழும் நெய்தல்
புன்னை நிழலில் பொய்கை

மீட்டும் யாழின் இசை கேட்டு
நெய்தலை தாண்டியும் புவி மயங்கும்
உள்ளவரை மறவாதே நெய்தலை
உப்பிடும் நெய்தலை உள்ளளவும் நினை

நெய்தல் மட்டும் உப்பை நிறுத்தினால்
உப்பில்லாப் பண்டங்களால் குப்பைத்தொட்டிகள் கொழுத்துவிடும்
பட்டிணமோ வாழ வைக்கும்
பாக்கமோ செழிக்க வைக்கும்

மனிதன் பிழைக்க நீலக் கடல்
வாழ்க்கையை அளக்க நீளக் கரை
நெய்தலில் காதல் கரையில் முளைக்கும். கடலில் வளரும்

தலைவியின் தவிப்பை கரை மணல் சொல்லும்
தலைவனின் தவிப்பை கடல் அலைபாடும்

அவள் கண்ணீரின் உவர்ப்பு
கடலுக்கே கரிக்கும்
பிரிவுத் தூண்டில் குத்திக் கிழிக்கும்

மீனோடு மீண்டவன் தேனோடு சேர்ந்திடுவான்
கடல் சென்று மீளாதவன் காதலோடு
கரைந்திடுவான்

எப்படியும் செய்திடலாம் வாதம்
நிச்சயம் பிறவிப் பயன் அடையாது
நெய்தலைத் தொடாத பாதம்

# கவிஞர் க. விஜயலெட்சுமி

பி லிட் ,  எம் ஏ, பி எட், பி.எச்.டி., தலைமையாசிரியை

அரிமழம், புதுக்கோட்டை

கடல்த்தாய் ஈன்ற
கடுந்தவப்புதல்வர்கள் மீனவர்கள்
கடல் அலையாய் கவலைகள்
நித்தம் காண்போரை மகிழ்விக்கும்
கடல் அலையின் சத்தம்
கடுங்குளிர் கருதாமல்
கடல் அலையில் பயணித்து
வலை நிறைய மீன் பிடித்து வாழும் வீரமறவர்கள்
எங்கள் நெய்தல் நில மீனவர்கள்
சுனாமியில் சுருண்டெழுந்து
வர்தாப் புயலையும் வரவேற்று
கஜா புயலையும் எதிர்கொண்ட
களக்கமில்லா களப் போராளிகள்
எங்கள் நெய்தல் நில மீனவர்கள்
நீண்ட நீர்ப்பபரப்பு நிலையில்லா வாழ்க்கை
நித்தமும் கடல் அலையின் சத்தமும்
கடல்தாயின் முத்தமென மகிழும் மீனவர்கள்
ஆழியில் கால் பதித்து  ஆழ்கடலில் முத்தெடுத்து
அன்றாட வாழ்க்கையை அச்சமின்றி வாழ்ந்து வரும்
அயராத வீரத்தமிழர்கள் எங்கள் மீனவர்கள்
துன்பத்தை துணையாக்கி இன்பமுடன் வாழ்ந்து வரும்
மீனவரை துன்புறுத்தும் துச்சர்களை துணிந்து நின்று
,தும்சம் செய்வோம் கடல்த்தாய் தன்மடியில்
கணக்கில்லாச் செல்வங்களை கண்மறைவில் வைத்தாலும்
கண்பிடித்து கரைசேர்வோர் எங்கள் நெய்தல் நில மீனவர்கள்

# வா. சண்முகம்

ஆழிசூழ் உலகமதில் ஆழிசார் வாழ்வே நெய்தல்
கட்டுக்கடங்கா பேரலைகள் ஆர்ப்பரிக்க கடலோர வாழ்க்கை
நொடிக்கு நொடி அலைகள் கரையை முத்தமிட
காணவரும் கண்களுக்குப் பேரழகு

நீலவானை கரம்பிடித்து கைகோர்த்தால் கடல் அன்னை
நீலவான சேலையுடுத்தி விருந்தளிப்பாள் மனங்களுக்கு
கடல் சார்ந்த ஓரமாய் விரிந்திருக்கும் மணல்பரப்பு
கண்டிட கானலே உந்தன் சோலையே

நெய்தல் தாழைமவர்கள் மலர்ந்தே மணம்பரப்பும்
புன்னை ஞாழல் மரங்கள் குடை விரிக்கும்
மருத நிலம்போல பாத்தி கட்டி உப்பு விளையும்
வெள்ளிப்பனி போல உப்பளங்கள் நிறைந்திருக்கும்

வெண்ணிற சிறகுடைய குருகு வந்தமர்ந்து செல்லும்
அந்திமாலை வரும் போது நீலமலர்களும் பூத்துக்குவியும்
கடல் அலைகள் முத்துக்களை அள்ளிவந்து
மணற்பரப்பில் தரைவிரிக்கும்

தன்னுள் எதையும் கொள்ளா கடல் போலும்
பரதவர் பரந்த பண்புடை மனமுடையோரே
கட்டுமரம் கொண்டே கடல் வளம் கொண்டு வருவாரே
குடும்பக்கலன்செலுத்திட கடல் பயணம் செய்வாரே

கடல் சென்ற களம் நோக்கி
கரையில் குடும்பம் காத்திருக்கும்
காற்றும் மழையும் தொடர்ந்தால்
மனம் கணத்திருக்கும்
ஒவவொரு நாளும் இறந்தே பிறந்திடுவர்
கடல் அன்னை கரம்பிடித்தால் கரை சேர்ந்திடுவர்.

# பேரா முனைவர் இரா. வரதராசன்

மதுரை

நெய்தலெனில் கடலோடு கடல்சாரும் தன்மை
நினைவில்நாம் வைப்போமே நித்தமிந்த உண்மை
வைகரையில் எழுந்துதினம் வழிபாடு செய்வார்
வாழ்வுநன்கு மேம்படமீன் வலைவீசி உய்வார்
பெய்கின்ற மழையோடு மீன்பிடிக்கச் செல்வார்
பேய்க்காற்று வீசுமெனில் பின்திரும்பச் சொல்வார்
கையினிலே எந்நாளும் காசுமிக சேரும்
கணக்காகச் செலவிடும்நற் காரியங்கள் தேறும்

சிப்பிக்குக்குள் முத்தெடுக்கும் செயல்களையும் கண்டு
சிறுவர்களும் தந்தையோடு செல்வதுவும் உண்டு
உப்பளங்கள் வயல்களிலே உப்பெடுக்கும் வேளை
உச்சிவெயில் தாங்காது உறங்கிடுவார் மாலை
தப்பாது வருணனையே தலைவணங்கி நாளும்
தைரியமாய் கடலிறங்க தம்பயணம் நீளும்
அப்பாவி மக்களையே அண்டைநாட்டு காவல்
அனுதினமும் அலைகடலில் அல்லலுறச் செய்யும்

மீன்பிடிக்கச் சென்றுவிட்ட மீனவனை எண்ணி
மேனியெல்லாம் நடுங்கிடுவாள் மெல்லவேதான் குன்னி
தான்மட்டும் தவிக்கின்ற தனிமையினை ஏற்பாள்
தலைவனவன் திரும்புகிற தருணமதைப் பார்ப்பாள்
வானிருண்டு வந்துவிட்டால் வல்லவனை எண்ணி
வக்கனையாய் படைத்திடவே வடித்துவைப்பாள் பொன்னி
ஏனிந்த நிலையென்று எண்ணிமனம் உருகும்
இதிலுமொரு ஆனந்தக் கண்ணீர்தான் பெருகும்

# மு. கருணாசபா ரெத்தினம்

திருநாகை

கருவாட்டு மொழி பேசி
கடலுக்குள் கலம்செலுத்தி
அண்டை நாட்டு எல்லைக்கடலுக்கு
குருதிக்கொடைக்கொடுத்து

மன்னவனுக்குமுந்தானையும்
மண்ணுக்கு  தன்னையும் தரும்
ஒரு மீனவப் பெண்ணின்
தொண்டைக் குழியில் தேங்கியநின்றதுயரம்

இது என் மகனின் கையில் இறுகப்பற்றிய
தின்பண்டத்தின் ருசி
தன் தந்தையின் மார்பில்
விழுந்தவிழுப்புண்களைப்பார்த்து
ருசி அறுந்த நிலைதெரியுமா

மீனவர்  துயரம் எண்ணிக்கைஎதுவாயினும்
நிவாரணத் தொகையில் தமக்குகிடைக்கும்

பங்கை எண்ணியே எச்சில்ஊறக்காத்திருக்கும்
அரசியல் பிணந்தின்னிக்கூட்டமே

எனக்கு இங்கு கழிப்பறைக்கூடசொந்தமில்லை
ஆனாலும் உயிர் வாழ்கிறான் மீனவன்
நல்லரசின்நலத்திட்டங்களில்

இந்தக் கடை தேங்காயைஎடுத்து
அந்தக் கடை வாசலில்உடைப்பதுபோல
இருந்த என்நிலத்தையும்எடுத்துவிட்டு
இல்லாத வாழ்க்கையில்
இனிமையை சேர்த்துக்கொண்டிருக்கிறது

எம் நல்லரசு என்றாலும் மீண்டும்
ஆழ்கடலுக்குள் கறைநீக்கும்மீன்களைத்தேடி
கரைகடந்து செல்கிறான் மீனவன்

# கவிஞர் சுகுமாறன் கந்தையா

புதுக்கோட்டை

மீனவனின் போராட்டம்

கடலுக்குச் சென்றவரின்
கதி என்ன தெரியவில்லை
கரை வந்து சேரும்வரை
கண்களில் தூக்கமில்லை

பட்டிணியாய் கிடப்பதெல்லாம்
பழகிப்போய் விட்ட கலை
பரிதவிக்கும் பிள்ளைகளுக்கு
பதில் சொல்ல முடியவில்லை

மனித வர்க்கத்தின்
மாற்றான் தாய்ப் பிள்ளை
மந்தைகளாய் வசிப்பிடமோ
மரணத்தின் மறு எல்லை

அயல்நாட்டு வெறியர்களின்
அச்சுறுத்தல் கொஞ்சமில்லை
அநியாயத்தினை தடுத்திடவும்
அரசுக்கு துணிச்சல் இல்லை

உருவாகும் கடல் சீற்றத்தால்
உழைப்பும் நிரந்தரமில்லை
உயிருக்கு மட்டும் என்றும்
உத்தரவாதம் துளியுமில்லை

வறுமையால் எப்போதும்
வாடுகிறோம் இது உண்மை
வசந்தமும் நிம்மதியும்
வாழ்நாளில் கண்டதில்லை

வாழ்வாதாரம் முழுவதுமே
வற்றியதால் வளமுமில்லை
வாழ்வதற்கு இனி வேறு
வழி தேடும் அவலநிலை

# மகேஸ்வரி கிருஷ்ணசாமி

இராஜபாளையம்

வெண்சங்கும் சிப்பிகளும் நிறைந்த கடற்கரையிலே
சிற்றில்கட்டி விளையாடி மகிழ்ந்தனரே பரத்தைதோழிகள்
ஊதைக்காற்றால் குவிந்துகிடந்த மணற்குன்றில் மாலையணிந்த
தோழியருடன் புன்னைமலர்சூடிய அழகுத்தலைவி
சிற்றில்கட்டி விளையாட அவளை ஆவலுடன்
காணவரும் தலைவனை என்தாய் பார்த்தால்
என்னைக்காவலில் வைப்பாளேயென
அச்சம்கொள்கிறாள் அழகுப்பதுமை

தலைவனை நினைத்து வருந்தும் தலைவி
வெண்முத்துமணலில் தன்வளைகரங்களால்
வட்டங்கள் வரைகிறாள்
வாட்டத்தைப்போக்க மணல்வட்டம்
இணைய வேண்டுமென
அவள் பேதைமனம் பதறுகிறது

பரதவர் உலற்றும் மீன்களின் புலவுநாற்றத்தை
சேரியை அடுத்து மலர்ந்துள்ள புன்னைமலர்களின்
நறுமணம் போக்குகிறது

பரதவனின் மகளான தலைவி நெல்லரிசியாலான
வெண்சோற்றின் மீது அயிலைமீன் புளிக்கறியைச்
சொறிந்து மீன் கருவாட்டுப் பொரிக்கறியுடன்
சமைத்த சுவையான உணவை உண்ணத்தருவாளே

தலைவனின் பிரிவால் தவிக்கும் தலைவி
கடலிடம் கேட்கிறாள் கடலே ஓயாமல்
அலைகளைவீசி கரையிலுள்ள தாழம்பூக்களை அலைக்கழிக்கின்றாய்
இரவுமுழுவதும் அலைகளின் ஓசை காதுகளில் ஒலிக்கிறது

நீயார் மீது காதல்கொண்டு இத்துன்பப்படுகின்றாய்
இடைவிடாது என்மனத்திலும் துன்ப அலை வீசிக்கொண்டிருக்கிறது
எனக்கும் உனக்கும் தலைவனைப்பிரிந்து வாடுவதில்
என்ன ஒற்றுமையென நினைத்து வேதனைப் பெருமூச்சு விடுகிறாள்

சிந்தனைச் சிகரம், கவித்தென்றல், கவிதாயினி
## இரா. இரமணி இராஜகுமார்
சேலம் மாவட்டம்

கடலும் கடலும் சார்ந்தது நெய்தலே

மண்வாசனை நிரம்பிய நெய்தலே
மனதை கவர்ந்த நெய்தலே
மழைநீர் கடலை சேர்ந்த இடமே நெய்தலே
மீன்வாசனை நிரம்பிய நெய்தலே
மணற்பகுதி நிரம்பிய நெய்தலே
மணலாலே மழை நீர் உறிஞ்சப்படுவதும் நெய்தலே

பொய்மையில்லா மனிதர்கள் உள்ள நெய்தலே
அன்பு நிறைந்த நெய்தலே
அகிலமும் போற்றும் நெய்தலே
தண்டு துழாவுதல் வலைநேர்தல்
சங்கு அரித்தல் மீன் தீய்த்தல்
இறால் சேர்த்தல் சிறப்பாக செயல்படும்
இடம் நெய்தலே

கடல் தாய் அவர்கள் வணங்கும் கடவுளே
ஊருக்குப் பொதுவாய்
குதிரை மீது கம்பீரமாய்
குட்டியாண்டவரே ஆழ்குகை
அளவிற் பெருத்த பேரகல் ஒளி
இவர்களின் கடவுளே சிறப்பான நெய்தலே

நேர்த்திக் கடனாய்
திமிங்கலத்தின் தாடைகள் சிறந்த நெய்தலே
காதலர் இணையுமிடம் நெய்தலே
இருமனங்களையும் இணைப்பது நெய்தலே
ஒன்று சேர்ந்து இன்புற்று வாழ்வதும்
நெய்கிறதும் நெய்தலே நெய்தலே நெய்தலே

வாழ்க நெய்தல் சிறப்பு
வளர்க நெய்தல் வாழ் மக்களின் ஒற்றுமை
வெல்க நெய்தல் நிலத்தின் பெருமைகள்

# கவிஞர் கு. அம்சா

பெரம்பலூர்

மீன்களும் நண்டுகளும் விளையாடும் லோகமே
வானைக் காட்டும் பூமிக் கண்ணாடியே
உயிர்களை முந்திக் கொடுத்த ஆழிக்கடலே
பெரு நிலத்தை துண்டித்து பிரித்தாய்

பின்னர் ஏழு கண்டங்களாக்கி கொடுத்தாய்
உன்னைச் சார்ந்தது எல்லாம் நெய்தல்
அந்நிலத் தொழிலோ கடலோடி மீன்பிடித்தல்
செயற்கை நுழையாத அகன்ற விளைநிலம்

நீ விதைக்காமலே விளைச்சல் தரும் கற்பகவிருட்சம்
குறிஞ்சி முல்லை மருத நிலங்களில்
தலைவனும் தலைவியும் அருகிருந்து உழைத்திருக்க
உன்னில் தலைவன் அலைகடல்மீது செல்ல

தலைவி அதன்கரையில் அவஸ்தையில் காத்திருப்பதேனோ
உப்பைத்தன் வசமாக்கி நன்னீராவியாக்கும் தியாகத்திடலே
நின் ஒழுக்கமாம் வைகறையும் எற்பாடும்
வரையப் படாத அழகோவிய சிறுபொழுதுகள்

ஆறுகள் மணல்துகளோடு உன்னில் சங்கமிக்கவே
தொல்காப்பியன் பெருமணல் உலகம் என்றழைத்தானோ
மனிதனின் முதல் போக்குவரத்து களமாதலால்
திரைகடல் ஓடியும் திரவியம் தேடென்றான் தமிழன்

சரி! எம் தமிழ்மீது உனக்கும் அவ்வளவு காதலா
முன்னிரண்டு சங்கங்களையும் உள்வாங்கி கொண்டாயே
தமிழை உண்ட நீ வாழ வைக்காமல்
சுனாமியால் மனிதனின் வாழ்வை அழித்தாயே

மகத்துவம் நினதே மாயவனின் உறைவிடமே
அலைகடலாய் அகிலமெங்கும் ஆனந்தம் விளையாட
கடல்தாயே கட்டவிழ்ந்து விடாமல் கருணைக்காட்டு

# வர்ஷினி

மாரிக்காலம் வந்தாலென்ன மழையற்றுப் போனாலென்ன
தவளைகள்  வாழும் தட்டாது பூமி
சோதனைகள் வந்தாலென்னே சோரமும் போனாலென்ன
கடலென்ற அருளோடு கைவிடாது சாமி

மூழ்கிப் போனாலும் மூச்சடைக்காது மீனுக்கு
வளைய விட்டாக்கா வாழ்வில்லே நண்டுக்கு
நெய்தலில் நாங்களும் மீளாமக் கெடக்கிறோம்
சமுத்திரத்துல பிணைஞ்சி சத்தியமா வாழுறோம்

கடலுக்குள்ள எறங்கிட்ட நாவாய்க்கு என்னைக்கும்
கரையேற்றம் என்பது என்னைக்கும் இல்லே
வலையோடு வாழுற எங்களுக்கு என்றும்
கடலைத் தாண்டியொரு வாழ்வேதும் இல்லை

புயல்காத்து வந்து புடம்போட்டுப் போகுது
எஞ்சிய நாட்களுக்குள்ளே எமன்கை நீளுது
துப்பாக்கிச் தோட்டாவும் தொட்டுவிட்டுப் போகுது
துயரமும் எங்களை பாரமாய்ச் சொமக்குது

உப்புக்கடல் முள்ளாச்சி வாழையிலை வாழ்வாச்சி
வாக்கத்து வீழ்வதுவே வாழ்வோட நெலையாச்சி
தண்ணியத் தாண்டி தப்பியோடத் தெரியாது
மூழ்கியே போனாலும் மீன்மூச்சுத் தொலையாது

துயரமொன்னு துயரமானா என்னான்னு சொல்வீங்க
ஏடெடுத்து பார்த்தாலும் இல்லையின்னு சொல்வீங்க
எங்கநெல அதுபோல எதுவுமே பொருந்தாது
வாழ்வோடு நெலமைக்கு வருத்தமேதும் சொமக்காது

கண்துஞ்சா கலங்கரை வெளக்கெரிஞ்சி இருந்தாலும்
கருணையற்ற கடவுளினாலே கரையேறா கிடக்கிறோம்
பிறவிப் பெருங்கடலை படகுகளில் கடந்துக்கிட்டு
பிரிவுத் துயரினையே இரவினிலே காணுகிறோம்

நெய்தலை நெகிழியால் நிந்திக்கவும் வேண்டாம்
நெருப்பாய் வாழ்வு கொள்ளவும் வேண்டாம்
இனியொரு விதியை செய்வோம் மனிதா
நெய்தலைக் கெடாமல் காப்போம் தமிழா

## கே. ஜே. சாதிக்

கடலலை மீதில் ஆடும்
கலமதில் வாழ்க்கை ஓடும்
படகினில் சென்று வீசும்
பழுதறு வலையில் சிக்கும்.
முடமிலா விலாங்கு மீனும்
முத்தினை விழுங்கி வாழும்
தடமிலா நீரின் மேலே
தவழ்ந்திடும் துரும்பைப் போல.

திடமுடை எயினர் எல்லாம்
திக்கிலா பயணம் செல்வர்
மடமகள் எண்ணம் என்றும்
மயங்கியே கரையில் வாடும்
குடத்தினில் விளக்கைப் போல
குலமகள் தனது அன்பை
முடக்கியே வைத்தி ருப்பாள்

மடலினில் ஆடும் அன்றில்
மாசறு அன்பில் தேம்ப
இடப்புற இதயம் அங்கே
இசைத்திடும் பிரிவின் ராகம்
சடலமாய் தலைவி வாட
சிந்தனை அவனில் வைத்தாள்
சுடலையின் நீறு காக்க
சுந்தரி காத்து நிற்பாள்

விடலையின் ஆற்றல் கொண்டு
விலையிலா முத்தை பெற்றோம்
கடவுளைப் பணிந்து நாளும்
கடலினைக் கடைந்து வந்தோம்..
விடமறு பவளந் தன்னை
விரும்பியே எடுத்துத் தந்தோம்
நடமாடும் தெய்வம் எங்கள்
நாயகன் வாழ்க வாழ்க

# பாலை

முன்னுரையும் வாழ்த்துரையும்..

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி" எனத் தமிழ் இனத்தின் தொன்மையையும் வீரத்தையும் விதந்து பேசும் வரிகள். அதற்கு சான்றாக இன்றும் பல சான்றுகள் (ஆதிச்ச நல்லூர், கீழடி) தொல்லியல் ஆய்வுகளில் வெளிப் பட்ட வண்ணம் உள்ளன.

தமிழர்களின் பண்பாட்டுச்சிறப்பை சொல்லும்போது அவர்கள் வகுத்துக்கொண்ட திணைக்கோட்பாடு பெரிதும் போற்றப்படுகிறது. இயற்கையை வழிபட்டத் தமிழர்கள் பின்னர் தங்களைக் காத்த மாவீரர்களை, வீராங்கனைகளை வழிபடத் தொடங்கியது திணைக்கோட்பாடு உருவான காலத்தில்தான்.

அகம் புறமென்றும், அறம் பொருள் இன்பம் என்றும் தாங்கள் வாழ்ந்த நிலப்பரப்பை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பிரித்தனர். பாலைக்குத் தனி நிலம் இல்லை.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பிழந்து நடுங்கும் துயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" என்பது சிலம்பு.

முகநூல் குழுமங்களில் தமிழ் அடையாளம் , வாழ்வியல் போன்றவற்றில் கவியுலகப் பூஞ்சோலை ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளதை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நடத்தப்பட்ட கவியரங்க அமர்வுகள் மூலம் தெற்றென விளங்கியது.

இப்போது குறிஞ்சி நிலமான ஏற்காட்டில் தமிழரின் திணைக்கோட்பாட்டின் சிறப்பை எடுத்துரைக்கும் விதமாக ஐந்திணைகளை பாடுபொருளாக கொண்டு கவிஅமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாலைத்திணை குறித்து ஓர் அமர்வு என் தலைமையில்.

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைத்திணையின் பண்பு. அதை பொருள்வயின்பிரிவு என்கிறது இலக்கியம்.

ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, அக நானூறு.. அகநானூற்றில் பாதிப்பாடல்கள் பாலைத்திணைப் பாடல்களே.. ஆகியவற்றில் பாலைத்திணை பாடல்கள் உள்ளன. பாலைத்திணை ப் பாடல்களை அள்ளூர் நன்முல்லை, உகாய்க்குடி கிழார், மதுரை சீத்தலையார், ஓதலாந்தையார், பாலை பாடிய பெருங்கடுங்கோ போன்ற புலவர்கள் பாடியுள்ளனர். இவரகளில் ஓதலாந்தையார் பாலைத்திணையில் அதிகப் பாடல்களையும், பாலை பாடிய பெருங்கடுங்கோ பாலைத்திணை பாடல்களை மட்டுமே பாடியுள்ளனர் என்பது சிறப்பு.

இந்தப் பாடல்களில் பாலை நிலத்தின் வெம்மை, வறட்சி, வழிப்பயணத்தின் கொடுமை, அதன் மக்களான எயினரின் பயங்கரத் தோற்றம், அவர்களின் களவுத் தொழில் போன்றவை பாடப்பட்டுள்ளன. இருந்தாலும் அந்தக் கொள்ளையர்களிடம் அறவுணர்விருப்பதையும் காண்கிறோம்.

பாலையிலும் மழை பொழிவதைப்போல, பாலைவனத்திலும் சோலை இருப்பதைப்போலவும் களவுத் தொழிலில் காட்டும் அறம்.. எளியவரின் பொருள் கவராமை, புலவரைப் போற்றுதல், விருந்தோம்பல், ஈகையரைக் காத்தல் போன்ற பண்புகளை காத்திருக்கின்றனர்.

‘அன்னமிட்ட வீட்டில் கன்னமிடாதே’என்பது பழமொழி.

தமிழகத்தில் பாலைநிலம் என ஒன்றில்லை எனும் நிலைமாறி தமிழகமே பாலையாக மாறிடுமோ என அஞ்சும் நிலை. இப்போது பாலைத்திணைக் குறித்து பாடுதல் பொருத்தம்தான்.

பாலைத்திணை அமர்வுக்கு தலைமைப் பொறுப்பை எனக்களித்த கவியுலகப் பூஞ்சோலையின் நிறுவனர் திரு.நெப்போலியன் அவர்களுக்கும், அவரின் தமிழ்ப் பணிக்கு உதவும் தென்றல்கவி, உஷா பார்த்தசாரதி, நிறைமதி நீலமேகம், விஜயலட்சுமி மற்றும் பிற நிர்வாகிகளுக்கும், பாலைத்திணையில் கவிபாடும் கவிஞர்களுக்கும் நன்றிகள்.

**சக்திஅருளானந்தம்,**
சேலம்.

# ஞால ரவிச்சந்திரன்

நதியில் நாளும் நறுமண நன்னீர்
பொதிகைத் தென்றல் புதுமணம் வீசும்
புதுப்புது மலர்கள் சூடும் கேசம்
பதியைக் கூடி புணர்ந் தக்காலம்

அலையெனக் கூந்தல் அழகிய குறிஞ்சி
சிலையென நானென் துணையுடன் இருந்தேன்
மலையென உயர்ந்தவென் மார்பகந் தன்னில்
கலைவிளை யாட்டு களிபுரிந் திருந்தானே

காலப் பெறுவளி கரைத்ததென் வாழ்வினை
சீலம் முழுவதும் சீர்கெட லாயின
குறிஞ்சி முல்லை கோலம் மாறியே
நெருஞ்சி முள்ளாய் என்நிலை போனது

கட்டிய காதலன் கைவிட்டுப் போயினன்
கட்டுடல் மேனியோ மெய்கெட்டுப் போனது
பருவமேனி வறண்ட பாலையாய் மாறிப்போனது
உருவங் குலைந்தது; ஓவியங் கலைந்தது

என்நிலை போல எத்தனை மகளிர்
இந்நிலம் உளரோ இதனைக் கேளீர்
காலம் மாறும் ;குறிஞ்சி முல்லையாய்
பாலையும் ஓர்நாள் பார்வையில் மாறும்

மேற்குச் சேற்றில் மூழ்கிய சூரியன்
கிழக்கு வயலில் கீற்றாய் முளைப்பான்
தோன்றின மறைவதும் துவண்டன துளிர்ப்பதும்
யாண்டும் இங்கே இயற்கை நிகழ்ச்சிதான்

பாவை என்நிலையது பாதியில் வந்தது
பாலை என்நிலமதில் பனிமழை பொழியும்
சோலை மலரும் சோர்வும் தீரும்
காலைக் கதிரவன் கண்விழிப் பானே !

# கவிதா அசோகன்

திருச்சி

ஐவகை நிலங்களை ஐந்திணை என்றோம்
ஐயங்கள் நீக்கிட வரைமுறை வகுத்தோம்
மணலும் மணல் சார்ந்த நிலமும் பாலையென்றோம்
மகிழ்வு தேடும் மக்களின் வரலாறு அறிவோம்

குறிஞ்சி முல்லை பாழாகி பாலையானது
காடழிந்து மலையழிந்து மணல் உருவானது
வெப்ப மிகுதியில் வறட்சியின் பிடியினில்
வெந்து தணிந்த மக்களின் வெறுமை பூமியிது

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளுமென்று
பகர்கின்றது சிலப்பதிகாரம் பாங்குடன் உரைத்தேன்

பாலையின் தெய்வம் கொற்கைக் கடவுள்
பறந்து திரிவது பருந்தும் கழுகும்
உழிஞை ஓமை இலுப்பை மரங்களுண்டு
மராம்பு மலர்கள் விரிந்து கிடப்பதுண்டு

விடலை காளை மறவர் மறத்தியரென
வாழும் மக்களை வகையாக அழைத்திடுவர்
வழிப்பறி சூரையாடுதல் களவு குலத்தொழில்
வற்றும் நீர்வளம் கிணறுகளே ஆதாரம்

பாலையாழ் இசைக்கருவி குறும்பெனப்படுவது ஊர்ப்பெயர்
பாலைப்பறை துடி பாலைப்பண் பஞ்சுரம்
ஆடல் பாடலுண்டு அழுகையும் கொஞ்சமுண்டு
நிலப்பிரிவும்..நிசப்பிரிவும் கடினவாழ்வும் இங்குண்டு

வளமழிந்த பாலைகள் சோலைகளாய் மாறட்டும்
வரமளிக்கும் கொற்றவையின் அருளது நிறையட்டும்
புரட்டாசித் திருவோணம் கொற்றவைக்கு திருநாள்
புரட்சியால் நாம்செய்வோம் தினம்தினம் பெருநாள்

# சுதா பிரபாகரன்

குமாரபாளையம்

என் காதல் யாரறிவார்
என் சோகம் யாரறிவார்
எனக்கென தூது யார் செல்வார்
எனக்கென பரிந்து பேச யார் வருவார்

என் அழகு இளமையெல்லாம்
உன்னாலே கூடி உன்னாலே அழிந்ததே
உன் மீது பாசம் மலை போல
குவிந்து மண் போல சரிந்து வீணாணதே

நீயும்நானும் உறவாட உயிர்த்தெழுந்த கோட்டை
நீயின்றி வெடித்து தகர்த்து விழுந்ததே
மாஞ்சோலை பூஞ்சோலையாயிருந்த என் மனது
பாலை நிலமாய் கேட்பாரின்றி கிடக்கிறதே

பூப்பூத்து மணமெழுப்பும் பூங்கொடி
படர தடமின்றி வாடி துடிக்கிறதே
இனியும் துளிர்குமோ இனியும் பிழைக்குமோ
உன் நினைவாய் கடைசியாய் இருக்கிறதே

கண்டும் காணாமல் என்னைக் கடந்துபோகாதே
உன் நிழல் தீண்டாமல் என் உயிர் வாழாதே
என் காதல் ஊரறியும் உன்னைத் தவிர
என் சோகம் உலகறியும் உன்னைத் தவிர

அறிந்து வா காதலனே
விரைந்து வா காதலனே
கன்னியிவள் கரம் பிடிக்க
மூன்று முடிச்சிட்டு
உன்னோடு என் வாழ்வு முடிக்க

# கவிஞர் சாந்தி திருநாவுக்கரசு

மதுரை

காடன்றி மலையன்றி கால்தடுக்கும் நிலமன்றி
கரையிருக்கும் மணல் நிலமாய்
பாலையென்று பெயர் தாங்கி
ஐவகையின் நிலத்தினுள்ளே
கடைநிலையாம் பாலையிவள்

சுரம் கண்டோம் இசையன்று
சுரம் தந்த இடம் கண்டோம்
அசைவற்று படர்ந்தாளோ காதல் கொண்டு
மணலாக பாலையிவள்

காளையென்ற களம்தாங்கி
விடலையென்ற விதையூன்றி
வாழும் மக்கள் போற்றும்
தெய்வம் கொற்றவையாம் பாலையிவள்

பருந்து கழுகு பறந்து திரியும்
உமிழிபாளை வளர்ந்து செழிக்க
பஞ்சரத்தின் பண்ணிசைத்து
சூறையாடி ஆறலைத்து
வழிமறித்து வயிறு வளர்த்து
வாழ்வு கொண்ட பாலையிவள்

வாரிநீரும்தான் சுமந்து மலராக  மராம்பூ
சூடித்திளைத்த பெண்டிருமே
பெருங்களிப்பில் மனம்குளிர
வறண்டதொரு களமாக
மணல் சுமந்த நிலமாக
கண்ணுக்கெட்டும் தூரம்வரை
கனல் தொடுக்கும் பாலையிவள்

பாலைவனத்தில் சோலையுண்டு
தாகம் தீர்க்கச் சுனையுமுண்டு
கள்ளி முளைத்துக் கண்நிறைத்தே
கடக்கும் தேகம் களைப்படைய
விண்ணும் கொஞ்சும் பேரழகில்
மனம் நிறைத்த பாலையிவள்

# கவிஞர் வ. வரதராஜன்

மதுரை

ஐவகை நிலங்களுள் ஒன்றாக ஆனாய்
கொற்றவையை கடவுளாகக் கொண்டாய்
எல்லாமும் ஒரு நன்மைக்கே என்றார்
போல் உன்னாலும் எப்படி இருக்கிங்க பலன்கள் உண்டு
குரவ மலருக்கு வாழ் வழித்தாய்
இலுப்பை மரத்தை வளர வைத்தாய்
பாலை மணலை மண்ணாகக் கொண்டாய்
வலியிலந்த யானைக்கு வாழ் வழித்தாய்
சவாரி செய்ய ஒட்டகத்தை
வளர வைத்து வாழ  வைத்தாய்
சப்பாத்திக் கள்ளியை வளர வைத்தாய்
பருந்துக்கு உறைவிடத்தை நீ கொடுத்தாய்
வழிப்பறியை மக்களுக்கு தொழிலாகக் கொடுத்தாய்
வற்றிய சுனையில் நீர் அளித்தாய்
அதை எல்லோருக்கும் பகிர்ந் தளித்தாய்
ஏழிலைக் கள்ளியை வளர வைத்தாய்
அதனைக் கரும் பலகையாய் செய்து
கல்வி அறிவைக்  கற்றுக் கொடுத்தாய்
உடலுக்கு வலிமை தரும் இரும்புச்சத்திற்கு
நீயும் விதை கொடுத்தாய்
பேரீச்சம்பழ மரத்தால் பேரீச்சம் பழத்தை
அளித்து இரும்புச் சத்திற்கு விதையானாய்
பயிர் விளையா நிலமாக ஆனாலும்
பல நன்மைகள் விளையும் பூமியாக உள்ளாய்
உன்னாலும் நன்மை உண்டு
ஆகையால் தானே தமிழன் உன்னை
ஐவகை நிலங்களுள் ஒன்றாகப் பிரித்துள்ளான்
தமிழன் தான் அறிவியல் முன்னோடியாயிற்றே

# முனைவர் மு. க. அனிதா

நானிலம் புகழ நானிலம் வலம்வர
நான் இல்லாத நிலமா
நறுக்கென்ற கேள்விக்கணையொடு
நட்பாய் தணலாய் தகித்தாய் அதனால்
பாலை எனும் பேருரு கொண்டாய்

உன்னை பாழ்நிலம் என்று
யார் சொன்னது நீ
மலையும் காடும் காதல் கொண்டதால்
பிறந்த பாசக்குழந்தை அவர்கள்
காதல் களவில் மலர்ந்ததால்
உன் நிலத்திலும் களவே அதிகம்

கொற்றவையை வணங்கினாய் விடலை
காளையைக் காதல் நினைவாய்ப் பெற்றாய்
வேனில் பின்பனி நண்பகல் என
பொழுதுக்கு கட்டுப்பட்டு நின்றாய்
பாலையாழாய் நின்று இசை மீட்டினாய்

பிரிவென்பதை உணர்த்த
பிரிதலை உரிப்பொருளாக்கி
பக்குவப்படுத்தினாய் மக்களை
நீரின்றி அமையாது உலகு நிலம்
நீயின்றி முழுமை பெறாது
தனிநிலம் இல்லை என்று தத்தளிக்காதே
தனியழகு என்றும் உனக்கு உண்டு இனி
தவிக்காதே வாகைசூடி வலம் வருவாயாக

# கவிதாயினி எல்லம்மாள்கிருஷ்ணமூர்த்தி

செய்யூர், காஞ்சிபுரம் மாவட்டம்

வெடித்துக் காணும் விளைநிலங்கள்
விழுந்து போன விவசாயம்
அடித்து வாழும் தரகு தொழில்
அணைத்துமிங்கே பாலையாகும்

கல்லிலும் நீர்சொரிந்து
உயர்காவியமான நாட்டில்
கல்நெஞ்சக்கார்களின் சிவகாசி
கருநெஞ்சே பாலையாகும்

பெண்மையை பெருமை செய்தேயாரதி
பேரேட்டிலே ஒளிரவைத்தார்
வன்மர்கள் மறந்து இன்று
வதைக்கும் கயமையில் பாலையாச்சு

சகாராவும்பூ பூக்கும்
இயற்கை சமத்துவமாய் யோசிக்கும்
சகமனிதனின் வாழ்வழிக்கும்
சண்டாளனும் பாலையாகும்

வறியவர் ஏங்கிடவே பார்த்து
வக்கணையாய் உண்பான்
சிறிதென ஏதும் செய்யார்
சிற்றுணர்வான் பாலையாவார்

முதுமையில் நலிந்திருக்கும் பெற்றோர்
முகம் காணா தவிக்கவிடும்
புதல்வனும் பாலையாவார்

அறிவுறும் கல்விச்சாலை இன்றி
அரிதொரு ஊர் இருக்கும்
பெரும்ஆர்வலர் போர்வையிலே
அலைபவர் பாலையாவார்

# இரெ மோகனகவி

சென்னை

நீண்ட
நெடுந் தொலைவு
நெருங்கி நிற்கும்
மணல் வளைவு

அனல் வீச
அழும் காற்று
மணல் பேசும்
சற்று முகம் பார்த்து

மின்னிபோகும்
வெயில் மேகம்
தங்கமேனி
எங்குமாகும்

ஒட்டகமும்
ஊர்ந்து போகும்
ஒய்யார நடையினிலே
ஓய்வறியா காற்றும்
அங்கு உறவாகி போகுமே

கானல் நீரும் அங்குண்டு
கண்ணில்நீரும் வருவதுண்டு
தாகம் தீர்க்க நீருமில்லை
தவிப்புக்கு உதவ யாருமில்லை

அணுகுண்டு சோதிக்க இடமுண்டு
சோதித்த பின்னே இந்தியா
என்ற பெருமை மிளிர்ந்ததுண்டு

## விமலா கோவிந்தராசு

புல் முளைத்திடா மணல் பரப்பு
கால் புதைந்திடும் நிலப் பரப்பு
சுட்டெரிக்கும் சூரியன் காட்சித்தர
சுருக்கென்று வெயில் சுட்டுப் போக

கொற்றவைத் தெய்வமது அங்கு குடியிருக்க
அதை கும்பிட்டு வாழ்ந்த மக்கள்
விடலை இனமும் காளை இனமும்
மறவர் இனமும் மறத்தியர் இனமுமே

நீரின்றிப் போன பாலையிலே வாழ்ந்திட
நிழல் இன்றிப் போயினும் கூட
கழுகும் பருந்துமே வாழ்ந்து வந்ததே
பாலை எங்கள் வாழ்விடம் என்றே

மண்ணிலே ஈரமின்றிப் போனாலும் கூட
மழை வந்து கொட்டிடாமல் போனாலும்
மார் தட்டி மணம் வீசி
மலர்ந்து நிற்கிறதே மராம்பு மலர்

மரங்கள் உழிஞ்சியும் பாலையும் இரும்பையும்
உயர்ந்துதான் நிற்கிறதே உயிரைப்பிடித்துக்கொண்டு
எங்கள் உறைவிடம் இதுவல்லவோ என்று
இதமாகக் கூறி இன்னிசைப் பாடின

உழைத்திட வழியின்றிப் போன மக்கள்
உயிர்வாழ வேண்டியே தவறென்று அறியாமல்
வழிப்பறியும் சூறையாடலும் செய்து விட்டு
பாலைவன தொழிலென்றே பறைசாற்றிப் போயினரே

# அ. பாலசுப்பிரமணியன்

நிழலைவிட
வெயில்தான் நம்மைத்
திரும்ப வைக்கும்
திகைக்க வைக்கும்

பாலையின் பண்பும்
அவ்வாறே
அதிசயமே

பிரிவுத் துயரிலும்
பெரும் இன்பம் உண்டு
என்பதை உணர்ந்த
தலைவன் தலைவியரின்
உளக்கதை பாலை கூறும்

பாலைத்திணைப் பாடல்களே
பரிவு தரும்
பிரிவை நினைவூட்டி
வாழ்வைச் செதுக்கும்

ஒரேயொரு குறையுண்டு
வீர மறவர்களைப்
பாலைநில மக்களாகக்
காட்டிய கயவர் யார்

நாட்டைக் காக்கப் போராடும்
நல்லவர் கூட்டத்தை
ஆறலைக் கள்வர்களாய்
ஆக்கியது யார்

இந்தத் துயரம்தான்
பாலைத் துயரைவிட
பன்மடங்கு துயரம்

பாலை
பண்பட்ட உள்ளத்தை
படமாக்கும் இலக்கியத் திணை

# எஸ். வி. ஆர். மூர்த்தி

பெங்களூர்

நானிலம் கண்டோம் நன்னலம் கொண்டோம்
பூநிலம் காத்தோம் புவிநலம் சேர்த்தோம் உலகம்
யாவிலும் இல்லா திணை  செய்தோம்
யாதும் ஊரே!  யாவரும் கேளிர்

நிலமொடு ஐந்து கலந்த மயக்கமுலகம்
உலகமது உருள பிறந்த பொழுதெனுங்காலம்
நிலமதை பிரித்தே திணை நான்கென்றார்
வளமது திரிந்த மேடும் காடும் பாலையென்றார்

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
பொல்லா வெம்மையில் பொடி மணலாம்
சொல்லாக் கொடுமை சூழ்ந்திடும் பாலை
நில்லா நீர்மை நிலையா பசுமை

நீரதுயின்றி நிலமது கொள்ளும் வெப்பம் செடி
வேரதுகுன்றி பலமது நில்லாப் பாலை
நீரதுபோல உருவது தோன்றும் கானல்நீர்
உருஇல்பேய் ஊராத்தேர் நீளும் மாயை

எங்கெங்கு காணினும் மணல் தேசம்
கங்கு கரையிலா கனல் வாசம்
அங்கங்கே கள்ளியும் முள்ளும் சகவாசம்
நிற்க  நிழலின்றி நெளிந்தது கால்பாதம்

அகநானூறில் சரிபாதி இருநூறு சொல்லும்
ஐங்குறு நூறில் ஐந்தில் ஒரு பங்கும்
நற்றிணை நூறுயிரண்டு குறுந்தொகை தொண்ணூறு
கலித்தொகை முப்பத்தைந்தென
ஐநூற்றேழு பாலைப் பாக்கள்

வழிப்பறிக் கொள்ளையும் பறித்ததைத் தின்பதும்
தொழிலும் உணவாகும் குராமராப்பூ குவித்துக்
வழிபடுவர் துர்க்கை பஞ்சரப் பண்யாழ்
பிரிவும் பிளவும் பெருந்துயர் பாலை

## பா. சத்யா

ஒழுக்கத்தின் விழுப்பம் காண
பாலைத்திணையைப் படிக்க
ஐந்து திணைகளுக்குள்ளும்
துயரம் தரும் திணையிதுவே
துன்பத்தில்தான் இன்பம் என்று
சொல்லாமல் சொல்லும் திணை

குறிஞ்சியும் முல்லையும்
வளமாக இருந்தாலும்
இந்த வறண்ட பூமியையே
வகையாகப் பாடினர் புலவர்

இன்பத்தைவிடத் துன்பமே
இன்பம் தரும் புதுமை
பாலைத்திணை படித்தால்
பாழாகாது வாழ்வு

மீளும் வழிகளைச் சொல்லி
மிரட்டாமல் நமைக் காக்கும்
பருந்துப் பறவையை
தனதாக்கிய பாலை
பறந்த வாழ்வை
உணர்த்தும் பாலை

தண்ணீர் இல்லா தரையாக இருந்தாலும்
கானல் நீராய்க்காட்டும் மாயை
எத்தனை உயிர்கள் ஏமாந்திருக்கும்
ஏமாற்றம் மட்டுமே மாற்றம் தரும் என்பதை
இத்திணை தவிர எத்திணை கூறும்

வழிப்பறி கொள்ளையரை
வகையாகக் காட்டினாய்.
இன்றோ எல்லாத் திசைகளிலும்
ஆறலைக் கள்வர்கள்
அலைகின்றனர் அழுக்கு மனதோடு

# தமிழ் கவிஞன் ஞானக்கிறுக்கன்

வாழையடிக்கன்று வளர்வதுபோல்
உள்ளத்தின் உள்ளடியில்
உன் நினைவை வளர்த்தேனடி

பாலையில் பள்ளம்தோண்டி
சொட்டு நீர் கிடைக்குமென்று
சொட்டு சொட்டாக சேர்த்த நீர்
தொண்டையை நனைக்குமென்று

மண்தோண்டி மட்டையிலே
பொன்போல பெட்டியிலே
பொத்தி பொத்தி நீரெடுத்து
உன் நினைவை வளர்த்தேனே

குறிஞ்சி மலரில் மதுவுண்ட வண்டுகள்
மயக்கத்தில் நல்லாட்சி
மலரிலே மயங்கியதுபோல்

கிறு கிறுத்த கண்களுக்குள்
கிலுகிலுப்பை மூட்டி நீயும்
மண்டைக்குள் புகுந்துயென்னை
சண்டைக்கிழுக்கலாமா

மூளையில் உன்நினைவு
முளைத்தபோதெல்லாம்
நெய்தலும் செழித்தது
மெய்விழி சிளிர்த்தது
செழித்த உன்நினைவு
நிலைத்து நிற்பதற்கும்

உன் மாமனெனும் கொள்ளையன்
மறித்து உன் நினைவை
என்மனதிலிருந்து பறித்தபோது
நெய்தலெல்லாம் பாலையானது
பாலையும் செழிக்க பாவையுன்
பார்வைமட்டும் போதுமடி

போர்வைக்குள் புகுந்து நீயும்
போர்க்களம் நடத்தவேண்டாம் என்
வேர்வைக்கு விடையளித்து நீ
நேர்மையாக நடந்துகொண்டால்

பாலையும் நெய்தலாகி
பசுமையும் படர்ந்துவரும்
பைங்கிளியே பார்டி நீ
நானிழுக்கும் தேரடி

# என். ஜாகிர் உசேன்

பாலை நிலம் எங்கள் பாலை நிலம்
கொற்றவை வீற்றிருக்கும் பாழ் நிலம்

மறவரும் மறத்தியரும் கூடி வாழும் நிலம்
மராம்பு பூச்சூடி பெண்டிர்கள் கூடும் இடம்

எங்கும் பாலையும் இருப்பையும் சூழ்ந்திருக்க
வானில் பருந்தும் கழுகும் வட்டமடிக்க
வாழும் நிலம் எங்கள் பாலை நிலம்

இதனை குறிஞ்சி நிலமென்போரும்
சற்றே ஏமாந்து போவார்
இதனை முல்லை நிலமென்போரும்
ஏமாந்து போவார்

ஆங்காங்கே மலையிருக்க
வியந்தே போவார்
ஆங்காங்கே காடு இருக்க
பயந்தே போவார்
பாலைநிலம் நாங்கள் வாழும் நிலம்

காளையும் விடலையும் பஞ்சாயத்து செய்ய
இளவேனில் முதுவேனில்
பின்பனி பொழுதுகளும் கடந்தே போகும்

பாலைநிலம் எங்கள் பாலைநிலம்
கொற்றவை வீற்றிருக்கும் பாழும்நிலம்

# இரா. பாண்டியராஜன்

மதுரை

பட்டுப்போன கழனிகளும் பட்டாசாய் வெடிக்கயிலே
பள்ளம்மேடு பாராமல் பாலைவனமாய் காட்சியளித்து
சூடான வெப்பத்தால் சுட்டெரிக்கும் காணுமிடமெங்கும்
பயனற்ற நிலமாய் பார்ப்போர்க்கு விருந்தளித்து!

பாலைநில சோலைகளும் படர்ந்தளவு விரிந்திருக்கும்
பாறைகளும் கற்களுமாய் வன்நிலமாய் உருவெடுத்து
மும்மாரி பொழியாமல் முப்போகம் விளையாமல்
வலிமை இழந்து வயதாகி நிறைந்திருக்கும்!

தற்காலிக பாலைவனமாய் தரணியிலும் வேரூன்றி
தண்ணீரும் இல்லாமல் தனிநிலமாய் நிமிர்ந்திருக்க
முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
பொழுதைச் சார்ந்து குணத்தைக் கொள்ளும்!

மானுடத்தின் அடையாளமாய் மணலுடைய நிலப்பரப்பை
ஐவகையில் ஒன்றாக்கி அற்புதங்களை தெய்தாலும்
இரு திணைக்கு இடையிலமைந்து இரண்டும் கலந்திடும்
வேனிலோடு வறட்சியுற்று பாலையாகப் பிளவுப்பட்டு!

சிவந்த மணலும் சித்திரமாய் காணயிலே
சுழன்றக்காற்றும் சூழ்ச்சியுடன் மிகுதியாக வீசிடுமே
ஆறலைக் கள்ளவர்களும் அடியெடுத்து வைக்கயிலே
ஆபத்துகள் கூடிடுமே வழிகளெல்லாம் முழுமையாக!

காடுகழனிகளை பெண்ணாக உருவகித்து உயிருட்டி
வேனிலோடு இருநிலங்கள் விளையாடி இருக்கயிலே
ஆற்றுமணலின் பரல்களும் சூடாகிப் பாணர்க்கு
இன்னல்களை இயல்பாக கொடுத்திடுமே பாலையிலே!

வழிநடையில் வந்தோரை வறுமைகளும் வாட்டயிலே
வழிப்பறிக் கொள்ளைகளும் வழக்கமாக நடந்திடுமே
மணலோடு மணலாக மானங்களும் விற்கப்பட்டு
மதிப்புகளும் குறைந்திருக்கும் வறட்சியோடு வந்தாடி!

கவியுலகப் பூஞ்சோலை

படைப்பாளிகள் உலகம்

ஏற்காடு - தமிழ்நாடு